பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 07 புதன்கிழமை (20.04.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :145

## புதிய பாப்பரசர் ஜேர்மனின் ஜோசப் ரட்சிங்கர்



### 6ஆவது பெனடிக்ற் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்தார்

வத்திக்கான்.ஏப்.20

புதிய பாப்பரசர் நேற்றுமாலை தெரிவுசெய்யப்பட்டார். ஜேர்மனியைச் சேர்ந்த கர்தினாலான ஜோசப் ரட்சிங்கர் 265 ஆவது பாப்பரசராகத் தெரிவானார் என்று வத்திக்கான் அறிவித்தது. பின்னர் சென். பீற்றர்ஸ் பஸிலிக்கா மாளிகையின் ஜன்னலில் தோன்றிய அவர் மக்களுக்கு ஆசீர்வாதம் அளித்தார்.

ரட்சிங்கருக்கு வயது 78. வத்திக்கான் வழக்கப்படி அவர் தனக்குப் பாப்பரசர் 6ஆவது பெனடிக்ற் என்ற பெயரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டதும், வத்திக்கான் நேரப்படி மாலை 6.00 மணிக்கு முதலில் தேவாலயத்தின் புகைக் கூண்டு வழியாக வெள்ளைப் புகை வெளியேற்றப்பட்டது. பாப்பரசரின் தெரிவை உறுதிப்படுத்தும் வகையில் தேவாலய மணியும் ஒலிக்கப்பட்டது.

இதனை அடுத்து தேவாலய முன்றிலில் கூடியிருந்த லட்சக்கணக்கான மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

சில மணி நேரத்தின் பின்னர் பாப்பரசராகத் தெரிவானவர் பற்றிய விவரத்தை வத்திக்கான் அதிகாரிகள் உத்தியோக பூர்வமாக அறிவித்தனர்.

புதிய பாப்பரசர் 6ஆவது பெனடிக்ற் வத்திக்கான் மாளிகை ஜன்னலில் தோன்றி அங்கு கூடியிருந்த மக்களுக்கு அருளாசி வழங்கினார். ஏனைய கர்தினால்கள் புதியவருக்குத் தமது பாராட்டுதல்களைத் தெரிவித்தனர்.

ஜன்னலில் தோன்றிய புதிய பாப்பரசர் மக்களைப் பார்த்து எனதருமைச் சகோதர சகோதரிகளே! சிறந்தவரான பாப்பரசர் 2ஆம் அருளப்பர் சின்னப்பரின் பின்னர் கர்தினால்கள் என்னைத் தேர்ந்தெடுத்துள்ளார்கள். கடவுளுக்கு எளிமையும், அடக்கமுமாக ஊழியம் செய்யும் வேலையாள் நான் - என்று தெரிவித்தார்.

சிலி நாட்டு கர்தினாலான ஜோர்ஜ் அர்டுரோ மெடினா எஸ்டிவஸ் புதிய பாப்பரசரை மக்கள் முன் அறிமுகம் செய்துவைத்தார்.

"கடவுள் சிறப்பாகச் செயற்பட்டு போதுமான வழிமுறைகளில் என்னை ஆற்றுப்படுத்துவார். (16ஆம் பக்கம் பார்க்க)

# பொதுக்கட்டமைப்பை ஏற்குமாறு

# ஜே.வி.பியை அமெ. வற்புறுத்தும்!

## அக்கட்சியின் மூத்த தலைவர்களை இன்று நேரில் அழைத்து வலியுறுத்துவார் ரொக்கா

கொழும்பு. ஏப்ரல் 20

**ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னரான நிவாரண மற்றும் மீள்கட்டுமானப் பணிகளுக்காக அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் ஏற்படுத்திக்கொள்ளவுள்ள பொதுக்கட்டமைப்புத் தொடர்பிலான விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வதற்கும் இத்திட்டத்திற்கு இணங்குமாறு ஜே.வி.பியினருக்கு அழுத்தமொன்றை வழங்குவதற்குமாகத் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்கா இன்று காலை கொழும்பில் ஜே.வி.பியின் முக்கியஸ்தர்களைச் சந்திக்கிறார்.**

உத்தேச பொதுக்கட்டமைப்பை முற்றுமுழுதாக எதிர்ப்பது என்ற கட்சியின் (ஜே.வி.பியின்) நிலைப்பாட்டை எக்காரணம் கொண்டும் மாற்றப் போவதில்லையென்று ஜே.வி.பியின் அரசியல் குழு நேற்றுமுன்தினம் கூடித் தீர்மானித்துள்ள நிலையில் இந்தச் சந்திப்பு இடம் பெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று காலை பதினொரு மணிக்கு இந்தச் சந்திப்பு கொள்ளுப்பிட்டியிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இடம்பெறும்.

ஜே.வி.பியின் சார்பில் அக்கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, அமைச்சர் விஜித்த ஹேரத், நாடாளுமன்ற உறுப்பினர் நந்தன குணதிலக ஆகியோர் இந்தப் பேச்சில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தச்சந்திப்பில் ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ஸ பங்குபற்றமாட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்குக்கு நேற்று ரொக்கா விஜயம்

கல்முனைக்குடி.ஏப்.20

அமெரிக்க வெளியுறவுத்துறையின் தெற்காசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான இராஜாங்க உதவிச்செயலாளர் கிறிஸ்ரினா ரொக்கா நேற்றுக்காலை கல்முனை நகருக்கு விஜயம் செய்தார்.

அவருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதர் ஜியோப்றி லான்ஸ்டரும், அவரது குழுவினரும் வந்திருந்தனர்.

கல்முனை பாத்திமா கல்லூரி மைதானத்தில் விசேட ஹெலியில் வந்திறங்கிய ரொக்கா குழுவினர், அங்கிருந்து ஆழிப்பேரலையால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கல்முனை, கல்முனைக்குடி சாய்ந்தமருது, மாளிகைக்காடு, காரைதீவு போன்ற இடங்களுக்கு விஜயம் செய்து பார்வையிட்டனர்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் தாயகப் பகுதி எங்கும் நேற்று பூபதித்தாய்க்கு உணர்வுபூர்வ அஞ்சலி

தமிழ் மக்களின் விடிவிற்காக உண்ணா நோன்பிருந்து உயிர்நீத்த தியாக தீபம் அன்னை பூபதியின் 17ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் நேற்று மிகுந்த உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றன.

பிரதான இடங்களில் அமைக்கப்பட்டிருந்த விசேட பந்தல்களில் பூபதித் தாயின் திருவுருவப் படம் வைக்கப்பட்டிருந்தது. அங்கு அடையாள உண்ணாவிரதம், நினைவுரைகள், கலைநிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், போராளிகள், பொது மக்கள் எனப் ஆயிரக்கணக்கானோர் திரண்டு அன்னை பூபதித் தாய்க்கு உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்தினர். (02ஆம் பக்கம் பார்க்க)

### சிற்றூர்தி எரிப்பைக் கண்டித்து

## தனியார் மினிபஸ் சேவைகள் குடாநாட்டில் இன்று நடைபெறா

யாழ்ப்பாணம்,ஏப்.20

குடாநாட்டில் சிற்றூர்திகளின் அத்தியாவசியச் சேவைகள் தொடர ஆவண செய்ய வேண்டும் என்று கோரி யாழ். மாவட்டத் தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கங்களின் இணையத்தினர் தங்கள் சகல பிரதேசங்களுக்கான சேவைகளையும் இன்று நிறுத்தியுள்ளனர். இது தொடர்பாக விவரமான அறிக்கை ஒன்றை இணையம் விடுத்துள்ளது.

இருபாலையில் கடந்த சனிக்கிழமை நடந்த விபத்து ஒன்றை அடுத்து மினிபஸ் தீக்கிரையாக்கப்பட்டதும் -

அதைத் தொடர்ந்து கடந்த மூன்று தினங்களாக முகமாலைக்கான தனியார் சேவை இடம் பெறாததும் - தெரிந்ததே.

(16ஆம் பக்கம் பார்க்க)

# சொல்ஹெய்ம் மட்டக்களப்புக்கு விஜயம்

## பொதுக்கட்டமைப்பே அவசரம் என கேணல் பானு அவரிடம் வலியுறுத்து

மட்டக்களப்பு.ஏப்.20

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு பொதுக்கட்டமைப்பே இப்போது அவசரத் தேவையாகும் என்று வலியுறுத்தியுள்ளார் விடுதலைப் புலிகளின் மட்டு.- அம்பாறை மாவட்ட சிறப்புத்தளபதி கேணல் பானு.

நேற்றுத் தன்னைச் சந்தித்த நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் அவர் இதனைத் திட்டவட்டமாக எடுத்துக் கூறினார்.

ஐந்துநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள எரிக் சொல்ஹெய்ம் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார். கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிரட்ஸ்கரும் உடன் வந்திருந்தார்.

நேற்று முழுநாளையும் மட்டக்களப்பு மாவட்டத்தில் கழித்த சொல்ஹெய்ம் குழுவினர், பல்வேறு தரப்பட்டவர்களையும் சந்தித்துக் கலந்துரையாடினார்.

காலையில் இராணுவத்தின் 233 ஆவது கட்டளைத் தலைமையகத்தில் இராணுவ மற்றும் விசேட அதிரடிப்படையினரின் மாவட்டத் தளபதிகளைச் சந்தித்துப் பேசினார்.

கொக்கட்டிச்சோலை சோலையகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டு.- அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் பானுவைச் சந்தித்துப் பேசினார். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன், மாவட்டத் தளபதி ராம், (16ஆம் பக்கம் பார்க்க)



விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மை கிழக்கின் தளபதி கேணல் பானு கைலாகு கொடுத்து வரவேற்கிறார்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அன்னை பூபதி நினைவுப் பதிவுகள்



நல்லூரில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நினைவுரை ஆற்றுவதையும், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன் அஞ்சலி செலுத்துவதையும், நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: பிரபா)



வடமராட்சியில் நடைபெற்ற நிகழ்வுகளில் கடற்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் பொதுச்சுடர் ஏற்றுவதையும், வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் தேசியக்கொடி ஏற்றுவதையும், நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவநேசன் அஞ்சலி செலுத்துவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒருபகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: சி.சுந்தரலிங்கம், கரவெட்டிச் செய்தியாளர்)



தென்மராட்சியில் நடைபெற்ற நிகழ்வுகளில் அன்னை பூபதியின் திருவுருவப்படம் 'பாண்ட்' இசையுடன் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படுவதை முதல் இரு படங்களிலும், நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் பொதுச்சுடர் ஏற்றுவதையும், தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.ஈஸ்வரன் தேசியக்கொடி ஏற்றுவதையும் அடுத்துள்ள படங்களில் காணலாம். (படங்கள்: சாவகச்சேரிச் செய்தியாளர்)

## தமிழர் தாயக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

### வலிகாமத்தில்...

வலிகாமம், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கோட்டங்களைச் சேர்ந்த அமைப்புக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட நினைவு நிகழ்வு நல்லூர், முத்திரைச் சந்தியடியில் உள்ள கேணல் கிட்டு நினைவுப் பூங்காவில் இடம்பெற்றது.

காலை 9.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்விற்கு திருமதி சசிரேகா வரதராஜா தலைமை வகித்தார். பொதுச்சுடரினை யாழ். பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன், தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூ.சிறில், வலிகாமம் தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் சாம்பசிவம், ஐ.நாவின் மீள்குடியமர்வு அபிவிருத்தித் திட்டத்தின் யாழ். நகரப் பணிப்பாளர் சி.வி.கே.சிவஞானம், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறைநாதன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை நல்லூர்ப் பிரதேச மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூமகள் ஏற்றிவைத்தார்.

அகவணக்கம், மலரஞ்சலி என்பவற்றைத் தொடர்ந்து அடையாள உண்ணாவிரதத்தைத் திருமதி பத்மினி சிதம்பரநாதன் ஆரம்பித்து வைத்தார். தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன.

சிற்புரைகளை யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இளம்பிறைநாதன், யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, தமிழ்க் கூட்டமைப்பு நடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் ஆகியோர் நிகழ்த்தினர். தொடர்ந்து யாழ். கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தர் புலேந்திரராஜாவின் கவிதை, தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினரின் பாடல் என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் நிறைவாக தமிழீழ மாணவர் அமைப்பின் யாழ். மாவட்டப் பிரிவினால் அன்னை பூபதி நினைவுதினத்தை முன்னிட்டு, யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட விவாதச் சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டிக்குத் தெரிவான பாடசாலைகளுக்கிடையேயான போட்டி இடம்பெற்றது.

இப்போட்டியில் யாழ். மத்திய கல்லூரி அணி, யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆகியன பங்குபற்றின. அதனைத் தொடர்ந்து விவாதச் சுற்றுப்போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட அணிகளுக்கும் மாணவர்களுக்கும் கேடயம், வெற்றிக் கிண்ணம், சான்றிதழ், பணப்பரிசில் என்பன வழங்கப்பட்டன.

இரவு சிறப்புரைகளும், கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் பொதுமக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ். பல்கலைக்கழகத்திலும் நேற்று அன்னை பூபதி நினைவுதின நிகழ்வுகள் இடம்பெற்றன.

### வடமராட்சியில்...

வடமராட்சியில் நேற்று தியாகி அன்னை பூபதியின் 17 ஆவது ஆண்டு நினைவு நிகழ்வுகள் எழுச்சிபூர்வமாக நடைபெற்றன.

முற்பகல் 10 மணிக்கு அல்வாய் முத்துமாரி அம்மன் ஆலய கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச்சுடரினை யாழ். மாவட்ட கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அருணன் வடமராட்சி மாவீரர் துயிலுமில்லப் பொறுப்பாளர் தமிழரசன் ஆகியோர் ஏற்றினர்.

தமிழீழத் தேசியக் கொடியை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பன் ஏற்றிவைத்தார். ஈகைச்சுடரினை மேஜர் சோதிகாவின் தாயாரும் மேஜர் றோமின் தந்தையும் ஏற்றிவைத்தனர்.

அன்னை பூபதியின் திருவுருவப் படத்திற்கான மலர்மாலையை யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன், வடமராட்சி கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பழகன், வடமராட்சி மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் அன்பு ஆகியோர் அணிவித்தனர்.

போராளிகள், பொதுமக்கள் ஆகியோரின் மலரஞ்சலியை அடுத்து அடையாள உண்ணாவிரதம் ஆரம்பமானது.

தொடர்ந்து வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் துரை சத்தியசீலன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் சிறப்புரைகளை யாழ். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் ஆர்வலன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கி.சிவனேசன் உட்படப் பல பிரமுகர்கள் நிகழ்த்தினர்.

இறுதியில் பிற்பகல் 1.30 மணியளவில் உண்ணாவிரதிகளுக்குக் குளிர்பானம் வழங்கப்பட்டு உண்ணாவிரதம் முடித்துவைக்கப்பட்டது.

### கிளிநொச்சியில்...

கிளிநொச்சி மாவட்டத்தில் அன்னை பூபதியின் 17ஆவது ஆண்டு நினைவுதினம் எழுச்சி பூர்வமாக நினைவு கூரப்பட்டது.

கிளிநொச்சிப் பிரதேச நினைவுதின நிகழ்வுகள் கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி ஏற்றிவைத்தார்.

அன்னை பூபதியின் உருவப்படத்திற்கு ஈகைச்சுடரை ஓய்வுபெற்ற அதிபர் கனகரெட்னம் ஏற்றினார்; மலர்மாலையை லில்லி அம்மா அணிவித்தார்.

நினைவுரைகளை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர், கிளிநொச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர் பசுபதிப்பிள்ளை, ஆசிரியர் அபராஜிதன் ஆகியோரும் சிறப்புரையை ஆசிரிய ஆலோசகர் கணேசலிங்கமும் நிகழ்த்தினர்.

விசுவமடுப் பிரதேசத்தில் நினைவுதின நிகழ்வுகள் விசுவமடு மாவீரர் மண்டபத்தில் விசுவமடு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் வ.பத்மநாதன் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் தமிழீழத் தேசியக்கொடியை விசுவமடுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மு.சோழநிலவன் ஏற்றிவைத்தார். கருத்துரைகளை விசுவமடு தேசிய எழுச்சிப்பேரவைச் செயலாளர், பெண்கள் மேம்பாட்டு நிறுவனத் தலைவி திருமதி காசிநாதன் தேவாம்பிகை ஆகியோர் நிகழ்த்தினர்.

பரந்தன் பிரதேச நினைவு தின நிகழ்வுகள் பரந்தன் சந்தைக்கு அருகில் அமைக்கப்பட்ட விசேட பந்தலில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தலைமையில் இடம்பெற்றன. நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியைப் பரந்தன் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் க.ஈகைவீரன் ஏற்றிவைத்தார். பொதுச்சுடரை இரு மாவீரர்களின் தாயாரான ந.மகேஸ்வரி ஏற்றிவைத்தார்.

கருத்துரைகளை கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி, சாந்தபுரம் அ.த.க. பாடசாலை அதிபர் எஸ். ஆலாலசுந்தரம் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வில் பரந்தன், கோரக்கன்கட்டு பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர்களான நா.கீதாநந்தினி, நா.கௌரி ஆகியோரின் நடன நிகழ்வும் இடம்பெற்றன.

இதேவேளை-

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு வனவளப் பாதுகாப்புப் பிரசார விழிப்புணர்வுப் பிரிவின் மரநடுகைத் திட்டத்தின் ஆரம்ப வைபவம் நேற்று கிளிநொச்சி மத்திய கல்லூரியில் பாடசாலை அதிபர் ஆர்.இராசமனோகரன் தலைமையில் இடம்பெற்றது. இத்திட்டத்தின் கீழ் ஒரு லட்சம் மரக்கன்றுகள் வன்னிப் பெருநிலப்பரப்பு முழுவதும் நடுகை செய்யப்படவுள்ளன.

ஆரம்ப நிகழ்வில் பொதுச்சுடரை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஜீவராஜ் ஏற்றிவைத்தார். கருத்துரையை லண்டன் பல்கலைக்கழ சூழலியல் துறையைச் சேர்ந்த திருமதி செல்வரெட்ணம் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வு கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பழைய மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### தென்மராட்சியில்...

நேற்று இடம் பெற்ற அன்னைபூபதி நினைவு நிகழ்வில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலிருந்து அன்னை பூபதியின் திருவுருவப்படம் ஊர்வல பவனியாக கண்டி வீதி வழியாக எடுத்துச் செல்லப்பட்டது. சங்கத்தானை கந்தசுவாமி கோயில் வீதியில் அமைக்கப்பட்டடிருந்த விசேட பந்தலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நினைவு நிகழவுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பொதுச் சுடரினை யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழவேந்தன் ஏற்றினார். ஏனைய சுடர்களை க. அருந்தவபாலன், பிரதேசசெயலர் செ.ஸ்ரீநிவாசன், க.சந்திரசேகரா, மு.நாகேந்திரராசா, தென்மராட்சி மகளிர் பொறுபபாளர் கலைவாணி ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தேசியக் கொடியைத் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் ஈஸ்வரன் ஏற்றினார். தொடர்ந்து ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது. ஈகைச் சுடரினை மாவீரன கோபாலின் தந்தை கந்தையா ஏற்றி வைத்தார்.

மலர்மாலையைச் சர்வதேச மாணவர் பேரவைப் பொறுப்பாளர் கண்ணன் அணிவித்தார். தொடந்து அகவணக்கம், மௌன அஞ்சலி, மலர் அஞ்சலி என்பனவும் இடம்பெற்றன.

தென்மராட்சி தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க.சந்திரசேகரா, யாழ். பல்கலைக் கழக சமூகவியல்துறை பேராசிரியர் கலாநிதி க.சண்முகலிங்கன், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈழவேந்தன், யாழ் மாவட்ட எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூ.சிறில் உட்படப் பலர் நினைவுரை நிகழ்த்தினர்.

கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. நிகழ்வில் திணைக்களத் தலைவர்கள், அரச உத்தியோகத்தர்கள், கூட்டுறவு ஊழியர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பெண்கள் சிறுவர்கள் உட்படப் பெருந்திரளானோர் கலந்துகொண்டனர்.

### புதுக்குடியிருப்பில்...

புதுக்குடியிருப்பு மாவீரர் மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு வணிகர் சங்கத்தலைவர் அருள்நாதன் தலைமை வகித்தார்.

பொதுச் சுடரினை புதுக்குடியிருப்புப் பிரதேசப் பொறுப்பாளர் இறையாளன் ஏற்றினார். தமிழீழத் தேசியக் கொடியினைத் தமிழீழ மாவீரர் பணிமனைத் துணைப் பொறுப்பாளர் அர்ச்சனா ஏற்றிவைத்தார்.

ஈகைச்சுடரை முல்லைத்தீவு இலங்கை வங்கி முகாமையாளர் மயில்வாகனம் ஏற்றினார். அனனை பூபதியின் திருவுருவப் படத்துக்கான மலர் மாலையினைத் தமிழீழ வைப்பக முகாமையாளர் சுரேஸ் ஏற்றினார்.

நினைவுரைகளை வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சண்முகநாதன், வணிகர் சங்கப் போஷகர் பி.கந்தசாமி, கிராம சேவையாளர் சிவராஜா, இரணைப்பாலை தேசிய எழுச்சப் பேரவையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ஆகியோர் ஆற்றினர். இந்நிகழ்வில் போராளிகள், பொது மக்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

(த-12-7-30-31-70-86-117-202-203-204-301-352-353)

# சதாமின் மரணதண்டனைப் பத்திரத்தில் நான் ஒருபோதும் கையெழுத்திடமாட்டேன்

## ஈராக் புதிய ஜனாதிபதி பி.பி.ஸி செவ்வியில் அறிவிப்பு

ஈராக்,ஏப்.20

ஈராக் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மரணதண்டனைப் பத்திரத்தில் கையெழுத்திடமாட்டேன் என ஈராக்கின் தற்போதைய ஜனாதிபதி ஜலால் தலபானி அறிவித்துள்ளார்.

சதாம் ஹுசைனின் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனை வழங்குவதற்கான பத்திரத்தில் கையெழுத்திடுவது குறித்து வெளிநாட்டுச் செய்தி நிறுவனமான பி.பி.ஸிக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவரது செவ்வியில் அவர் தொடர்ந்தும் கூறியதாவது:-

சதாம் ஹுசைன் மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டால் மரணதண்டனை நிறைவேற்றுவதற்கான பத்திரத்தில் நான் கையெழுத்திடமாட்டேன்.

மரணதண்டனையை நான் கொள்கையளவில் எதிர்க்கின்றேன். எனவே, முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹுசைனின் மரணதண்டனைப் பத்திரத்தில் ஒரு போதும் கையெழுத்திடமாட்டேன்.

ஈராக்கின் தலைமைத்துவத்தில் மூவர் இருக்கிறோம். மரணதண்டனை குறித்து மூவருமே முடிவு செய்ய வேண்டும்.

கையெழுத்திடும் நேரம் வரும்போது நான் விடுமுறையில் சென்றுவிடுவேன். ஏனைய இருவரும் இணைந்து தீர்மானமொன்றை எடுப்பார்கள்.

புதிய அரசின் அனைத்து நிர்வாகிகளும், ஈராக்கின் பெரும்பகுதி மக்களும் சதாம் ஹுசைனை விரைவில் தூக்கிலிடவேண்டுமென விரும்புகிறார்கள். நான் மட்டும் அதில் வேறுபட்டு நிற்கிறேன் என்று அவர் கூறினார்.

அமெரிக்கப் படையினரின் பாதுகாப்பில் கைதுசெய்து வைக்கப்பட்டுள்ள சதாம் ஹுசைனையும் அவரது அரசைச் சேர்ந்த அதிகாரிகளையும் விசாரணை செய்வதற்குத் தனியான நீதிமன்றமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சுமார் இரு தடவைகள் விசாரணைகள் நடைபெற்ற போதிலும் பின்னர் பாதுகாப்புக் கருதி விசாரணைகள் நடைபெறவில்லை.

இந்த ஆண்டு இறுதியில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கும் சதாம் ஹுசைனின் விசாரணையில் அவருக்கும் அவரது ஆதரவாளர்களுக்கும் மரணதண்டனை வழங்கப்படும் என உறுதியாக நம்பப்படுகிறது.

இதேவேளை, புதிய ஜனாதிபதியாக தேர்தெடுக்கப்பட்டிருக்கும் ஈராக்கின் 71 வயதான ஜலால் தலபானி எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் நடுப்பகுதிக்குள் புதிய அரசியல் சட்டத்தை உருவாக்க வேண்டும்.

அதன் பின்னர் எதிர்வரும் டிசெம்பர் மாதம் மீண்டும் நாடாளுமன்ற தேர்தல் நடைபெறும் அதற்குமுன் சதாம் ஹுசைன் மீதான விசாரணை முடிவுக்கு வருவது சந்தேகமே என அதிகாரிகள் தெரிவித்தனர். (க-8)

# கொலம்பியாவில் சமர்: 20 பேர் உயிரிழப்பு!

டொகோடா,ஏப்.20

கொலம்பியாவின் தென்மேற்கு நகரான டோரிபியோவில் இராணுவத்தினருக்கும் கிளர்ச்சிவாதிகளுக்கும் இடையில் ஏற்பட்ட கடுமையான மோதலில் 18 கிளர்ச்சிவாதிகள் அடங்களாக 20 பேர் உயிரிழந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பொலீஸார் உளளிட்ட சுமார் 2 ஆயிரம் இராணுவத்தினர் இணைந்து நடத்திய இந்தத் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாயும், ஒரு பொலீஸ் அதிகாரியும் உயிரிழந்தனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ந்தும் தாக்குதல் நடத்திவரும் கிளர்ச்சிவாதிகளை முற்றாக ஒழிக்க கொலம்பிய அரசு போராடி வருகிறது.

கடந்த வியாழக்கிழமையும் இரு பிரதான நகரங்களில் கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

(க-8)

# லெபனானின் பிரதமராக நஜீப் நியமனம்

பெய்ரூட்,ஏப்.20

லெபனானின் புதிய பிரதமராக தொழிலதிபர் நஜீப் மிகாட்டி சனிக்கிழமை நியமிக்கப்பட்டாரென பெய்ரூட் செய்திகள் தெரிவித்தன.

49 வயதுடைய நஜீப், சிரியாவின் ஆதரவு பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக பதவிவிலகிய ஓமர் கராமெஹவும் சிரியா ஆதரவுடையவரே. இவரின் பதவி விலகலையடுத்து, லெபனானின் அரசியல் ஸ்திரத்தன்மை குலைந்துபோய் இருந்தது.

இதேவேளை, லெபனானில் தேர்தல் நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் வலியுறுத்திக் கோரிக்கை விடுத்து வருகின்றன. (க-8)

# நேற்றும் பாப்பரசர் தெரிவுக்கான கூட்டம்; முடிவுகள் இன்றி கரும்புகை வெளியேற்றம்!

## அடுத்த பாப்பரசர் யார் என்ற எதிர்பார்ப்போடு மக்கள் வெள்ளம்

வத்திக்கான்,ஏப்.20

உலகில் உள்ள 110 கோடி றோமன் கத்தோலிக்கர்களின் ஆன்மீகத் தலைவரை - பாப்பரசரை - தெரிவு செய்வதற்காக வேண்டி 52 நாடுகளைச் சேர்ந்த 115 கர்தினால்களும் இரண்டாவது நாளாக நேற்றும் ஒன்று கூடினர். நேற்றைய முதலாவது வாக்கெடுப்பிலும் எந்தவொரு கர்தினாலும் பாப்பரசராகத் தெரிவு செய்யப்படவில்லை. அதனைக்குறிக்கும் வகையில் கரும்புகை இரண்டாவது தடவையாகவும் வெளியேற்றப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு பங்குப் பெரும்பான்மை கிடைக்கவில்லை. பின்னர், வாக்குச் சீட்டுகள் எரிக்கப்பட்டு, சிஸ்டைன் தேவாலயத்தில் உள்ள புகைக்கூண்டு வழியாக கரும்புகை வெளியேறியது.

நேற்று அதிகாலை ஒன்று கூடிய 115 கர்தினால்களும் முழுநாள் வாக்குப்பதிவில் ஈடுபட்டனர். ஒரு நாளைக்கு சுமார் நான்கு முறைகள வாக்கெடுப்புகள் நடைபெறும். ஒவ்வொரு இரண்டாவது வாக்கெடுப்பு நடத்தப்படும் போது முதலாவது வாக்குச்சீட்டுகள் எரிக்கப்பட்டு புகை வெளியிடப்படும்.

புகையை நிறமூட்டுவதற்கு இரசாயனப் பதார்த்தங்கள் எரிக்கப்படும் வாக்குச்சீட்டுகளுடன் சேர்க்கப்படுகின்றன.

வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்பட்டார் என்றால், சென்.பீற்றர் ஆலயத்தின் மணி ஒலிக்கப்பட்டு, வெண்புகை வெளியேற்றப்படும்.

இச்செய்தி எழுதும்வரை புதிய பாப்பரசர் தெரிவுசெய்யப்படவில்லை.

புதிய பாப்பரசரைத் தெரிவு செய்யும் கர்தினால்களில் 58 பேர் ஐரோப்பாவையும் 20 போ இத்தாலியையும், 11 பேர் அமெரிக்காவையும் சேர்ந்தவர்கள்.

ஜி.எம்.ரி. நேரப்படி 7.30 மணிக்கு கர்தினாலகள் ஒவ்வொரு நாள் காலையும் ஒன்று கூடுவர். 9.00 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்படும் 16.00 மணிக்கு மீண்டும் வாக்கெடுப்பு நடத்தப்படும். 12.00 அல்லது 19.00 மணிக்கு வாக்குச் சீட்டுக்கள் எரிக்கப்பட்டு புகை வெளியேற்றப்படும்.

பாப்பரசர் முதலாவது வாக்கெடுப்பில் தெரிவு செய்யப்பட்டுவிட்டால் மேலே குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு முன்னதாகவே வெண்புகை வெளியேற்றப்படும். புதிய பாப்பரசர் யார் என்பதை அறிய வத்திகான நகரில் சென்பீற்றர் தேவாலயத்தின் வளாகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடியுள்ளனர்.

இதேவேளை -

அடுத்த பாப்பரசராக ஜேர்மனியைச் சேர்ந்த கர்தினால் ஜோசப் ராட்சிங்கர் தெரிவு செய்யபடலாம் என இணையத்தளமொன்று வெளியிட்டிருக்கும் கருத்துக் கணிப்பு முடிவுகள் தெரிவிததுள்ளன.

பேடிபவர்.கொம் என்ற இணையத்தளமே மேற்படி கருத்துக்கணிப்பை வெளியிட்டிருக்கிறது. (க-8)

உலக அரங்கில்

## கிழக்கு நேபாளத்தில் உள்ள

# தனியார் பாடசாலைகளை மூடுமாறு மாவோ தீவிரவாதிகள் எச்சரிக்கை

காத்மண்டு,ஏப்.20

கிழக்கு நேபாளத்தில் உள்ள தனியார் பாடசாலைகள் அனைத்தையும் மூடுமாறு மாவோ தீவிரவாதிகள் எச்சரித்ததைத் தொடர்ந்து அனைத்து தனியார் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என நேபாளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தனியார் பாடசாலை நிர்வாகிகள் அந்த பாடசாலைகள் மூலமாக அதிக இலாபமீட்டுவதனால் தனியார் பாடசாலைகளை அரசு பொறுப்பேற்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தே பாடசாலைகளை மூடுமாறும் மாவோ தீவிரவாதிகள் எச்சரித்துள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

நேபாளத்தின் கிழக்கு மாநிலத்தில் உள்ள அனைத்து தனியார் பாடசாலைகளும், தலைநகர் காத்மண்டுவில் உள்ள பல பாடசாலைகளும் கடந்த வாரம் முழுவதும் மூடப்பட்டிருந்தது. தலைநகரிலுள்ள பாடசாலைகள் தற்போது திறக்கப்பட்டுள்ளன என்றும் -

அவ்வாறு தமது உத்தரவை மீறி திறந்து வைத்தால் குண்டுவீசித் தாக்குதல் நடத்தப்படும் என மாவோ தீவிரவாதிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மாவோ தீவிரவாதிகளின் மாணவர் அமைப்பான நேபாள தேசிய சுதந்திர மாணவர் சங்கம் ஊடாகவே தீவிரவாதிகள் மேற்படி தாக்குதலை நடத்த திட்டமிட்டுள்ளனர் என்று நம்பப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை தென்கிழக்கு நேபாளத்தின் தனியார் பாடசாலையொன்றின் மீது கிளர்ச்சிவாதிகள் தாக்குதல் நடத்தினர். ஆனால், எவரும் உயிரிழக்கவோ, காயமடையவோ இல்லை. ஆனால், பாடசாலை மட்டும் சேதத்திற்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, மாவோ தீவிரவாதிகளின் இந்தச் செயலை நிறுத்துமாறு தனியார் பாடசாலை நிர்வாகிகளும், மனித உரிமை அமைப்புக்களும் வேண்டுகோள் விடுத்த போதும் தீவிரவாதிகள் அதனை நிராகரித்துள்ளனர்.

நாடு முழுவதிலும் சுமார் ஆயிரம் தனியார் பாடசாலைகள் காணப்படுகின்றன. அவற்றில் சுமார் 10 லட்சத்து 50 ஆயிரம் மாணவர்கள் கல்வி பயில்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேபாளத்தில் 1996 ஆம் ஆண்டு முதல் இதுவரை மாவோ தீவிரவாதிகளால் ஏற்படுத்தப்பட்ட கலகங்களினால் சுமார் 11 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-8)

# போதைப்பொருள் கடத்தலில் 9 ஆஸ்திரேலியர்கள் கைது!

கான்பெரா.ஏப்.20

இந்தோனேஷியாவின் சுற்றுலா தீவான பாலியில் போதைப்பொருள் கடத்திய குற்றத்தின் பேரில் 9 ஆஸ்திரேலியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பெருமளவில் வரும் பாலித்தீவில் உள்ள ஹோட்டல்களில் போதைப்பொருள் கடத்தப்படுகின்றன என்று பொலீஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து நடத்திய தேடலிலேயே மேற்படி ஆஸ்திரேலியர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் பெண் என்றும் - அவர்கள் 18 முதல் 29 வயதுடையவர்கள் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து 8 கிலோகிராம் எடையுள்ள ஹெரோயின் போதைப் பொருள் பறி முதல் செய்யப்பட்டது. இந்த போதைப் பொருளை ஆஸ்திரேலியாவுக்கு கடத்திச் செல்ல விருந்தமை விசாரணையின் போது தெரியவந்துள்ளது.

இந்த போதைப் பொருள் கடத்தலில் இந்தோனேஷியா, ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த பலருக்கும் தொடர்பிருப்பதனால் அவர்களைக் கைதுசெய்ய பொலீஸார் தீவிர நடவடிக்கையில் இறங்கியுள்ளனர் என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க-8)




# சட்ட விரோதமாக கிரீஸ் செல்ல முயன்ற நூறு பங்களாதேஷ் பிரஜைகள் கைது!

டாக்கா,ஏப்.20

பங்களாதேஷிலிருந்து சட்டவிரோதமாக கிரீஸ் நாட்டுக்கு படகின் மூலம் செல்ல முயன்ற நூறு பேரை பங்களாதேஷ் கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

பங்களாதேஷிலிருந்து கடல் மார்க்கமாக கிரீஸ் நாட்டுக்குச் செல்லமுயன்ற இவர்களை குடுப்பிடியா எனும் இடத்தில் கடற்படையினர் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

வளமான வாழ்வையும் தொழிலையும் தேடி பெரும்பாலான இளைஞர்கள் இவ்வாறு சட்டவிரோதமாக ஐரோப்பிய நாடுகளுக்குள் நுழைய முயல்வதனால் நடுக்கடலில் படகு கவிழ்ந்து உயிரிழக்கின்றனர். என்றும் -

ஏராளமான பணங்களை சட்டவிரோத முகவர்களிடம் கொடுத்து ஏமாந்து போகின்றனர் என்றும் பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த மாதம் மொராக்கோவிலிருந்து ஸ்பெயினுக்கு சட்டவிரோதமாக செல்லமுயன்ற 11 பங்களாதேஷினர் பட்டினி, கடல் நோயினால் உயிரிழந்தனர். இதனைத் தொடர்ந்து பங்களாதேஷ் அரசு கடல்மார்க்கமாக வேறுநாடுகளுக்குச் செல்வோரைக் கைது செய்யுமாறு அரசு கடற்படையினருக்கு உத்தரவிட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(க-8)

# நேபாள மன்னர் ஜியானேந்திரா ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப்பயணம்

காத்மண்டு,ஏப்.20

நேபாள மன்னர் ஜியானேந்திரா ஒன்பது நாள் ஆசிய சுற்றுப் பயணமொன்றை இன்று மேற்கொண்டுள்ளார் என அரச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் பிரதமர் தலைமையிலான ஆட்சியைக் கலைத்த மன்னர் ஜியானேந்திராவின் செயலை ஏனைய நாடுகள் கண்டிததன ஆயுத உதவிகளை நிறுத்தின. எனவே, தன்னிலை விளக்கம் கொடுப்பதற்காகவே இந்தச சுற்றுப் பயணத்தை அவர் மேற்கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆட்சிப்பொறுப்பை முழுமையாக ஏற்ற மன்னர் மக்கள் உரிமைகளையும் பத்திரிகை சுதந்திரத்தையும் பறித்துக்கொண்டார்.

மன்னரது இந்தச் செயலை உலக நாடுகள் கடுமையாகக் கண்டித்தன. இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஆயுத உதவிகளை நிறுத்தின.

எனவே, தன் நிலைமை குறித்து ஏனைய நாடுகளுக்கு விளக்கம் கூறுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த விஜயத்தில் இன்று இந்தோனேஷியாவுக்குச் செல்வதுடன் அங்கு நடைபெறும ஆசிய ஆபிரிக்க மாநாட்டிலும் கலந்துகொள்ளவிருக்கிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 24 ஆம் திகதி சீனாவுக்கும், 26 ஆம் திகதி சிங்கப்பூருக்கும் விஜயம் செய்யும் மன்னர் ஜியானேந்திரா 29 ஆம் திகதி மீண்டும் நாடு திரும்புவார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

(க-8)

# நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி மத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி







திதி: ஏகாதசி திதி: தசமி

வாழ்வில் பிரியமுடன் எம்மை நேசித்து, நல்வாழ்வுக்கு
ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எமது அன்புத் தெய்வங்களே!
நிஜ வாழ்வில் நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்தாலும்
எமது இதயத்தில் என்றும் ஒளிவீசிக் கொண்டே இருப்பீர்கள்.

677, 'சங்கிலி வில்லா',
பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(44400)(52-11-17)

உங்கள் அன்பான
பிள்ளைகள்.


# பொருளியல் கருத்தரங்கு

யாழ். பல்கலைக்கழக இளம் பொருளிய லாளர் மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு பொருளியல் துறை மண்டபத்தில் கருத்தரங்கு ஒன்று இடம் பெறவுள்ளது.

இக்கருத்தரங்கில் 'செயற்றிட்டங்களை இனங்காணலும் அவற்றை நடைமுறைப்படுத்த லும்' என்னும் தலைப்பில் யாழ். செயலக உதவித் திட்டப் பணிப்பாளர் வ.சத்தியசீலன் கருத்துரை வழங்குவார். (3-202)


## STP ON MOVE



இன்றைய ரோம் நகரைப்போல் கணனித்துறையில் மிகத் திடமாக வளர்ந்த நாம் இப்போது உங்கள் வீட்டிற்கே வந்து கணனிகளைப் பராமரிப்பதற்கு சிறந்த திட்டமொன்றை அறிமுகப்படுத்துகின்றோம்.

- உடன் திருத்தம் அல்லது உபகரண மாற்றீடு
- புதிய தொழினுட்ப பங்களிப்பு
- 2 மணி நேரத்தில் தொழில் நுட்பவியலாளரின் சேவை
- மென்பொருள் ஆலோசனைகள்



இன்னும் பல அரிய நன்மைகளைப் பெற இன்றே

Director

STP Your Partner in IT Solution

73, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P:0212222674

web:www.stpjaf.com



# VACANCY

**POSITION**

## Assistant Administrator

ASB Arbeiter-Samariter-Bund Deutschland e.V.

**DUTIES & RESPONSIBILITIES**

Maintenance of filing system.
Attending to telephone calls and visitors.
Maintenance of movable office accessories.
Making travel arrangements and arranging for meetings.
Maintenance of log books and registers.
Will be responsible in securing a good working condition.
Should be a good team player
Other relevant duties for the smooth running of the aid work.

**QUALIFICATIONAL REQUIREMENTS**

Should have completed Advanced Level. Preference will be given to those with a degree in Business Administration.
Computer literacy in MS-Office packages and Internet would be essential.

**LANGUAGE SKILLS**

Suitable candidate should have a good command of English, both oral and written AND be fluent in Tamil.

**WORK EXPERIENCE**

Suitable candidates should have at least a year's experience in a similar capacity.
Female or handicapped applicants will be given preference if equally qualified.
Please forward your Curriculum Vitae to reach us on or before 26th April 2005.
Please note that only shortlisted applicants will be called for interview.

(C/42398)(42)

**Programme Manager, Arbeiter Samariter Bund,**
No. -156, Jaffna Road, Paranthan Tel / Fax : (021) 228 5070



Jayoda **ஜயோதா** ජයෝද

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6013013 முதல் 6018502 வரை
சீட்டிழுப்பு இல. 126 திகதி 18-4-2005

வெற்றி எண்கள் **6 9 6 6 3 3** சுப்பர் எண் **23**

**சுப்பர் ஜக்பொட் பரிசு 2,37,33,450/- வெல்லப்படவில்லை**

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 2,37,33,450/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | - | 10,00,000/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 05 | 50,000/- | 2,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 48 | 5,000/- | 2,40,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 463 | 500/- | 2,31,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 4,662 | 50/- | 2,33,100/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 46,192 | 10/- | 4,61,920/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 03 | 5,000/- | 15,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 51 | 1,000/- | 51,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 461 | 100/- | 46,100/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 4,629 | 20/- | 92,580/- |
| மொத்தம் | 56,522 | | 22,23,800/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 22,23,800/-

இந்த வியாழக்கிழமை
சுப்பர் ஜக்பொட்
ரூ. **2,38,63,050/-**
தொடர் இல. 7728707 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2005 ஏப்ரல் 21 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

ரூபா 75,325/- பெறுமதியான லட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6015319-4-78
6015053-2-89
6017673-8-52
6014172-8-57
6017465-6-60
6014565-2-17
6013044-2-92
6014110-6-64

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.



# VACANCIES IN SUPER MARKET

சாவகச்சேரி நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள **பல்பொருள் அங்காடிக்குப்** பின்வரும் பதவிகளுக்கு 24.04.2005 அன்று காலை 9.30 மணிக்கு நேர்முகத்தேர்வு (Walk in Interview) நடைபெறவுள்ளது.

தகுதியுள்ளவர்கள் (கல்வித் தகைமை, தொழில் முன் அனுபவம் உட்பட) சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகமளிக்கவும்.

| | | |
|---|---|---|
| கணக்காளர் (Accountant) | விற்பனையாளர்கள் (Sales Men) | பொதி செய்வோர் (Packers) |
| கணனி இயக்குநர் (Computer Operator) | களஞ்சியப் பொறுப்பாளர் (Store Keeper) | சிற்றூழியர்கள் (Labourers) |

நேரில் சமுகமளிக்க வேண்டிய முகவரி:

32, Kachchai Road,
Chavakachcheri.

32, கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

(44434) (24-18-34)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## நம்பிக்கையீனமே தொடர்ந்தும் நீடிப்பு

ஆழிப்பேரலை அழிவுகளிலிருந்து நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொதுக்கட்டமைப்பு ஒன்றை விரைந்து உருவாக்குங்கள் என்ற அழுத்தம் சர்வதேச சமூகத்திடமிருந்து - உதவும் நாடுகளின் பக்கத்திலிருந்து - இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் வலுவாக வரத் தொடங்கியிருக்கின்றது.

உலக வங்கியின் ஏற்பாட்டில் உதவும் நாடுகளின் 'இலங்கை அபிவிருத்தி மன்ற'க் கூட்டம் அடுத்தமாதம் கண்டியில் நடைபெற இருக்கின்றது. அக் கூட்டத்திற்கு முன்பதாகப் பொதுக்கட்டமைப்பு ஏற்பாடு தொடர்பான இணக்கத்துக்கு வருமாறு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கின்றது.

பொதுக்கட்டமைப்பு யோசனை தொடர்பான விடயத்தில் ஓர் இணக்கத்தை ஏற்படுத்துவதற்காகப் புதிய திருத்தங்கள் சிலவற்றை நோர்வேத் தரப்பு பிரேரித்திருக்கிறது. இதுகுறித்து அனுசரணையாளரான நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்ஸன் விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்துக்குத் தகவல் தெரிவித்திருக்கின்றார்.

அந்தத் திருத்த யோசனைகள் இணக்கப்பாடு ஏற்படுவதற்கு வழிசெய்யுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

இந்நிலையில், ஐரோப்பிய மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு - மொத்தம் பன்னிரண்டு தேசங்களுக்கு - தமது அரசியல் குழுவினருடன் சுற்றுப் பிரயாணம் செய்த புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், இலங்கை விடயத்தில் சர்வதேச சமூகத்தின் கருத்துகளை நேரடியாகக் கேட்டறிந்துகொண்டு இன்று நாடு திரும்புகின்றார்.

இன்று வன்னி புறப்படுவதற்கு முன்னர் கட்டுநாயக்கவில் வைத்து நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதியான எரிக் சொல்ஹெய்மை அவர் சந்தித்துப் பேசவிருக்கின்றார். அந்தச் சந்திப்பில் புதிய மாற்றங்கள் - திருப்பங்கள் - முன்னேற்றங்கள் - ஏற்படுவதற்கான வாய்ப்புகள் பெரும்பாலும் இல்லை என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக ஸ்ரீலங்கா அரசுத் தரப்பினதும் மற்றும் சர்வதேச சமூகத்தினதும் கருத்துகளை உள்வாங்கிக் கொண்டு இன்று வன்னி திரும்பும் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், அங்கு தலைவர் பிரபாகரனோடு ஆலோசனை கலக்கவிருக்கின்றார். அதன் பின்னரே இவ்விடயத்தின் புலிகள் தரப்பின் நிலைப்பாடு குறித்து தெளிவான - திட்டவட்டமான - தீர்க்கமான - முடிவுகள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டுச் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பும் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவ்விடயங்கள் தொடர்பாகத் தலைவர் பிரபாகரனை நேரில் சந்தித்து ஆலோசனை கலப்பதற்கு முன்னரே புலிகள் தரப்பலிருந்து பெரிய மாற்றங்களை - திருப்பங்களை - எதிர்பார்ப்பது அர்த்தமற்றது.

அதேசமயம், பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இலங்கை அரசுத் தரப்பின் போக்குக் குறித்து புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், பொதுக்கட்டமைப்புத் தொடர்பான பேச்சுகளில் நேரடியாகப் பங்குபற்றி வரும் புலித்தேவனும் தெரிவித்திருக்கும் கருத்துக்களும் இங்கு நோக்கற்பாலவை.

"பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் விடயத்தில் இலங்கை அரசு சாதகமான அறிக்கைகளை வெளியிடுகின்றதே தவிர உருப்படியான - ஆக்கபூர்வமான - நடவடிக்கைகள் எதனையும் எடுக்கவில்லை" - என்று தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு விடயத்தில் தனது கூட்டரசின் பங்காளிக் கட்சிகளுடன் ஓர் இணக்கத்துக்கு வரமுடியாத அரசுத் தலைவி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, சர்வதேச சமூகத்தை சமாளிப்பதற்காக ஆரவாரமாக வெற்றுவேட்டு அறிக்கைகளை வெளியிடுகின்றார். ஆனால், பொதுக்கட்டமைப்பைச் சாத்தியமாக்குவதற்கு அவசியமான - அர்த்தபுஷ்டியான - நடவடிக்கைகள் எதனையும் எடுக்கிறார் இல்லை. இந்த உண்மையைத்தான் அம்பலப்படுத்தியிருக்கிறார் தமிழ்ச்செல்வன்.

"பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இணக்கம் ஏற்படுவதற்குத் தடையாக இருக்கும் முட்டுக்கட்டை நிலை தொடர்ந்து நீடிக்கிறது" எனப் புலித்தேவனும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இத்தகவல்கள் மற்றும் இவ்விவகாரத்தில் இலங்கை அரசின் பற்றுறுதியற்ற போக்கு என்பன, என்னதான் சர்வதேச அழுத்தம் இருந்தாலும் பொதுக்கட்டமைப்பு விடயத்தில் இணக்கநிலை ஏற்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் இல்லை என்ற நம்பிக்கையீனத்தையே ஏற்படுத்துகின்றன. அதுவே யதார்த்தமும் கூட.

ஆழிப்பேரலை அனர்த்தத்தினால்

# வடமராட்சி கிழக்கில் சேதமான வீடுகளை மீளமைக்க புரிந்துணர்வு உடன்படிக்கை

யாழ்.குடாநாட்டில் ஆழிப்பேரலை அனர்த்தத்தால் சேதமடைந்த 5 ஆயிரத்து 408 வீடுகளில் வடமராட்சி கிழக்கில் ஆயிரத்து 529 வீடுகளை அமைப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் யாழ். குடாநாட்டில் 5 ஆயிரத்து 408 வீடுகள் முழுமையாகவும் பகுதியாகவும் சேதமடைந்திருந்தன.

இவற்றில் 50 வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வந்துள்ளது. எஞ்சிய 5 ஆயிரத்து 100 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்கு தொண்டு நிறுவனங்கள் இணக்கம் தெரிவித்துள்ளன இதுபற்றிய செய்தி ஏற்கனவே உதயனில் வெளியாகியிருந்தது

அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில் வடமராட்சி கிழக்கிலுள்ள ஆயிரத்து 529 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு 5 தொண்டு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

இந்நிறுவனங்களுக்கும் நகர அபிவிருத்திச் அதிகார சபை, தேசத்தை மீளக் கட்டியெழுப்பும் செயலணி ஆகிய அமைப்புகளுக்கும் இடையே வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அந்த உடன்படிக்கையின்படி இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் செம்பியன்பற்று வடக்கில் 267 வீடுகளையும், உடுத்துறையில் 520 வீடுகளையும் - உகை தரிசன இயக்கம் பொற்பதியில் 100 வீடுகளையும் போக்கறுப்பில் 24 வீடுகளையும்-

லயன்ஸ் கழகம் ஆழியவளையில் 130 வீடுகளையும் -

டொன் பொஸ்கோ நிதியம் முள்ளியானில் 270 வீடுகளையும் அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளன.

பிரசாந்த பீரிஸ் என்பவர் மணற்காட்டில் 168 வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்வந்துள்ளார்.

இந்த நிறுவனங்களால் அமைக்கப்படவுள்ள வீடுகள் 500 சதுர அடி விஸ்தீரணமுடையதாக அமைவதுடன் ஒடுகளால் வேயப்படும் மலசலகூடம், சமையலறை என்பன வீட்டிற்கு வெளியே அமைக்கப்படும்.

அத்துடன், இவ்வீடுகள் மாதிரிக் கிராம வடிவில் அமைக்கப்படும். இக்கிராமங்களில் உள்ளக வீதிகள், பொதுமண்டபம், கூட்டுறவுக்கடை என்பனவும் அமைக்கப்படும்.

குறிப்பாக, இந்த வீடுகள் அரசின் அறிவுறுத்தலுக்கமைய கடற்கரையில் இருந்து 300 மீற்றருக்கு அப்பால் இனங்காணப்பட்ட அரச காணிகளிலேயே அமைக்கப்படவுள்ளன.

இதற்கான திட்டங்கள் வரையறுக்கப்பட்டு அனர்த்த கால செயலணிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை -

வடமராட்சி கிழக்கில் பாதிக்கப்பட்ட வீடுகளுள் ஏனைய ஆயிரத்து 425 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கான உடன் படிக்கை விரைவில் கைச்சாத்தாகும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (8-202-204)

# எரிபொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மத்திய வங்கி அறிக்கையில் வலியுறுத்து

கொழும்பு,ஏப்.20

சர்வதேச ரீதியில் எரிபொருள்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் எரிபொருள் விலை உயர்வைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது விடின் எரிபொருள் தொடர்பாக வழங்கப்படும் மானிய உதவிகளின் அதிகரிப்பு காரணமாகச் சகல அரச துறைகளிலும் பின்னடைவு ஏற்படும். - இவ்வாறு இலங்கை மத்திய வங்கி எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய வங்கி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது:-

சர்வதேச ரீதியிலான எரிபொருள் விலை அதிகரிப்பு இலங்கைப் பொருளாதாரத்தில் பெரும் பின்னடைவை ஏற்படுத்தவுள்ளது. ஆகவே, இந்த விடயத்தில் முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும். தற்போது 55 அமெரிக்க டொலர்களாக இருக்கும் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள எரிபொருள் விலை மீள் ஆய்வின் போது மேலும் 10 அமெரிக்க டொடலர்களால் அதிகரிக்கும்.

எரிபொருள் விலைகள் மீளாய்வு செய்யப்படுவதில் ஏற்படும் தாமதம் மற்றும் எரிபொருள் பாவனையில் குறைவு ஏற்படாத தன்மை காரணமாக அரசினால் வழங்கப்படும் மானிய உதவிகள் அதிகரிக்க நேரிடும். இதனால், அரசின் வரவு - செலவுத் திட்டம் உள்ளிட்ட அரசின் சகல துறைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தகம் என்பவற்றில் பெரும்பின்னடைவு ஏற்படும்.

இதனிடையே உலகளாவிய எரிபொருள் விலை உயர்வுக்கு ஏற்ப உள்நாட்டில் எரிபொருள் விலைகள் சீர்படுத்தப்படவேண்டும். அத்துடன், எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதும் ஊக்குவிக்கப்படவேண்டும்.

- இவ்வாறு அந்த அறிக்கை தெரிவித்துள்ளது. (ஓ)

# இலங்கைத் தீவில் யுத்த அபாயம்: சர்வதேச செய்தி ஊடகங்கள் கவலை

இல்ங்கைத் தீவகத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைக்கும் கோரிக்கைகளை சிறீலங்கா அரசு நிராகரித்து வரும் நிலையில் யுத்தம் தொடர்பான பதற்றமும் அதிகரித்து வருவதாக சர்வதேச செய்தி ஊடகங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் ஐரோப்பிய, ஆபிரிக்க பயணங்கள் தொடர்பாக செய்திக் கட்டுரை வெளியிட்டுள்ள ரொய்ட்டர் செய்தி நிறுவனம் இத்தகவலைத் தெரிவித்துள்ளது.

அரச ஆதரவு ஆயுதக் குழுக்களை ஊக்குவித்து விடுதலைப் புலிகள் மீது தாக்குதல்களை மேற்கொண்டு வரும் சிறிலங்கா அரசின் நடவடிக்கை தொடர்ந்தால் யுத்தநிறுத்த ஒப்பந்தம் முறிவடைந்துவிடும் என்று நோர்வே அனுசரணையாளர்கள் அச்சப்படுவதாக ரொய்ட்டர் செய்தி நிறுவனம் கருத்து தெரிவித்துள்ளது.

அதேநேரத்தில் பொதுக்கட்டமைப்பானது இனச்சிக்கலைத் தீர்ப்பதற்கான ஒரு நல்ல விடயம் என்று சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா அண்மைய தமிழ் - சிங்கள புத்தாண்டின் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள அக்கட்டுரை, விடுதலைப் புலிகள் முன்வைக்கிற ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதில் சிறிலங்கா அரசின் கூட்டணிக் கட்சியான ஜே.வி.பி. மிக வேகமாக இருப்பதாகவும் கூறியுள்ளது.

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான கட்டமைப்பு உள்ளிட்ட இருதரப்பு சர்வதேச நிதிப் பகிர்வுக்கான தீர்வு உடனே நிகழத்தக்கதல்ல என்று சர்வதேச கொள்கை வகுப்பாளர்கள் கருதுவதாகவும் ரொய்ட்டர் கூறுகிறது.

# இலங்கை - சுவிஸ் விமானசேவை தற்காலிகமாக இடைநிறுத்தம்

சுவிற்ஸர்லாந்தின் சூரிச் விமான நிலையத்திற்கான விமான சேவையை சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளது.

இதற்குக் காரணம் பாரிய பொருளாதார நஷ்டமே என்று அந்த நிறுவனம் தெரிவித்துள்ளது.

உல்லாசப் பயணத்துறையில் செல்வாக்குச் செலுத்திய இச்சேவை கடற்கோள் அனர்த்தத்தின் பின்னர் இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளமை உல்லாசப் பயணத்துறையைப் பின்னடைய வைக்குமென்று சுற்றுலாத்துறை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

சூரிச் விமான நிலையம், அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளுக்குச் செல்பவர்களுக்குத் தரித்துச் செல்லும் இடமாகவுள்ளது. இங்கு விமானம் மாறுபவர்கள் இந்நாட்டின் விஸா அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை என்பதுவும் இந்த விமான நிலையத்தின் சிறப்பம்சமாகும்.

சூரிச் விமான நிலையத்திற்குச் செல்ல சிறிலங்கன் விமான நிறுவனத்தின் சேவையை நம்பியிருந்த வெளிநாட்டுச் சுற்றுலா பயணிகளும் விமானசேவை முகவர்களும் இந்தச் சேவை திடீரென இடைநிறுத்தப்பட்டதால் நெருக்கடியை எதிர்நோக்குகின்றனர் என்று வெல்கர் சுற்றுலா நிறுவன அதிகாரி மைக்கல் எலியாஸ் தெரிவித்துள்ளார். (ஓ-203)

சுனாமியால் பாதிப்புற்றோருக்கு

# நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு போதிய அரச காணிகள் இல்லை

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடமராட்சி வடக்கில் நிரந்தர வீடுகளை அமைப்பதற்கு போதிய அரச காணிகள் இல்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது.

வடமராட்சி வடக்கில் பாதிக்கப்பட்ட 2ஆயிரத்து 634 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்படவேண்டும். அரசின் அறிவுறுத்தலுக்கமைய கடற்கரையிலிருந்து 300 மீற்றருக்கு அப்பால் வீடுகளை அமைப்பதற்கு அரச காணிகளை இனங்காணும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அந்த நடவடிக்கை மூலம் ஆனைவிழுந்தான், வராத்துப்பளை ஆகிய இடங்களில் மட்டும் சுமார் 150 குடும்பங்களுக்கு வீடுகள் அமைப்பதற்கான காணிகள் மட்டும் இனங்காணப்பட்டன.

இதனால் இப்பகுதியில் பாதிக்கப்பட்ட அனைத்துக் குடும்பங்களுக்கும் வீடுகள் அமைத்துக்கொடுப்பதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கான மாற்றுத் திட்டங்கள் தொடர்பாகத் தொடர்ந்தும் ஆராயப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(8-202-204)

**நாளை**

*சித்திரை 08*
*வியாழக்கிழமை*
*21.04.2005*
*திதி : துவாதசி*
*பிற்பகல் 03.58 வரை*
*நட்சத்திரம் : பூரம்*
*காலை 6.38 வரை*
*பிரதோஷ விரதம்*
*சுபநேரம் : 07.31 - 09.01*
*ராகுகாலம் : 01.31 - 03.01*
*(யாவும் பழைய நேரப்படி)*

**உதுவாக்கு**

நிறைகண்டால் போற்று. குறை கண்டால் ஒன்றும் கூறாதே.

- ஔவை.

# துப்பாக்கிச் சூட்டு காயங்களுடன் சிப்பாயின் சடலம் மீட்பு!

வரணி இராணுவ முகாமிலிருந்து துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இராணுவ வீரர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மீட்கப்பட்டது.

ஆனந்த சந்திரசிறி(வயது 39) என்ற சிப்பாயின் சடலமே அது என்று அடையாளம் காணப்பட்டது.

இதுதொடர்பாக கொடிகாமம் பொலீஸார் சாவகச்சேரி நீதிவானின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர். இதனையடுத்து சாவ்கச்சேரி நீதிமன்ற நீதிவான் ப.சுப்பிரமணியம் சம்பவ இடத்தையும் பலாலி இராணுவ வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சிப்பாயின் சடலத்தையும் பார்வையிட்டார். பின்னர் சடலத்தைக் கொழும்புக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோதனை செய்தபின்னர் உறவினர்களிடம் கையளிக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். சடலத்தின் நெஞ்சுப் பகுதியில் இரண்டு துப்பாக்கிச் சூட்டுக்காயங்கள் காணப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

(8-117)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

EN - A - 50 கேம்பிறிச் கார், 2 வீணைகள் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: No.6, கற்பக விநாயகர் வீதி, கச்சேரி - நல்லூர் றோட், யாழ்ப்பாணம். (44416)

தரமான நிலையில் உள்ள 200 - xxxx முச்சக்கர வண்டி (ஓட்டோ) மஞ்சள் கலர் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: மூர்த்தி ரயர் வேக்ஸ், நீர்வேலி தெற்கு, நீர்வேலி.(44274)

## காணி விற்பனைக்கு

உரும்பிராய் தெற்கு, பலாலி வீதி, சாயி மில் முன் ஒழுங்கையில் இரண்டு பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.18, வளாக ஒழுங்கை, திருநெல்வேலி. (44417)

## வீடு வாடகைக்கு

சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். தொடர்பு: T.P.No: 0776 - 059341. (44398)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

புறொயிலர் 1Kg 170/-. சுத்தம் செய்தது 1Kg 255/- மற்றும் புறொயிலர் குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தொடர்பிற்கு NEW R.S.K. FARM - மான்ஸ் பாடசாலை வீதி உடுவில், NEW R.S.K. FARM மானிப்பாய் றோட் பெரியமதவடி, உடுவில். (44126)

Prima உயிர் Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி உடன் சுத்தம் செய்து தினமும் பெற்றுக் கொள்ளலாம். (Electronic நிறுவை). தொடர்பு: நல்லூர் வீடியோ சென்ரர் வளவு, 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44153)

## வீடு, காணி விற்பனைக்கு

மீசாலை தெற்கில், பங்களா றோட்டில் மா, பலா, தென்னை உட்பட நன்னீர்க் கிணற்றுடன் 8 பரப்புக் காணியில் அமைந்துள்ள பெரிய கல்வீடு உடன் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: க.தர்மகுலசிங்கம், 21, பொன்னப்பா ஒழுங்கை, யாழ்ப்பாணம்.T.P.: 0777 551431. (சி-42393)

## கோழிக்குஞ்சு விநியோகம்

இரண்டு முறை தடுப்பு மருந்து போடப்பட்ட, Original Prima Broiler குஞ்சுகள், பேட்டுக்குஞ்சுகள் 25.04.05 திங்கட்கிழமை பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறை - நெல்லியடிக் கிளைகளிலும்,. சுட்டிபாம் - வட்டுக்கோட்டை,. சன்நிதிபாம் - தொண்டைமானாறு,. ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி,. முருகன - சாவகச்சேரி,. நல்லூர் பாம் சென்ரர் - நல்லூர். (44267)

## தவறிவிட்டது

கோண்டாவில் கிழக்கு, ஞானவைரவர் வீதியைச் சேர்ந்த பொன்னுத்துரை பரமேஸ்வரன் என்பவருடைய மோட்டார் சைக்கிள் NWGL 6385 ஆவணங்கள் 18-04-2005 திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கும் கோண்டாவிலுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் 4590121 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (44421)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

Great Dane X Doberman Pincher நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (44422)

# குற்றங்களை விசாரிக்க சிறப்பு நீதிமன்று

நாட்டில் அதிகரித்துவரும் குற்றச் செயல்களை விசாரிப்பதற்கெனச் சிறப்பு நீதிமன்றமொன்று நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சொலிஸிட்டர் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா தலைமையிலான சட்ட நிபுணர்கள் குழு இதற்கான சிபாரிசினை அரசுக்குச் செய்திருக்கிறது. இதனை அரசு விரைவில் நடைமுறைப்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் நாளுக்கு நாள் குற்றச் செயல்கள் அதிகரித்து வருவதால் அது தொடர்பான விசாரணைகளை துரிதப்படுத்துவதற்கான வழி வகைகளை விரிவாக ஆராய்ந்த பின்னரே இந்தச் சிபாரிசு அரசுக்கு செய்யப்பட்டுள்ளது.

குற்றச் சம்பவங்கள் தொடர்பான வழக்கு விசாரணைகளில் தாமதங்கள் ஏற்படுவதன் காரணமாக சாட்சியங்கள் முன்னுக்குப் பின் முரணான வகையில் அளிக்கப்படலாமென்றும் -

அது விசாரணைகளில் மேலும் தாக்கங்களை ஏற்படுத்தக் கூடுமென்றும் சொலிஸிட்டர் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்திருக்கிறார்.

எனவே, இதனைத் தடுக்க வேண்டுமாயின் இவ்வாறான வழக்கு விசாரணைகளை நாளாந்தம் நடத்த சிறப்பு நீதிமன்றமொன்று நிறுவப்பட வேண்டுமெனவும் அவர் சிபாரிசு செய்துள்ளார்.(க-8)

# பயிர்ச்செய்கை பாதிப்பு

வட்டுக்கோட்டை, மூளாய்ப் பகுதிகளில் உள்ள வயல் நிலங்களில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் அத்துமீறலினால் சிறுதானியச் செய்கை பாதிப்படைந்துள்ளது.

கட்டாக்காலி ஆடு, மாடுகள் வயிலில் உள்ள எள் பயிரைத் தின்று அழிந்துள்ளன. உரியவர்கள் நடவடிக்கை எடுக்காமையால் பல வயல் நிலங்களில் உள்ள சிறு தானியங்களைக் கட்டாக்காலிகள் அழிந்துள்ளன என அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.(ஒ-161)

## வேலைக்கு ஆள் தேவை

படம் பிடிப்பதற்கும், படம் கழுவி பிறின்ட் செய்யவும் ஆள் தேவை.
ஆண்/பெண் இருபாலாரும் உடனே நேரில் வரவும்.

**நித்திய சித்திரா ஸ்ரூடியோ**
சங்கானை.
(44424)(26-11-45)

## குருக்கள் தேவை

புத்தூர், நவக்கிரி ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் கோயிலுக்கு மேற்படி கோயிலுக்குச் சொந்தமாகவுள்ள வீட்டில் தங்கியிருந்து நித்திய பூசைக் கடமைகளைச் செய்வதற்குத் தகுதிவாய்ந்த குருக்கள் ஒருவர் தேவை.

22-04-2005 வெள்ளிக்கிழமை மாலை 4 மணியளவில் கோயிலில் ஆலயப் பரிபாலன சபையினரைச் சந்திக்கவும்.

(44428)(26-11-45) - பரிபாலன சபையினர்.

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.நகருக்கு மிக அண்மையில் முஸ்லிம் வட்டாரத்தில் புதிதாக மறுசீரமைக்கப்பட்ட 03 படுக்கை அறைகள், வாகனத் தரிப்பிடம் ஏனைய வசதிகளுடன் உடன் குடியேறக்கூடிய நிலையில் வீடு வாடகைக்குண்டு..

தொடர்பு: **பசீர்,**
70, பெரிய கடை, யாழ்ப்பாணம்.
(44425)(26-11-45) T.P.: 222 2852.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1989 - 10 - 22
மறைவு 2004 - 04 - 30

**செல்வி கிருஸ்ணமூர்த்தி டர்சனா**

ஓராண்டு உருண்டோடி விட்டாலும் – உன் நினைவு
மறையாது நம் மனத்திரையில் எந்நாளும்
உயிரோட்டமாய் எமக்கிருந்த உத்தமியே!
உம் ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

30, சின்னாலங்கண்டு ஒழுங்கை,
அரியாலை,
யாழ்ப்பாணம். (44427)(26-11-45) - குடும்பத்தினர்.

## வேலையாள்கள் தேவை

எமது போட்டோப் படப்பிடிப்பு ஸ்ரூடியோவுக்கு –
☆ வெளிப்புறப் படப்பிடிப்பாளர்கள்
☆ பயிற்சியாளர்கள்
☆ பில் கிளாக் ஆகியோர் தேவைப்படுகின்றனர்.
உரிமையாளர்: **சோ.தேவதாசன்,**
**நியூ சித்திரகலா ஸ்ரூடியோ**
இல.70, 72, கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
(44419)(26-11-45)


STP Your Partner in IT Solution

**NEW CLASSES**
Jaffna & Chavakachcheri

Dip. in Hardware Technology
Dip. in MS Office
Dip. in Desktop Publishing
Java Programming

மேலதிக விவரங்களுக்கு: www.stpjaf.com
Director
STP Your Partner in IT Solution
73, Palaly Road, Kantharmadam, Jaffna. T.P:0212222674
Sankaththanai, Chavakachcheri.

**UNIT**

இந்தியாவில் கணனிப் பொறியியல் துறைப் பட்டம் பெற்றவர்களும், இந்தியாவில் இரண்டு தசாப்த காலமாக கணனியில் பல்வேறு துறைகளில் பணிபுரிந்த அனுபவம் பெற்று பெயரெடுத்தவர்களாகிய நாங்கள் தாயக மண்ணில் அதியுயர் தொழில் நுட்பத்தை வழங்கி வருகின்றோம். கணனித் துறையில் எமது அனுபவம் மற்றும் தனித்தன்மையும் கொண்டு முதல் படியாக சகல கணனி உதிரிப் பாகங்களையும் உற்பத்தியாளர்களிடமே நேரடியாக இறக்குமதி செய்து குறைந்த விலைக்கேயுரிய சேவையுடன் இலங்கையில் எங்கும் இல்லாதவாறு 3வருட முழு உத்தரவாதத்துடன் வழங்குகின்றோம்.

கொழும்பு விலையில் 3 வருட முழு உத்தரவாதம்

எமது சேவைகள் பல அவற்றுள் சில :

விற்பனை

- உலகத்தரம் வாய்ந்த பிரத்தியேக உதிரிப்பாகங்களை தெரிவு செய்து இணைத்து முழுக் கணனியாகவும் மற்றும் உதிரிகளாகவும் வழங்குதல்.
- கணனி தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களான Compaq, DELL, IBM மற்றும் HP நிறுவனங்களின் தயாரிப்புக்களை மிகமிகக் குறைந்த விலையில் தரம் மாறாமல் வழங்குதல்
- உலகத்தரம் மற்றும் முன்னணி தயாரிப்பு நிறுவனங்களான Perx & Asrock தயாரிப்புக்களின் ஏக விநியோகம்
- வலைப்பின்னலமைப்பில் முன்னணி நிறுவனமான Cisco தயாரிப்புகள் மற்றும் சேவைகளை மிகமிகக் குறைந்த விலையில் வழங்குதல்

New Year Offer
நாங்கள் வழங்கும் ஒவ்வொரு கணனியுடனும்
Inkjet Printer/2400 DPI Scanner/ Computer Table/600VA UPS
மற்றும் Screen Filter, Mouse pad & Dust Cover Totally Free

Hybrid Boost, Hypher Thread, Dual Monitor

புதிய Multimedia Pentium IV கணனிகள்
மூன்று வருட உதிரிப்பாக உத்தரவாதத்துடன் கூடிய விற்பனைக்குப் பிந்திய சேவைகள்

An Indian Engineer's Centre
We are entirely different from others

**Universal Network of Information Technology**
347, K.K.S. Road, Manohara Theatre Junction,
Jaffna, Sri Lanka.



யாழ்ப்பாணத்தில்
**Swiss Mineral** மற்றும் **Tilko**
நிறுவனங்களின் பேராதரவுடன் நல்லை கலைக்கூடம், சப்பதமி இசைக்கூடத்துடன் இணைந்து நடத்தும்

# ஆனந்தசாகரம்

மாபெரும் இசைப்போட்டி இது!

பாடகர்களே! இசைத்துறை மாணவ, மாணவியர்களே!
உங்களிடம் இருக்கும் இசைத்திறமைகளைப் புதிய இசைவடிவில் தமிழ் உலகிற்கு வெளிப்படுத்தவும் உங்கள் துறையில் நீங்கள் மேன்மேலும் வளரவும் ஒரு புதிய சந்தர்ப்பம் இது.

100,000.00 பரிசில்களை வெல்லுங்கள்!

★ நீங்கள் 14 வயதிற்கு மேற்பட்டவராகவும், கர்நாடக சங்கீதத் துறையில் வட இலங்கை சங்கீத சபையின் வாய்ப்பாட்டு தரம் 3 இற்குக் குறையாத தகுதியுடையவராகவும் இருந்தால் போதும்.

★ நீங்கள் போட்டியாளராக இணைந்துகொண்டு உங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதுடன், **லட்ச ரூபா (100,000.00) பரிசில்களையும்** நீங்கள் வெற்றி கொள்ளமுடியும்.

ஆம், எதிர்வரும் 25.04.2005 இற்கு முன்னர் உங்கள் பெயர், முகவரி, கல்வித்தகைமைகள், இசைத்துறை தகைமைகள் மற்றும் தங்களது சுயவிவரக்கோவை போன்ற அனைத்து விவரங்களையும் தெளிவாக எழுதி எமது விளம்பர இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்.

**விளம்பர இல.2562,**
**மே/பா உதயன்.**
(C/42385)(50-11-45-26)


## DPDHS OFFICE, KILIINOCHCHI CALLING TENDER FOR THE PURCHASE OF EQUIPMENTS &FURNITURE

The Chairman, Tender Board, DPDHS Office, Kilinochchi will receive tenders for the folIowing items needed for DPDHS Office, Kilinochchi on or before 10.05.2005 at 10 a.m.

Separate sealed tenders in duplicate with the project title written on the top of the left hand corner of the envelope should either be deposited in the Tender Box, DPDHS Office, Kilinochchi or sent by registered post addressed to the Chairman, Tender board, DPDHS Office, Kilinochchi.

| | | |
|---|---|---|
| **Equipments** | | |
| Photocopy Machine | - | (Toshiba) |
| Ronio Machine - | | |
| Multimedia Projector | - | (Sony Latest model) |
| Flash memory | - | (1 GB Mercury) |
| Scanner | - | (Cannon Latest model) |
| Color printer | - | (Epson Stylus 42C) |
| Rewriteable - CD | - | (TDK) |
| TV&VCD Player | - | (TV Sony - 21 Inch)(VCD player DVD & VCD &MP3) |
| Water pump | - | (Robin 15) |
| Stabilizer | - | (5 KV Nippon) |
| Computer set | - | (CPU Intel 3.0, GHZ, RAM 512 MB, HDD - 120GB, VGA 64 MB ) |
| Furniture | - | |
| Cabinet | - | (4' x 3' one side glass) |
| Office table | - | (6'x 4'-steel) |
| Arm chair | - | (Steel with cushion) |
| Medicine cupboard | - | (6' x 4' four side glass) |
| Bed side cupboard | - | (3'x1½ Wooden) |

DPDHS,
DPDHS Office,
KILINOCHCHI. (C/44) (29-11-45-26)

## கரவெட்டிப் பிரதேச செயலகப் போட்டி

# நான்கு புதிய சாதனைகள்; மனோகரா வி.க. முதலிடம்

கரவெட்டி,ஏப்.20

கரவெட்டிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் நடந்த தடகளப் போட்டிகளில் நான்கு புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகளில் கூடுதல் புள்ளிகளைப் பெறறு மனோகரா விளையாட்டுக்கழகம் முதலிடத்தைப் பெற்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இந்தப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றன.

இந்தப் போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் கே.கணேஸ் கலந்துகொண்டார்.

இந்தப் போட்டியில் நான்கு புதிய சாதனைகளை நிலைநாட்டியவர்கள் விவரம் வருமாறு:-

✪ 1500 மீற்றர் ஓட்டத்தில் என்.ஸி.ஸி. விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த தெ.ஜெயந்தன் 4 நிமி. 48.8 செக்கனில் ஓடிப் புதிய சாதனை படைத்துள்ளார்.

✪ தட்டெறிதல் நிகழ்ச்சியில் அத்துளு அம்பாள் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இ.உதயகுமார் 34.64 மீற்றர் எறிந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

✪ 100 மீற்றர் ஓட்டத்தில் ஜீவகன் விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த என்.மயூரி 14.15 செக்கனில் ஓடிப் புதிய சாதனை படைத்துள்ளார்.

✪ தட்டெறிதல் நிகழ்ச்சியில் இளங்கோ விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த பு. ஜெனிற்றா 21.77 மீற்றர் எறிந்து புதிய சாதனை படைத்துள்ளார்.

**போட்டி முடிவுகள் வருமாறு:-**

கபடி - ஆண்கள் - பொம்மேர்ஸ் வி.க., யங்கம்பன்ஸ் வி.க.,

எல்லே - ஆண்கள் - மனோகரா வி.க., ஞானம்ஸ் வி.க.,

எல்லே - பெண்கள் - மனோகரா வி.க., பொம்மேர்ஸ் வி.க.,

கரபந்தாட்டம் - ஆண்கள் - சிவகுமாரன் வி.க., இமையாணன் மத்தி வி.க.,

கரபந்தாட்டம் - பெண்கள் - சிவகுமாரன் வி.க., பொம்மேர்ஸ் வி.க.,

துடுப்பாட்டம் - பெண்கள் - மனோகரா வி.க., பொம்மேர்ஸ் வி.க.,

துடுப்பாட்டம் - ஆண்கள் வெக்ரர் வி.க., விபுலானந்த வி.க.,

உதைபந்தாட்டம் - பெண்கள் - பொம்மேர்ஸ் வி.க., மனோகரா வி.க.,

உதைபந்தாட்டம் - ஆண்கள் - கரணவாய் மத்தி வி.க., டைமன் வி.க.,

தடகளப் போட்டி - பெண்கள் - ஜீவகன் வி.க. (46 புள்ளிகள்),

தடகளப் போட்டி - ஆண்கள் - பொம்மேர்ஸ் வி.க. (31 புள்ளிகள்).

அனைத்துப் போட்டிகள் - பொம்மேர்ஸ் வி.க. (41 புள்ளிகள்), மனோகரா வி.க. (33 புள்ளிகள்).

சிறந்த சுவட்டு வீரன் - மனோகரா விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க.முரளிதரன் (100 மீற்றர் ஓட்டம்).

சிறந்த சுவட்டு வீராங்கனை - ஜீவகன் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எஸ்.மயூரி (100 மீற்றர் ஓட்டம்).

சிறந்த கள வீரன் - ஞானம்ஸ் விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த வ.ரமேஸ்குமார் (முப்பாய்ச்சல் போட்டி).

சிறந்த கள வீராங்கனை - இளங்கோ விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த ஜே.அஸ்வினி (நீளம் பாய்தல் நிகழ்ச்சியில்)

(3-70)

## பமிலியன்ஸ் அணி வெற்றியீட்டியது

வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுக்கழகங்களின் பெண்கள் அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட மேசைப் பந்தாட்டப் போட்டியில் பமிலியன்ஸ் வி.க. வெற்றிபெற்றது.

யாழ். மத்திய கல்லூரியின் உள்ளக விளையாட்டுத் திடலில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற போட்டியில் பமிலியன்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுவில் மத்தி விளையாட்டுக்கழகம் மோதியது.

பமிலியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.(3-190)

## அரை இறுதியாட்டங்கள்

யாழ். பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியின் அரை இறுதியாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணியளவில் பாஷையூர் புனித அந்தோனியார் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது. அரையிறுதியாட்டத்தில் மோதும் அணிகள் வருமாறு:-

★ பமிலினியன்ஸ் வி.க., சென்.அன்ரனிஸ் வி.க.,

★ தொடர் மாடி வி.க., எதிர் குருநகர் வி.க. (3-190)





கரவெட்டிப் பிரதேச தடகளப் போட்டி நிகழ்வில் கலந்துகொண்ட யாழ். அரச அதிபர் கே.கணேஸ் 'பாண்ட்' இசையுடன் அழைத்துச் செல்லப்படுவதையும் முதலிடம் பெற்ற பொம்மேர்ஸ் அணியின் வீரர்கள், அரச அதிபர் மற்றும் அதிகாரிகளுடன் சேர்ந்து இருப்பதையும் படங்களில் காணலாம். *(படம்: சி.சுந்தரலிங்கம்)*

## பாடசாலைகள் கரபந்தாட்டம்

# இன்று முதல் மூன்று தினங்கள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில்

வலி.வடக்கு,ஏப்.20

யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான கரபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று முதல மூன்று தினங்கள் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

15, 17, 19 என மூன்று பிரிவுகளின் அணிகள் இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுகின்றன.

15 வயதுப் பிரிவில் பத்து அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு லீக் முறையில் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

'ஏ' பிரிவு - கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம் மற்றும் யாழ். வலயம் 2ஆம் இடம்பெற்ற அணி.

'பி' பிரிவு - ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, யாழ். வலயம் 1இல் வெற்றி பெற்ற அணி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

'சி' பிரிவு - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

'டி' பிரிவு - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி.

17 வயதுப் பிரிவில் பத்து அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விளையாடவுள்ளன.

'ஏ' பிரிவு - கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயம், யாழ். வலயத்தில் 2ஆம் இடம் பெற்ற அணி.

'பி' பிரிவு - சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி, ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, மட்டுவில் சரஸ்வதி வித்தியாலயம்.

'சி' பிரிவு - உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி, சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

'டி' பிரிவு - நயினாதீவு ஸ்ரீகணேசா வித்தியாலயம், யாழ். வலயம் முதலிடம் பெற்ற அணி, உடுப்பிட்டி இமையாணன் அ.மி.த.க. பாடசாலை.

19 வயதுப் பிரிவு 9 அணிகள் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு விளையாடவுள்ளன.

'ஏ' பிரிவு - நயினாதீவு ஸ்ரீ கணேசா வித்தியாலயம், கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

'பி' பிரிவு - கொடிகாமம் திருநாவுக்கரவு வித்தியாலயம். ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

'சி' பிரிவு - இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயம், யாழ். வலயத்தில் 2ஆம் இடம் பெற்ற அணி.

'டி' பிரிவு - யாழ். வலயம் முதலாம் இடம் பெற்ற அணி, உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி, சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி.(3-86)

# சென்ரலைட்ஸ் வி.க. வெற்றி

வலி.வடக்கு,ஏப்.20

மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகம் அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையில் நடத்தி வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கடந்த சனிக்கிழமை நடந்த விறுவிறுப்பான ஆட்டத்தில் சென்ரலைட்ஸ் வி.க. வெற்றிபெற்றது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழம் மோதிக்கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்ரலைட்ஸ் விளையட்டுக்கழகம் 30 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழக வீரர்களான ரோகன் 43 ஓட்டங்களையும் பிரகாஷ் 37 ஓட்டங்களையும் காண்டீபன் 22 ஓட்டங்களையும் ஆகக் கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக்கொண்டனர்.

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழக வீரன் பிரகாஷ் 34 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 30 ஓவர்கள் முடிவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 175 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

துடுப்பாட்டத்தில் சங்கர் 73 ஓட்டங்களையும் துஷா 26 ஓட்டங்களையும் பிரதீபன் ஆட்டமிழக்காமல் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழக வீரர்களான சியாம்ராஜ் 25 ஓட்டங்களுக்கு மூன்று விக்கெட்டுக்களையும் காண்டீபன் 37 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இரு அணிகளும் முப்பது பந்துப் பரிமாற்றங்களைத் துடுப்பாட்டத்தில் நிறைவுசெய்து 175 ஓட்டங்களைப் பெற்று சமநிலையில் காணப்பட்டனர்.

இந்நிலைமையில் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காக விக்கெட் இழப்புகளின் கணக்குப் பார்க்கப்பட்டபோது சென்ரலைட்ஸ் விளையாட்டுக்கழகம் 175 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களை இழந்தமையாலும் -

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக் கழகம் 9 விக்கெட்டுக்கள்ளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றமையாலும் குறைந்த விக்கெட் இழப்பை சென்ரலைட்ஸ் விளையாட்டுக் கழகம் பெற்றதைக் கருத்திற்கொண்டு சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் வெற்றி பெறற அணியாக அறிவிக்கப்பட்டது. (3-86)

## விளையாட்டு

# வடமராட்சி கல்வி வலயத்தின் மெய்வன்மைப் போட்டி முடிவுகள்

கரவெட்டி,ஏப்.20

வடமராட்சிக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையில் மெய்வன்மைப் போட்டிகள் இடம்பெற்றன.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்களில் 11 வயது, 13 வயது, 15 வயது, 17 வயது, 19 வயதுப் பிரிவினர்களின் முடிவுகள் கடந்த இருதினங்களாக வெளியாகின.

வெற்றி பெற்றோரில் 21 வயதுப் பிரிவினரின் முடிவுகள் இன்று வெளியாகின்றன.

**முடிவுகள் வருமாறு:-**

**21 வயதுப் பிரிவு**

**ஆண்கள்**

100 மீற்றர் - கு.குலராஜ் (நெல்லியடி ம.ம.வித்.), மு.ரகுவர்மன் (விக்னேஸ்வராக் கல்லூரி), த.சிந்துஜன் (ஹாட்லிக் கல்லூரி).

200 மீற்றர் - கு.குலராஜ் (நெல்லியடி ம.ம.வித்), சி.கௌரிசங்கர் (ஹாட்லிக் கல்லூரி), மு.ரகுவர்மன் (விக்னேஸ்வராக் கல்லூரி).

400 மீற்றர் - பு.டனுஷியன் (சிதம்பராக் கல்லூரி), சி.கருணாகரன் (நெல்லியடி ம.ம.வித்), வ.ரமேஸ்குமார் (விக்னேஸ்வராக் கல்லூரி).

800 மீற்றர் - தெ.ஜெயந்தன் (நெல்லியடி ம.ம.வித்.), பு.டனுஷியன் (சிதம்பராக் கல்லூரி), ந.விஜயகுமார் (விக்னேஸ்வராக் கல்லூரி).

1500 மீற்றர் - தெ.ஜெயந்தன் (நெல்லியடி ம.ம.வித்.), இ.சிறிகரன் (வேலாயுதம் ம.வித்.), செ.சண்முகராசா (தொண்டமானாறு ம.வித்.).

5,000 மீற்றர் - தெ.ஜெயந்தன் (நெல்லியடி ம.ம.வித்.), இ.சிறிகரன் (வேலாயுதம் ம.வித்.), சி.பழனி (வேலாயுதம் ம.வித்.).

110 மீற்றர் தடைதாண்டல் - இ.விஷ்ணுகாந்தன் (நெல்லியடி ம.ம.வித்.), க.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி), ம.சத்தியேந்திரன் (நெல்லியடி ம.ம.வித்.).

400 மீற்றர் தடைதாண்டல் - க.கபிலன் (ஹாட்லிக் கல்லூரி), இ.விஷ்ணுகாந்தன் (நெல்லியடி ம.ம.வித்.).

நீளம் பாய்தல் - வ.ரமேஸ்குமார் (விக்னேஸ்வராக் கல்லூரி), கு.குலராஜ் (நெல்லியடி ம.ம. வித்.), த.பரமேஸ்வரன் (உடுப்பிட்டி அ.மி.க.).

உயரம் பாய்தல் - ந.அந்தணன் (நெல்லியடி ம.ம.வித்), ஜெ.பிரசாத் (சிதம்பராக் கல்லூரி), தி.வினோத் (நெல்லியடி ம.ம.வித்.).

முப்பாய்ச்சல் - வ.ரமேஸ்குமார் (விக்னேஸ்வராக் கல்லூரி), ஜெ.பிரசாத் (சிதம்பராக் கலலூரி), கு.மணிமாறன் (ஹாட்லிக் கல்லூரி).

கோல் ஊன்றிப் பாய்ச்சல் - யோ.லலித்குமார் (ஹாட்லிக் கல்லூரி).

குண்டெறிதல் - நா.சிவகணேசன், த.கிருபாகரன், மா.நெடுமாறன்.

தட்டெறிதல் - அ.கிருபாகரன் (ஹாட்லிக் கல்லூரி), க.பிரகாஸ் (ஞானசாரியார் கல்லூரி).

ஈட்டியெறிதல்- சி.கௌரிசங்கர் (ஹாட்லிக் கல்லூரி), செநிஷாந்தன் (விக்னேஸ்வராக் கல்லூரி), இ.விஜிதரன் (விக்னேஸ்வராக் கல்லூரி).

4x100 அஞ்சல் - நெல்லியடி ம.ம.வித்., ஹாட்லிக் கல்லூரி, விக்னேஸ்வராக் கல்லூரி.

4x400 அஞ்சல் - நெல்லியடி ம.ம.வித்., விக்னேஸ்வராக் கல்லூரி.

**பெண்கள்**

100 மீற்றர் - ம.மேரி அனுஷியா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), ர.ரத்னாதேவி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), இ.சர்மிளா (நெல்லியடி ம.ம.வித்.).

200 மீற்றர் - ம.மேரி அலேஷா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), ம.மேரி அனுஷியா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), இ.சர்மிளா (நெல்லியடி ம.ம.வித்.).

400 மீற்றர்- க.ஜீவிதா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), ம.மேரி அலேஷா (மெதடிஸ்த பெண்கள் உ. பாடசாலை), சிறி.சிறிரஞ்சினி (சிதம்பராக் கல்லூரி).

800 மீற்றர் - சிறி.சிறிரஞ்சனி (சிதம்பராக் கல்லூரி), மோ.லோகேஸ்வரி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ச.சிறிவாசுகி (சிதம்பராக் கல்லூரி).

1,500 மீற்றர் - சிறி.சிறிரஞ்சினி (சிதம்பராக் கல்லூரி), சு.சுகிர்தனி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மோ.லோகேஸ்வரி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

3,000 மீற்றர் - கி.நிறஞ்சனா (ஞானசாரியார் கல்லூரி), மோ.லோகேஸ்வரி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

100 மீற்றர் தடைதாண்டல் - செ.சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜெ.இந்துஜா (வல்வை மகளிர் கல்லூரி).

400 மீற்றர் தடைதாண்டல் - க.ஜீவிதா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை).

நீளம் பாய்தல்- து.துஸ்யந்தினி (நெல்லியடி ம.ம.வித்.), செ.சோபனா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ர.ரத்னாதேவி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி).

உயரம் பாய்தல் - ம.மேரி அனுஷியா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), க.ஜீவிதா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை).

குண்டெறிதல் - கு.லீணாவாஹினி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), கு.பிரேமலதா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), ஜெ.சுதர்சனா (சிதம்பராக் கல்லூரி).

தட்டெறிதல் - ம.சலூஜா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), ஜெ.சுதர்சனா (சிதம்பராக் கல்லூரி), வி.நிர்மலாதேவி (சிதம்பராக் கல்லூரி).

ஈட்டியெறிதல் - கு.பிரேமலதா (மெதடிஸ்த பெண்கள் உ.பாடசாலை), ஜெ.சுதர்சனா (சிதம்பராக் கல்லூரி), வி.நிர்மலாதேவி (சிதம்பராக் கல்லூரி).

4x100 அஞ்சல் - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, சிதம்பராக் கல்லூரி.

4x400 அஞ்சல் - சிதம்பராக் கல்லூரி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி. (3-70-203)

உ

ஓம்

ஸ்ரீ ராம ஜெயம்

**யாழ்ப்பாணம் – வண்ணை**

**ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**

**ஏகாதசி உற்சவம்**

நிகழும் பார்த்திப வருடம் சித்திரை மாதம் 7ஆம் நாள் (20.04.2005) புதன்கிழமை மாலை 5.15 மணிக்கு ஆலயத்தில் ஏகாதசி உற்சவம் நடைபெறும். அடியார்கள் இவ்வுற்சவத்தில் பங்குபற்றி ஸ்ரீமந் நாராயணன் அருள்பெற்று ஸ்ரீ மகாலக்ஷ்மி விலாச சம்பன்னராக வாழ்வீர்களாக.

– அறங்காவலர் சபை.

பெருமாள் கோயில், யாழ்ப்பாணம். (சி.42199) (39-18-16-26)


# விவசாயிகள் தற்கொலையால் ஜே.வி.பிக்குள் முரண்பாடுகள்

கொழும்பு,ஏப்.20

உற்பத்தி செய்த நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலையில் பொலன்னறுவை மாவட்ட விவசாயிகள் தற்கொலை செய்துகொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். இதனால், விவசாயத்துறை அமைச்சைத் தம்வசம் வைத்திருக்கும் ஜே.வி.பியினருக்குள் பெரும் கருத்து முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உற்பத்தி செய்த நெல்லைச் சந்தைப்படுத்த முடியாத நிலையில் ஏற்பட்ட விரக்தியினால் விவசாயிகள் தற்கொலை செய்துகொண்டு வருகின்றனர். இவ்வாறு 3 விவசாயிகள் இது வரை தற்கொலை செய்துள்ளனர். விவசாயத்துறை அமைச்சரே இந்த நிலை ஏற்படக் காரணமெனப் பொதுவாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் கொழும்பில் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அழைத்து முக்கிய பேச்சு நடத்தியிருக்கும் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, விவசாய அமைச்சை ஜே.வி.பி.வைத்திருக்கும் சூழ்நிலையில் விவசாயிகள் இவ்வாறு தற்கொலை செய்துகொள்வதும், அதனால் ஏற்படும் தாக்கங்களும், ஜே.வி.பியினருக்குப் பெரும் பின்னடைவைத் தருமென்று கூறியிருக்கிறார். இந்த நிலையில், இந்த விவகாரத்திற்கு முடிவு கட்டும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதற்கும், நெல்லைக் கூடிய விலையில் கொள்வனவு செய்யமுடியாத நிலை குறித்து மக்களுக்கு விளக்கமளிப்பதற்கும் ஜே.வி.பி. தயாராகி வருகின்றது எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## அநுராதபுர வாவியில் குண்டுகள் மீட்பு

அநுராதபுரம், கண்டி வாவியிலிருந்து அதி சக்திவாய்ந்த நான்கு கைக்குண்டுகள் அநுராதபுரம் பொலீஸாரால நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுளளது.

வாவியில் நீராடிக்கொண்டிருந்த இளைஞர்கள் சிலர் வழங்கிய தகவலினடிப்படையில் அங்குசென்ற பொலீஸார் இந்தக் குண்டுகளைக் கைப்பற்றினர்.

கே.400 ரக சக்திவாய்ந்த நான்கு குண்டுகளே வாவியின ஒரு மூலைப் பகுதியிலிருந்து கைப்பற்றப்பட்டன எனக்கூறும் அநுராதபுரம் பொலீஸார் இது சம்பந்தமாக மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

இராணுவத்தின் குண்டு செயலிழக்கும் பிரிவினர் இக்குண்டுகளைச் செயலிழக்கச் செய்தனர். (க-3)

## வெள்ளத்தினால் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவு

தென்மராட்சி,ஏப்.20

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த வருடம் ஏற்பட்ட மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் இம்மாத இறுதிக்குள் வழங்கப்படவுள்ளன.

இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கென யாழ்.செயலகத்தினால் வழங்கப்பட்ட 35 லட்சம் ரூபா, பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பகிர்ந்து வழங்கப்படவுள்ளன.

இப்பிரதேசத்தில் 800 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மழை வெள்ளத்தின்போது வீடுகளை முற்றாக இழந்த குடும்பங்களுக்கு 20 ஆயிரம் ரூபா வரையும் வீட்டின் ஒரு பகுதி சேதமடைந்த குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வரையும் சேதத்திற்கு ஏற்றவாறு நஷ்டஈடு வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் தொகை அதிகமாக உள்ளதால் கிடைத்த நிதியை சேதத்திற்கு ஏற்ப பகிர்ந்தளிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், ஒரு குடும்பத்திற்கு 3 ஆயிரம் ரூபாவிலிருந்து 5 ஆயிரம் ரூபா வரை வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (8-117)


**இலங்கை வங்கி**

**முக்கிய அறிவித்தல்**

எமது யாழ். மேற்றரக்கிளை, யாழ்.இரண்டாம் கிளை மற்றும் திருநெல்வேலிக்கிளை வாடிக்கையாளருக்கு விரைவான வங்கிச் சேவையை வழங்குவதற்கான புதிய கணனிமுறை ஒன்றினை அறிமுகம் செய்யவிருப்பதால் வாடிக்கையாளர்களுக்கு ஏற்படும் கீழ்க் குறிப்பிடப்பட்ட அசௌகரியங்களுக்காக எமது வருத்தத்தினைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

1) எதிர்வரும் சனிக்கிழமை (23.04.2005) அன்று வங்கி திறக்கப்பட மாட்டாது.
2) தன்னியக்கப் பணம் வழங்கும் இயந்திரம் (ATM) 21.04.2005 வியாழக்கிழமை பி.ப. 4 மணியிலிருந்து 25-04-2005 திங்கட்கிழமை மு.ப. 8 மணி வரை மூடப்பட்டிருக்கும்.
3) 21.04.2005 வியாழக்கிழமை மு.ப. 11 மணி வரை மட்டுமே வங்கி திறக்கப்பட்டிருக்கும்.

உதவிப் பொது முகாமையாளர்,
இலங்கை வங்கி,
வடபிராந்திய அலுவலகம், யாழ்ப்பாணம்.

(C/42378)(32-18-16-26)



**வலிகாமம் மேற்குப் பிரதேச சபை – சுழிபுரம்**

வேலைகளுக்கான

**கேள்வி அறிவித்தல்**

பின்வரும் விவரப்படி இக்ராட் பதிவுபெற்ற ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

*கேள்விப்படிவம் பெறல் 25-04-2005 நண்பகல் 12 மணி வரை*
*கேள்விப்படிவம் ஏற்றல் 05-05-2005 நண்பகல் 12 மணி வரை*
*கேள்விகள் திறத்தல் 05-05-2005 பிற்பகல் 2 மணி வரை*

| வேலையின் பெயர் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு | கேள்விப் பத்திரப் பணம் வற்வரியுடன் |
|---|---|---|
| 1. சங்கானை முச்சக்கரவண்டி நிறுத்துவதற்கான இரும்பு எல்லை வேலி அமைத்தல் | 400.00 | 345.00 |
| 2. சங்கானை உப அலுவலக மதில் அமைத்தல் | 5000.00 | 575.00 |
| 3. கரைச்சி சுடலை வீதி திருத்தம், சங்கானை | 5000.00 | 575.00 |
| 4. சங்கானை ஆஸ்பத்திரி வீதி திருத்தம் | 5000.00 | 575.00 |
| 5. சுழிபுரம் உப அலுவலகத் திருத்தம் | 500.00 | 345.00 |
| 6. சுழிபுரம் ஆயுர்வேத வைத்தியசாலை திருத்தம் | 1650.00 | 575.00 |
| 7. பாண்டவெட்டை வீதி திருத்தம் | 2600.00 | 575.00 |

மேற்படி கேள்விப்பத்திரத்தின் மறுபிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

மேலதிக விவரங்களையும் நிபந்தனைகளையும் தலைமையலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

திருமதி பு.சிவலிங்கம்,
செயலாளர்,
வலிகாமம் மேற்குப் பிரதேச சபை,
சுழிபுரம்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபை.
தலைமையலுவலகம்.
சுழிபுரம். 2005.04.15 (c-42382)(26-18-16)



SRI LANKA RED CROSS SOCIETY

**கூறுவிலை கோரல்**

இலங்கை செஞ்சிலுவைச்சங்க யாழ்.கிளையும் கனடா செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்துகின்ற சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான சுகாதாரப் பொதிகள் விநியோகத்திற்காக பின்வரும் பொருளகளின் கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

| இல. | பொருள்கள் | அலகு |
|---|---|---|
| 01 | பற்பசை | 42000 |
| 02 | பற்தூரிகை | 42000 |
| 03 | சம்போ 100ml | 42000 |
| 04 | வாசனை சவர்க்காரம் | 42000 |
| 05 | சலவை சவர்க்காரம் | 42000 |
| 06 | சுகாதாரத் துவாய் (Feminin Towels) | 14000 (பக்கேற்) |
| 07 | சவர அலகுகள் (Disposable) | 42000 |
| 08 | துவாய்கள் - நடுத்தரம் | 42000 |
| 09 | ரப்பர் செருப்புகள் | 42000 (சோடி) |
| 10 | பிளாஸ்ரிக் கூடைகள் (பெரியது) - (Heeavy duthy Bags) | 10000 |

மேற்கூறிய பொருள்களுக்கான கூறுவிலைகளை மாதிரிகளுடன் (Samples) சமர்ப்பிக்கவும் ,மீளளிக்கத்தகாத வைப்புப் பணமாக ரூபா 1000/=ஐ செலுத்திப் பூர்த்திசெய்யப்பட்ட கேள்விக்கோரல்களை 28-04-2005ஆம் திகதிக்கு முன்னதாக இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ்.கிளை, 73, கண்டி வீதி என்னும் முகவரிக்கு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.

கொழும்பில் பொருள்களை விநியோகிக்கக் கூடியவர்கள் கொழும்பு விலையிலும் யாழ்ப்பாணத்தில் விநியோகிக்கக் கூடியவர்கள் யாழ்ப்பாணத்து விலையிலும் இரண்டு இடங்களிலும் விநியோகிக்கக் கூடியவர்கள் தனித்தனியாகவும் விலைகளைக் குறிப்பிடவும்.

கேள்விகோரல் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "கேள்விக்கோரல்" என்று குறிப்பிடல் வேண்டும்.

*குறிப்பு:* மேலதிக விவரங்களுக்குக் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

021 - 222 - 6939,
0776669228.

கௌரவத் தலைவர்,
இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்.
(சி-42380)(26-18-16)



**மூன்றாம் ஆண்டு நினைவு நாள்**



தோற்றம் 08 – 11 – 1956

மறைவு 20 – 04 – 2002

**அமரர் சபாரட்ணம் ஜெகநாதன்**

(மல்க்கன்- சித்தன்கேணி)

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
மூன்று ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் அன்பு முகம் மறக்கமுடியாது!
உங்கள் நினைவும் எங்கள் நெஞ்சை விட்டு அகலாது.

"கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்கள் பாக்கியவான்கள்
பரலோக ராஜ்யம் அவர்களுடையது"
"நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்"
(நீதி 14:32)

அன்பு மனைவி
மற்றும் குடும்பத்தினர்.


தகவல்:
ஜெ.வதனி. சித்தன்கேணி. (44394) (39-18-16-26)








**ஈர விழிகளுடன் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**



*தாய் மடியில்* 03 – 01 – 1951

*இறையடியில்* 01 – 05 – 2004

**அமரர் வீரகத்தி இராசரத்தினம்**

(சுதன் இலட்சுமி லொறி உரிமையாளர்)

*திதி: 20.04.2005*

இன்று நீ இல்லை எம்முடனே
என்று நாம் மறப்போம் உன் முகத்தை?
நன்று தான் செய்வதிலே நிகரெங்கே உனக்கு
இன்று நீ எங்குற்றாய் ஏன் மறந்தாய் எம்மை?
ஒன்று மட்டும் உறுதி
என்றும் மறப்பதில்லை உறைகின்றாய் எம் நெஞ்சில்
ஈர விழிகளுடன் இறைவனை இறைஞ்சுகின்றோம்
இறையடியில் பெறுக சாந்தி!

–மனைவி, மகன்
(ஜேர்மனி).

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி. (44119)(39-18-16-26)

# பெரும் எண்ணிக்கையில் உயிரிழப்பை ஏற்படுத்தும் ஆயுதங்கள்

# இருக்கும் இடங்களில் அமைதி முறையிலான அழிப்பே உகந்தது

## உலகை அச்சுறுத்தும் ஆயுதங்கள் பற்றி நிபுணர்கள் எச்சரிக்கிறார்கள்

**கனடா வோட்டலு வில்பிரட் லொறிவர் பல்கலைக் கழகத்தில் ஐ.நா. சபையினைச் சீரமைப்பது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற மாநாட்டில் இலங்கை அரசின் சார்பில் சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால உரை நிகழ்த்தினார். அவ்வுரையின் தமிழாக்கத்தின் ஒருபகுதி 18ஆம் திகதி உதயனில் வெளிவந்தது. அதன் இரண்டாம் பகுதி இங்கு தரப் படுகின்றது.**



[illegible]ரிய மக்கள் அழிவை ஏற்படுத்தும் பயங்கரவாதமானது சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக இருக்கின்றது என்பதைச் சர்வதேச சமூகம் சந்தேகமின்றி ஏற்றுக்கொண்டுள்ளது. எனவே, இந்த அபாயத்தைத் தடுக்கும் எல்லாவித செயற்பாடுகளிலும் ஐ.நா. மத்திய நிலை வகிகக வேண்டும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

கூட்டுறவு பாதுகாப்பு என்பது ஓர் அர்த்தமுள்ள கொள்கையாக இருக்கவேண்டுமானால் சகல உறுப்பு நாடுகளும் முனைப்புடன ஒத்துழைப்பதன் மூலம் இந்த அபாயத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

இராணுவ நடவடிக்கை போன்ற செயற்பாடுகளுக்குப் பதிலாக அமைதியான முறையில் இந்த வதமான பயங்கரவாதத்தின் அபாயத்தைத் தவிர்க்க முயல்வது மேன்மையான காரியம். பெரும் எடுப்பில் உயிரிழப்புக்களை ஏற்படுத்தும் ஆயுதங்கள் இருப்பதாகச் சந்தேகிக்கப் படும் இடங்களில் இராணுவ நடவடிக்கை எடுத்து அழிபபதானது, உயிர் அபாயங்களையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்துவதாய் அமையும்.

சர்வதேச மட்டத்தில் இந்த விதமான ஆயுதங்கள் பரவாமல் தடுப்பதற்கான ஏராளமான யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உதாரணமாக "பரவல் பாதுகாப்பு முன் முயற்சி" (Proliferation Securty Initiative (PSI) யைக்குறிப்பிடலாம். இது நிச்சயமாகப் பெருமளவு உயிரிழப்பை ஏற்படுத்தும். ஆயுத பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத தும். இவைகளால் குறிப்பாகப் பாரிய மனித அழிவை ஏற்படுத்தும் ஆயுதங்கள் போன்றவற்றுக்குப் பொருத்தமானவை. உதாரணமாக சமீபத்தில் வெளிவந்த - அணு பாதுகாப்புக்கான ஒரு நிலைப்பாடு - அறிக்கையைக் குறிப்பிடலாம். இதில் ஆறு கட்டுப்பாடுகள் குறிக்கப்படுகின்றன.

✪ சிதறடிக்கும் பொருள் உற்பத்தி மற்றும் அணுஆயுதப் பரவல் தடை ஒப்பந்தத்திலிருந்து விலகிக்கொள்வது ஆகியவை தொடர்பான விதிகளை இறுக்குவதன் மூலம் ஆயுதப் பரவல் தடையை மாற்ற முடியாமல் செய்வது.

✪ அணு ஆயுதங்கள் தொடர்பான பணதின் அரசியல் மற்றும் இராணுவ மதிப்பைக் குறைத்துவிடுவது.

✪ சகலவிதமான அணுப் பொருள்களுக்கும் இறுக்கமான தரங்களை நிர்ணயிப்பதன் மூலம் அவைகளின் பாதுகாப்பை பலப்படுத்தல்.

✪ ஐ.நாபாதுகாப்பு சபையின் 1540 போன்ற தீர்மானங்களை நிறைவேற்றும் வகையில் தேசிய சட்டங்களை உருவாக்கி சட்டவிரோதமாக இவ்வாயுதங்கள் கைமாறுவதைத் தடுத தல்.

✪ ஆயுதப் பரவல் தடை செயற்பாடுகள் மாத்திரம் போதுமானவையல்ல என்பதால் பிணக்குகள் தொடர்பான தீர்மானங்களையும் செயற்படுத்துதல்.

✪ அணுஆயுதப் பரவல்தடை ஒப்பந்தத்திற்குட்பட்ட நாடுகளின் கடமைப்பாடுகளை இந்தியா, இஸ்ரேல், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை ஏற்றுக்கொள்ள ஊக்கப்படுத்துவதன் மூலம் இந்த ஒப்பந்தத்திற்கு அப்பால் காணப்படும் இந்த மூன்று நாடுகளினதும் பிரச்சினையைத் தீர்த்துவைத்தல்.

இந்தச் சிபாரிசுகளைத் தேவையான மாறுதல்களுடன், பாரிய உயிர் அழிவை ஏற்படுத தும் ஏனைய ஆயுதங்கள் விடயத்திலும் பயன் படுத்தலாம். ஐ.நாவின் முனைப்பான உதவியுடன் அல்லது சம்பந்தப்படும் ஒப்பந்த நிறுவனங்களின் உதவியுடன் அவைகள் மேற்கொள்ளப்படலாம். பாரிய உயிர் அழிவை ஏற படுத்தும் பயங்கரவாதம் தொடர்பாக மார்ச் 11ஆம் திகதிய மட்றிட் நிகழ்ச்சித் திட்டத்திலும் குறிப்பான சிபாரிசுகள் காணப்படுகின்றன.

### நியாயமான எதிர்பார்ப்பு

சர்வதேச அமைதியையும் பாதுகாப்பையும் பராமரிப்பதற்கு 191 உறுப்பினர்களால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஒரேயொரு உலகளாவிய அமைப்பு என்ற முறையில் பயங்கரவாதத்திற்கு எதிரான மிக முக்கிய அங்கமான ஐ.நா இந்த பயங்கரவாதத்தை முறியடிப்பதற்கான உலகப் போராட்டத்தின் முன்னணியில் நிற்கவே வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுவது நியாயமே. இந்தக் காரியமானது, ஏனைய முயற்சிகளைப் பிரதி பண்ணும் வகையிலும் மற்ற அமைப்புகளும் பன்முக நிறுவனங்கள் 'இன்ரபோல்' போன்றவை செய்துளள வேலைகளில் குறுக்கிடாத வகையிலும் முரண பாடு அற்றதாக இருத்தல் வேண்டும்.

உயர் மட்டக்குழுவினால் பயங்கரவாதம் தொடர்பாக வெளியிடப்பட்ட வரைவிலக் கணமானது ஐ.நா செயலாளர் நாயகத்தினாலும் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டுள் ளமை, ஏற்கனவே தாமதமாகிவிட்ட அணு ஆயுதப் பயங்கரவாதத்தை தவிர்ப்பதற்கான உடன்படிககையொன்றை செய்து கொள்வதற்கான ஆலோசனைகளை முடிவுக்குக் கொண்டு வரவேண்டிய கடமைப்பாடுகளை மட்டுமன்றி அதற்கப்பாலும் ஏற்படக்கூடிய விளைவுகளை உணர்த்தி நிற்கின்றன.

ஜெனிவா உடன்படிக்கையை சுட்டிக் காட்டியிருப்பதானது யுத்தங்களில் மனிதத்துவக கோட்பாடுகளைக் கடைப்பிடிக்க வேண டியதை எடுத்துக்காட்டுகின்றது. சர்வதேச நீதிமன்றம் 1996 ஆம் ஆண்டு விடுத்த ஓர் ஆலோசனைக் கருத்தில், அணு ஆயுதங் களைப் பயன்படுத்துவதானது பொதுவாகத் தற்போது நடைமுறையிலுள்ள போர் தொடர் பான மனிதத்துவ கோட்பாடுகளுக்கு முர ணானசெயல் என்று தீர்ப்பளித்திருந்தது.

அந்தவகையில், நாடுகள் அணு ஆயுதம் உட்பட பாரிய அளவில் உயிர்களைப் பலி கொள்ளும் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கு எதிராக மேற்கண்ட வரைவிலக்க ணம் ஒரு சட்டபூர்வமான தடையை ஏற்படுத்தியுள்ளது.

உயிரியல் ஆயுத உடன்படிக்கை, மற்றும் இரசாயன ஆயுத உடன்படிக்கை சம்பந தப்பட்ட நாடுகளைப் பொறுத்தவரை இது நியாயமே. அதேசமயம், அரச சார்பற்ற தரப்புகளும் இந்த ஆயுதங்களைப் பயன்படுத்துவதை உலக மட்டத்தில் தடை செய்கின்றது. இந்த ஆயுதங்களைப் பாவிப்பதற்கு உணமையாகவே தடையில்லாத இடங்களிலும் அணு ஆயுதங்களை இது தடை செய்கின்றது.

### விரிவான உடன்படிக்கை

பெரும் எண்ணிக்கையில் உயிர்களைக் கொல்லும் ஆயுதங்களைத் தடைசெய்யும் விடயத்தில் பயங்கரவாதம் தொடர்பான விரிவானதோர் உடன்படிக்கை உருவாக்கப்படுவது அவசியமாகின்றது. ஆனால், பெரும் எண்ணிக்கையில் உயிர் பலியாக்கும் ஆயுதங்களைத் தடை செய்யவேண்டிய பெரிய பிரச்சினையைக் கவனிக்காமல் இதில் ஈடுபடுவது பெரும் இக்கட்டுகளையே ஏற்படுத்தும். அரசு அல்லாதவர்களிடம் இவ்வித ஆயுதங்கள் இருப்பதை தடை செய்வது முனைப்பாகச் செயற்படவேண்டுமானால் உலகளாவிய விதத்தில் ஓர் நெறிமுறை ஏற்படுத்தப் படவேண்டும். சில நாடுகள் இந்தவித ஆயுதங்கள் வைத்திருக்க அனுமதிக்கப்படலாம் என்ற வாதம் தாக்குப்பிடிக்கக் கூடியதல்ல. அதே சமயம் சில நாடுகள் அணு ஆயுதங்களை வைத்துக் கொண்டிருக்கும் வரை அரசு அல்லாத தரப்பினர் இவ்வித ஆயுதங்களை வைத்திருப்பதும் பாவிப்பதும் உலக அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் என்று வாதிப்பதும் பொருத்தமாகாது. எதுவானாலும் பெரும் எண்ணிக்கையில் உயிர் அழிவைக் கொண்டுவரும் ஆயுதங்களைத் தவிர்ப்பதற்கென வேறு பல யோசனைகளும் முன் வைக்கப்பட்டுள்ளன. அவை செயற்படுத்தப் படக் கூடியவை. செயற்படுத்தப்பட வேண்டியவையும் கூட.

அவைகளில் ஏற்கனவே குறிப்பிட்ட ஐ.நா. கொள்கை செயற்பாட்டுக் குழுவினர் சிபாரிசுகளும் அடங்கும்.

அணு மற்றும் இரசாயனப் பொருள்கள் மீதான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் தற்போது ஐ.நா.வுக்கு வெளியில் அணு வழங்கும் குழு (NSG) வினாலும் அவுஸ்திரேலிய குழுவினாலும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவை பாரபட்சமானவை என்று கருதப்படுகின்றது. இவ்வித பயங்கரவாத ஆயுதங்கள் இறுக்கமான ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் மூலம் பரவாமல் தடுப்பதற்கு ஏற்றுமதி செய்யும் மற்றும் அவைகளைப் பெற்றுக்கொள்ளும் நாடுகளுககிடையில் ஐ.நா. மட்டத்தில் கலந்துரையாடல்கள் இடம்பெறுவது அவசியமாகின்றது. (ப)

(தொடரும்)

# பொதுக்கட்டமைப்பு தேவை அற்றது!

### மீண்டும் அடித்துக் கூறுகிறது ஜே.வி.பி.

கொழும்பு,ஏப்.20

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பொன்றை புலிகளுடன் சேர்ந்து ஏற்படுத்துவது தொடர்பில் அரசின் பங்காளிக் கட்சிகளுடன் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பேச்சுகளை நடத்தவுள்ளார் எனச் செய்திகள் வெளிவந்துள்ள நிலையில் -

பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தனது நிலைப்பாட்டில் எந்தவித மாற்றமும் இல்லையென்று ஜே.வி.பி. நேற்றுமுன்தினம் திட்டவட்டமாக தெரிவித்துவிடடது. பொதுக்கட்டமைப்பே தேவை அறறது என்றும் அது அடித்துக் கூறியுள்ளது.

பொதுக்கட்மைப்புத் தொடர்பான தமது கட்சியின் நிலைப்பாட்டை மீளவும் வலியுறுத்திய ஜே.வி.பி. பிரமுகரும் மீன்பிடித்துறை அமைச்சருமான சந்திரசேன விஜேசிங்க, ஆழிப் பேரலை அனர்த்த நிவாரண, மீள்கட்டுமானப் பணிகளுக்காக வடக்கு - கிழக்கிற்கென பொதுக்கட்டமைப்பொன்றை உருவாக்குவது, இருக்கும் பிரச்சினையை மேலும் சிக்கலாக்கி விடுமென்று தெரிவித்தார்.

இந்தப் பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜே.வி.பியின் நிலைப்பாடு குறித்து அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க மேலும் கூறியதாவது:-

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்வது அரசின் கடமையாகும். இங்கே தெற்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அரச நிர்வாகக் கட்டமைப்பின் ஊடாகவே அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. கிராம சேவையாளர்கள், பிரதேச செயலாளர்கள், அரச அதிபர்கள் ஊடாக இவை முன்னெடுக்கப்படுகின்றன.

எனவே, இதே சூழ்நிலை வடக்கு - கிழக்கில் இருக்கும்போது - அங்கும் மக்களின் பிரதிநிதிகளும் அரச நிர்வாகமும் இருக்கும் போது - இதற்கு அப்பால் சென்று பொதுக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது அர்த்த மற்றது. இது இருக்கும் பிரச்சினையைவிட மேலதிகப் பிரச்சினையொன்றை உருவாக்கும். எனவே, இந்த விடயத்தில் நாம் எமது நிலைப்பாட்டை முன்னரே தெரிவித்துவிட்டோம். இன்னும் அதே நிலைப்பாட்டில்தான் இருக்கிறோம். அதில் எவ்வித மாற்றமும் இல்லை.

- இவ்வாறு அமைச்சர் சந்திரசேன விஜேசிங்க மேலும் கூறினார். (க-3)



**பழமைவாய்ந்த குருநகர் புதுமை மாதா ஆலயத்தின் பீடத்தை அண்டிய பகுதி உடைத்துத் திருத்திக்கட்டப்பட்டு வருகிறது.**

**கடந்த பல வருடங்களாக நடைபெற்ற யுத்தம் காரணமாக இவ்வாலயம் சேதமடைந்ததுடன் ஆலயத்தின் பீடத்தை அண்டிய பகுதிகளில் வெடிப்புகளும் ஏற்பட்டிருந்தன.**

**தற்போது அந்தப் பங்கு மக்களின் நிதி உதவியுடன் மேற்படி ஆலயம் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.**

*(படம்: குருநகர்ச் செய்திளார்)*

# புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.3 - விடைகள்

**நேற்று செவ்வாய்க்கிழமை உதயனில் வெளியான ஐந்தாம் தரத்திற்குரிய புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.3 இற்கான விடைகள் வருமாறு:**

வினாத்தாள் - I

(01) 2 (02) 3 (03) 3 (04)2 (05) 1
(06) 1 (07) 3 (08) 3 (09) 4 (10) 2
(11) 3 (12) 2 (13) குளிர் (14) ஒளி
(15) 4 (16) 2 (17) 2 (18) 3 (19)2
(20) 1 (21)பிழை (22) சரி
(23) A,F (24) 3 (25) 1 (26) 3
(27) 2 (28) (1)10 (29) (3)27 (30)3
(31) 2 (32) 2 (33) 1 (34) 2 (35)3
(36) 3 (37) 2 (38) 1 (39) 2 (40) 3

வினாத்தாள் - II

(01)
1) காற்றுக்கு
2) மான்போல / காற்றாய்ப் பறந்து வந்த
3) அரசசார்பற்ற நிறுவனம்
4) மிக வேகமாகச் செல்லுதல்
5) உதவி செய்தல்
6) மூச்சுப் பேச்சு / தாறுமாறாக
7) விதவை / கைம்பெண்
8) பாதை / வழி / தெரு
9) வைத்தியம் 10) குருதி
11) பாதை 12) அலங்கோலம்
13) இறக்கி 14) பல
15) தாய்மார் 16) மோதின
17) வாகனங்கள்
18) கிடந்தாள் / வந்தாள் / திகைத்தாள்
19) மோதியது 20) Twelve
21) Blood 22) First Aid
23) Hospital

(02)
1. சிறுவன் பந்து அடித்தான்
2. உனது பெயர் என்ன?
3. நான் தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைப் படித்தேன்.

(03)
1) 2 2) 3 3) 1 4) 3 5) 4

(04)
1) சீனப்பட்டம்
2) விளையாட்டுக் காற்றாடி / பம்பரவிசிறி
3) காந்தப் பாம்பு

(05)
1) கேட்பவன்
2) பார்வையாளன்
3) வாசகன்
4) எழுத்தாளன்

(06)
1) 5 2) 2 3) 1
4) 4 5)3

(07)
1) விளையாட்டுப்போட்டி
2) கிளிகள் 3) பச்சை
4) மிக நன்று / மிகவும் நல்லது
5) காடு

(08)
1) வேர் / வேர் மயிர்கள்
2) கற்பூரவள்ளி
3) புரதம்

(09)
1) 2050g 2) 8 மணித்தியாலம்
3) 1m 35cm 4) 3/4
5) 2

(10)
1) Puppy 2) Where
3) Your 4) Yesterday
5) Night

(11)
1) மல்லி 2) கபு (ட்)டா
3) அச 4) இற

(12)
1) 6 2) 11

(13)
1) ஊதா 2) பச்சை

(14)
1) 37 ரூபா 50 சதம்
2) 1 kg 300g
3) ரூபா 113.50
4) 10 ரூபா 5) 1 ரூபா 50 சதம்
6) 18 ரூபா
7) 386 ரூபா 50 சதம்

(15) பொருத்தமான வசனங்கள்

**புள்ளித்திட்டம்**

வினாத்தாள் I :
40x2 ½ = 100 புள்ளி

வினாத்தாள் II :
1) 23 புள்ளிகள் 6) 5 புள்ளிகள் 11) 4 புள்ளிகள்
2) 3 புள்ளிகள் 7) 5 புள்ளிகள் 12) 2 புள்ளிகள்
3) 5 புள்ளிகள் 8) 3 புள்ளிகள் 13) 2 புள்ளிகள்
4) 3 புள்ளிகள் 9) 10 புள்ளிகள் 14) 14 புள்ளிகள்
5) 4 புள்ளிகள் 10) 5 புள்ளிகள் 15) 12 புள்ளிகள


## இந்தியாவில் உயர்கல்வி வாய்ப்பு

**Muthayamal Educational Institutions**

RASIPURAM - 637 408. NAMAKKAL - (DT) TAMILNADU. www.muthayammal.com



இந்தியாவில் பிரபல்யமான முத்தயம்மாள் கல்வி நிறுவனமானது **ANNA (Engineering) UNIVERSITY - PERIYA UNIVERSITY** ஆகியவற்றின் பட்டதாரி **(Degree Courses)** நெறிகளை வழங்கி வருகிறது. இலங்கையில் **A/L** சித்தியடைந்த மாணவர்கள் இக்கல்லூரியில் பின்வரும் நெறிகளில் சேர்ந்து உலகளாவியரீதியில் அங்கிகரிக்கப்பட்ட ஒரு பட்டதாரியாக வாய்ப்பு.

| பாடநெறி | காலஅண்டுகள் | உட்பிரவேச தகைமைகள் |
|---|---|---|
| B.E. Computer Science & Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Communication Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Electrical & Electronics Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Eletronics & Instrumentation Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.E. Mechanical Engineering | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Tech Information Technology | 4 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Computer Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc. Infornation Technology | 3 Years | A/L Passes in Maths, Physics, Chemistry |
| B.Sc.Biochemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc.Microbiology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Biotechnology | 3 Years | A/L Passes in Physics, Chemistry, Biology |
| B.Sc. Bio-Informatics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Maths | 3 Years | A/L Passes in Maths,Chemistry,Physics |
| B.Sc. Physics | 3 Years | A/L Passes in Maths, Physics |
| B.Sc. Electronics | 3 Years | A/L Passes in Physics, Chemistry,Maths |
| B.Sc. Chemistry | 3 Years | A/L Passes in Physics, Chemistry |
| B.Sc. Computer Science | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Computer Applications (B.C.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. (CA) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| Bachelor of Business Administration (B.B.A) | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.Com. | 3 Years | Pass in All Subjects in any Discipline |
| B.C.S. | 3 Years | Pass in All Subjects in any Discipline |

**O/L** மட்டும் சித்தியடைந்த மாணவர்கள் **Kaveri Polytechnical College**ல் சேர்ந்து 3 வருட **Diploma**வை பூர்த்தி செய்து, மேலும் 3 ஆண்டுகளில் **Engineer** ஆக வாய்ப்பு.

A/L 2005 மாணவர்கள் pending results முறையில் யூலை மாதத்திலே கல்லூரியில் சேர்ந்து பாடநெறியை தொடங்க வாய்ப்பு

**Call: 011-4512591** for prospectus and application forms

SCHOLARS INFORMATION CENTER
2nd Floor, Colombo Plaza, 50, Galle Road, Colombo-06.
email : peter@scholars-info.com


முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையின்போது

# மேல் மாகாண சபையில் சுதந்திரக் கட்சிக்கு கால் தடக்குப் போடத் தயாராகிறது ஜே.வி.பி.!

கொழும்பு,ஏப்.20

மக்கள் ஐக்கிய சுதந்திரக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள மேல் மாகாண சபையில முதலமைச்சர் ரெஜினோல்ட் கூரேக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தின்போதும், வாக்கெடுப்பின்போதும் நடுநிலைமை வகிப்பதற்கு ஜே.வி.பி. தீர்மானத் திருப்பதாகத் தெரியவருகின்றது. இது ஆளும் தரப்புக்குப் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இதனையடுத்து, மேல் மாகாண சபையின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் அனைவருடனும் நாளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முக்கிய பேச்சுகளை நடத்தவிருக்கின்றார்.

மேல் மாகாண சபையின் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி. இவ்வாறு நடுநிலை வகித்தால் அது முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை வெற்றியடையச் செய்துவிடுமென்ற சூழ்நிலை ஏற்பட்டதையடுத்தே இவ்விடயத்தில் தீவிர கவனம் காட்டவேண்டிய இக்கட்டு ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

மொத்தமாக 104 ஆசனங்களைக் கொண்ட மேல் மாகாண சபையில் ஐக்கிய தேசியக் கட்சி 39 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 36 ஆசனங்களையும் ஜே.வி.பி. 23 ஆசனங்களையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 4 ஆசனங்களையும் மேலும் இரு அரசியற் கட்சிகள் தலா ஒவ்வொரு ஆசனங்களையும் கொண்டுள்ளன.

இந்த நிலையில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் நடுநிலை வகித்தால் முதலமைச்சருக்கு எதிரான ஐ.தே.கட்சியின் நம்பிக்கையில்லாப் பிரேரணை வெற்றியடையும் நிலையே இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாகாண சபை உறுப்பினர்களுடன் பேச்சுகள் நடத்தும் ஜனாதிபதி இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணக்கப்பாட்டுக்கு வருமாறு அவர்களைக் கோருவாரெனத் தெரிய வருகிறது.

மேல் மாகாண முதலமைச்சருக்கெதிரான 14 குற்றச்சாட்டுகளை முன்வைத்து இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி கொண்டு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# சமய சந்நிதிகளில்

நவாலி,ஏப்.20

உயரப்புலம் உத்துங்க விநாயகர் ஆலயத்தின் வருடாந்த பெரும் திருவிழா கடந்த 15 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இந்த உற்சவத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி இரதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (3-100-203)

☆ ☆ ☆

நவாலி,ஏப்.20

ஆனைக்கோட்டை ஸ்ரீ வல்லியப்ப சுவாமி ஆலய தேவப்பிரதிஷ்டை தினம் இன்று புதன் கிழமை முற்பகல் 10.55 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிகாலை தொடக்கம் விசேட அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். (3-100-203)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.20

அரியாலை ஞானவைரவர் ஆலயத் திருக்குளிர்த்தி நாளை வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

வைரவப் பெருமானுக்கு விசேட அபிஷேக ஆராதனைகளும் நண்பகல் அன்னதானமும் இடம்பெறவுள்ளன. (3-203)

☆ ☆ ☆

தொல்புரம்,ஏப்.20

தொல்புரம் கொட்டியம்பதி ஸ்ரீ ஆதி முத்துமாரி அம்மன் ஆலய பூரத்திருவிழா இன்று புதன்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

பூர நட்சத்திர விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து அம்பிகை திருவீதியுலா வருதல் இடம்பெறவுள்ளது. (3-203-ரி)

☆ ☆ ☆

சுழிபுரம்,ஏப்.20

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் புதிதாகக் கட்டப்பட்ட பிள்ளையார், முருகன ஆலயங்களின் மணிக்கோபுர கும்பாபிஷேகம் இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளது. (3-28-203)

☆ ☆ ☆

மீசாலை வடக்கு வேம்பிராய் கன்றைச் சாட்டி அலாக்கிர பூதவரத விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக் கிழமை காலை 8.55 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நாளை வியாழக் கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வும் இடம்பெறும். (3-117-203)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.20

புத்தூர் வாதரவத்தை கேதுவப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை வியாழக கிழமை முற்பகல் 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண் ணெய்க்காப்புச் சாத்துதல் நிகழ்வும் இடம்பெறும். (3-15-203)

☆ ☆ ☆

யாழ்ப்பாணம்,ஏப்.20

அளவெட்டி நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலயத்தில் இன்று முற்பகல் 10மணிக்கு ஏகாதசித் தீர்த்தோற்சவம் இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று, வசந்த மண்டபப் பூசையின் பின் தீர்த்தம் இடம்பெறும்.(3-203)

☆ ☆ ☆

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன தேவஸ்தானத்தில் பூரத்திருவிழா இன்று புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

பூர நட்சத்திர விசேட அபிஷேக ஆராதனைகளைத் தொடர்ந்து அம்பாள் வீதி வலம் வரும் நிகழ்வும் இடம்பெறும். (3-ரி-204)


**2005 A/L**
இற்குப் பிறகு
இந்தியாவில் படிப்புகள்

**பிருந்தாவன் கல்லூரி**

முன்னர் தேசிய முதன்மைத் தரக் கல்லூரி
பங்களூர் பல்கலைக்கழகம் இந்தியா

**பட்டப்படிப்புப் பாட நெறிகள்**
B.Sc. உயிரியல் தொழில்நுட்பம்
B.Sc. மரபியல்
B.Sc. நுண் உயிரியல்
B.Sc. வர்த்தக முகாமைத்துவம்
B.Sc. கணனி விஞ்ஞானம்
B.B.M.வர்த்தக முகாமைத்துவம்
B.C.A. கணனிப் பிரயோகம் (அப்ளிக்கேஷன்)

**பட்டப்பின் படிப்பு பாடநெறிகள்**
M.Sc., M.B.A., M.C.A.

★ 42 தேசத்தவர்களுடன் கற்றல்.
★ 270 சிறிலங்கன்களுடன கற்றல்.
★ 350+சிறிலங்கன் மாணவர்கள் ஏற்கவே பங்களூர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றுள்ளவர்.
★ பதிவுக்கட்டணமின்றி மாணவர்கள் ஒதுக்கீடு செய்து கொள்ளலாம்.
★ 2005 A/L எழுதவிருக்கும் மாணவர்கள் பெறுபேறுகளை எதிர்பார்த்து ஒதுக்கீடு செய்துகொள்ளலாம்.
★ ஒதுக்கீட்டுக்கான கட்டணம் US$ 400

See Website
www.brindavancollege.com.

Send E.Mail
enquiry @ brindavancollege.com
info@ brindevancollege.Com

**COMPANY SECRETARIAL SERVICES (PVT) LTD.**
NO.285, C 1/1, STANLCY TILLAKARATNE MW. NUGEGODA.
T.P.: 011 - 2854438, 0777-317043
(C/42387) (21-16-18)



**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி**
**(தேசிய பாடசாலை)**
**முறைசாராக் கல்விப் பிரிவு**

**முறைசாராக் கல்விப் பயிற்சி நெறிகளுக்கான**

## விண்ணப்பம் கோரல்

மேற்படி பிரிவின் பின்வரும் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கல்லூரிப் படிப்பை விட்டு வெளியேறிய யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சகலரும் கல்லூரியில், உள்ள விண்ணப்பப்படிவத்தை 19.04.2005 இலிருந்து பெற்று 25.04.2005 திங்கட்கிழமைக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றித் தபால் மூலமோ விண்ணப்பிக்க முடியும்.

**பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படும் திகதி: 30.04.2005**

**பாடநெறிகள்**

1. கணனி அடிப்படைக் கற்கைநெறி (Ms Word, Ms Excel) (6மாதம்)
2. கணனி தட்டச்சுப் பயிற்சிநெறி (ஆங்கிலம், தமிழ்) (6மாதம்)
3. வீட்டு மின்னிணைப்பு (6மாதம்)
4. சாரதிப் பயிற்சிநெறி (இலகு வாகனம்) (3 மாதம்)
5. வள்ளங்களுக்கான வெளி இணைப்பு இயந்திரம் பழுதுபார்த்தல் (6 மாதம்)
6. மின் ஒட்டு வேலைப் பயிற்சி (6 மாதம்)

குறிப்பிட்ட நெறிகளுக்கு குறைவாக விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறின் அப்பாடநெறிகள் இரத்துச் செய்யப்படும்.

க.இராசதுரை
அதிபர்

(சி-42381)(21-16-18)

# கிராமப் பாடசாலை வளர்ச்சியிலும் பெற்றோரின் அக்கறை அவசியம்

சாவகச்சேரி,ஏப்.20

கிராமப் பாடசாலைகளின் வளர்ச்சி அங்கு கற்கும் பிள்ளைகளின் பெற்றோரிடமும் தங்கியுள்ளது. பிள்ளைகளின் கல்வியில் அக்கறை செலுத்துவது போன்று பாடசாலை வளர்ச்சியிலும் கவனஞ்செலுத்தவேண்டும்.

- இவ்வாறு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினரும் யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளருமான எஸ்.ஜெயக்குமார் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலையின் அபிவிருத்திச் சபைப் பொதுக்கூட்டம் அண்மையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் வ.கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் - பாடசாலை அபிவிருத்திச் சபை உறுப்பினரும், யாழ். பல்கலைக்கழக உதவிப் பதிவாளருமான எஸ். ஜெயக்குமார் உரை நிகழ்த்துகையில்:-

கல்வி எமது சொத்து. எனவே, எமது பிள்ளைகளின் கல்வியில் பெற்றோர்கள் ஆர்வமுள்ளவராக விளங்கவேண்டும். பெற்றோர்கள் பாடசாலை வளர்ச்சிக்காகத் தம்மாலான இயன்ற உதவிகளை வழங்கவேண்டும். அப்பொழுது தான் எமது பாடசாலையை மேம்படுத்தமுடியும். தற்பொழுது புதியதாக அமையவுள்ள கட்டடம் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் அமையவுள்ளது. இப்பகுதி சிறுவர் கல்விக்கு மிக அமைதியான இடம். போக்குவரத்து நெருக்கடியில்லாத இடம். எனவே, இவ்வாறான இடத்தில் சிறுவர்களுக்கான ஆரம்பப் பாடசாலை அமைய நாம் எமது முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் - என்றார்.

பாடசாலை அதிபர் வ.கயிலேஸ்வரன் தனது தலைமையுரையில் தெரிவித்ததாவது:-

எமது பாடசாலை போதிய வளவசதியின்றி கற்றல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. 600 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இங்கு கல்வி கற்று வருகின்றனர்.

விளையாட்டுச் செயற்பாடுகளை முன்னெடுக்க விளையாட்டு மைதானம் இல்லை. பாடசாலையிலும் இடப்பற்றாக்குறை நிலவுகிறது. போதிய தளபாடங்கள் இன்மையால் மாணவர்கள் தரையில் பாய் விரித்து படிக்கின்ற நிலைமை தான் உள்ளது.

இவற்றையெல்லாம் நிவர்த்திசெய்யும் பொருட்டு பாடசாலையின் பழைய மாணவர் சங்கப் பிரித்தானிய கிளையின் நிதியுதவியுடன் சாவகச்சேரி தாமோதரம்பிள்ளை வீதியில் 40 பரப்புக் காணிக் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு அமைக்கப்படவுள்ள இரு மாடிக் கட்டடங்களால் இடப்பற்றாக்குறை நிவர்த்தி செய்யப்படும் என நம்புகிறேன். இக்கட்டடம் அமைப்பதற்கான வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. பழைய மாணவர்களும் பெற்றோர்களும் போதிய ஆதரவினை வழங்க வேண்டும் - என்றார்.

நிகழ்வில், சாவகச்சேரி இந்துக் கல்லூரி உபஅதிபர் எஸ்.ஜெயானந்தன், ஆசிரியர் ந.பாலச்சந்திரன், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி கார்த்திகேசு ஆகியோர் உரை நிகழ்த்தினர். நடப்பாண்டிற்கான உறுப்பினர்களாக கடந்த ஆண்டு சபையே தொடர்ந்து இயங்கவுள்ளது.

(ப-31-204)

# குழுவாக ஒன்றிணைந்து செயற்பட்டால் மக்களுக்குத் தரமான சேவைகளை வழங்கலாம்

## தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர்

யாழ்.மாவட்டத்தில் உள்ள மருத்துவ நிலையங்கள் எதிர்காலத்தில் எமது மக்களுக்குத் தரமான சேவையை வழங்கவேண்டும் என்பதே தமிழீழ சுகாதாரத் துறையின் நோக்கம். இதற்காக இங்குள்ள தனியார் வைத்திய நிலையங்களும் ஆங்கில மருத்துவ சேவையாளர்களும் ஒரு குழுவாக இணைந்து செயற்படவேண்டும்.

- இவ்வாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டார்.

தனியார் வைத்திய நிலையங்களினதும் ஆங்கில மருத்துவ சேவையாளர்களுக்குமிடையிலான சந்திப்பு நாவலர் கலாசார மண்டபத்தில் வைத்திய கலாநிதி விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

பூரணத்துவம் மிக்க சமாதானச் சூழல் ஏற்படும் பட்சத்தில் அடுத்த 5 ஆண்டுகளில் உலக நாடுகளுக்கு ஈடாக எமது சுகாதாரத்துறையும் வளர்ச்சியடைந்து விடும். இதற்கான நடவடிக்கைகள் இப்போதிருந்தே மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இலங்கையின் சுகாதார சேவைகளுக்கான சட்டவிதிகள் நல்லமுறையில் உள்ளது. நாங்கள் சுகாதார அமைச்சு மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பானவர்களுடன் இணைந்து செயற்படுகின்றோம்.

தொற்றுநோய்த் தடுப்புக்கள் மருத்துவப் பரிசோதனைகள் போன்ற விடயங்களில் கூடுதல் கவனம் செலுத்தப்படுகிறது. அத்துடன், இந்தத் துறைசார்ந்த ஒவ்வொரு சிறிய விடயத்திலும்கூட நாங்கள் முழுமையான கவனம் செலுத்தி பொதுமக்களின் சுகாதாரத் தேவைகளை உரியமுறையில் பூர்த்தி செய்கிறோம். இதற்கென நாங்கள் ஆங்காங்கே சம்பந்தப்பட்டவர்களுடன் ஆலோசனைகளை மேற்கொள்கின்றோம்.

தனியார் வைத்திய நிலையத்தினரும், ஆங்கில மருத்துவ சேவையாளர்களும் குழுவாக இயங்குவதன் மூலம் பல்வேறு பிரச்சினைகளை ஒன்றுபட்டுக் கலந்துரையாடித் தீர்க்க முடியும். ஒவ்வொரு வைத்திய நிலையங்களிலும் உள்ள குறைபாடுகள் பூர்த்திசெய்யப்படவேண்டும். நோயாளருக்கான பதிவேடுகள் உரியமுறையில் வைக்கப்பட வேண்டும். ஒவ்வொரு விடயங்கள் குறித்தும் நாங்கள் மிகவும் அவதானமாகச் செயற்படவேண்டும்.

இதுதொடர்பான சுற்று நிருபம் ஒன்று எல்லோருக்கும் விரைவில் அனுப்பி வைக்கப்படவுள்ளது எனவும் விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் தனியார் மருத்துவ நிலையங்களைச் சேர்ந்த வைத்திய அதிகாரிகள் மருத்துவ சேவையாளர்கள் கலந்துகொண்டனர்.

(ப-111-204)

# தேவைக்கதிகமான நிவாரணம் மக்களைச் சோம்பேறிகளாக்கும்

காரைதீவு,ஏப்.20

"தேவைக்கதிகமாக நிவாரணங்களை வழங்குவதன் மூலம் எமது மக்கள் சோம்பேறிகளாக மாறிவருகின்றனர். இது பிரதேச அபிவிருத்தியைப் பாதிக்கக்கூடியது".

- இவ்வாறு சாய்ந்தமருது அல் - அமீன் சமூக அபிவிருத்தி நிலையத் தலைவர் எம்.ஏ.எம். மன்சூர் உள்ளூர் ஊடகவியலாளர் மத்தியில் பேசும்போது ஹேஸ்யம் தெரிவித்தார்.

உள்ளூர் ஊடகவியலாளர்களுடனான ஒரு சந்திப்பு அண்மையில் நிலையச் செயலாளர் நாயகம் எம்.ஜாபீர் ஆசிரியர் தலைமையில் நிலைய தலைமையகத்தில் நடைபெற்றது. அங்கு தலைவர் மன்சூர் மேலும் பேசுகையில்:-

"மக்கள் வேலைக்குப் போகத் தயங்குகிறார்கள். கிடைக்கின்ற நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டு முகாமிற்குள் முடங்குகின்றனர். இது அனைவரது எதிர்காலத்தையும் பாதிக்கக் கூடியது.

இன்னுமொரு பாரிய ஆபத்து என்னவெனில் சர்வதேச நிறுவனங்கள் பல திட்டமில்லாமல் உதவிகளை வழங்கிவருகின்றன. தையல் தெரியாதவனுக்கு தையல் இயந்திரம் வழங்குகின்றனர். சைக்கிள் ஓடமுடியாதவனுக்கு சைக்கிள் வழங்குகின்றனர். இவைகள் மறு வழியில் விலை குறைவாக விற்கப்பட்டு மதுப் பாவனையின் பக்கம் கவனம் செல்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட வீடுகளை மீளமைப்பது தொடர்பாக நாளுக்குநாள் வேறுபட்ட தகவல்களும் திட்டங்களும் மாறிமாறி வருகினறன - என்று கூறினார். மற்றும் பலர் பேசினார்கள்.

(ப)

# நெருக்கடிச் சூழலில் நிறைந்த சேவையாற்றியவர் முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதன்

வலி.மேற்கு,ஏப்.20

மக்கள் நலனில் அக்கறை கொண்டு சிறந்த சேவையை வழங்கியவர் யாழ். மாவட்ட முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதன். நெருக்கடியான சூழ்நிலையிலும் எம்மக்கள் இயல்பு வாழ்க்கை வாழ சேவை புரிந்தவர். இது நாம் கண்ணூடாகக் கண்ட உண்மைகள்.

- இவ்வாறு வலி.மேற்குப் பிரதேச செயலக நிர்வாக அலுவலர் மு.சிவராசா தெரிவித்தார்.

முன்னாள் அரச அதிபர் செ.பத்மநாதனின் சேவையைப் பாராட்டி, பிரதேச சபையின் நலன் புரிச் சங்கத்தினால் நடத்தப்பட்ட பாராட்டு விழா அண்மையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், செ.பத்மநாதன் - சங்கானை முருகன் ஆலயத்திலிருந்து 'பான்ட்' வாத்திய இசையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

தொடர்ந்து உரைநிகழ்த்திய மு.சிவராசா தெரிவித்ததாவது:-

செ.பத்மநாதன், யாழ். மாவட்டத்தில் யுத்தம் இடம்பெற்ற காலத்தில் மக்களுக்குத் துணிச்சலுடன் சேவையாற்றியவர். இடம்பெயர்ந்து மக்கள் அல்லலுற்ற வேளையில் தம் சிரமம் பாராது மக்கள் சேவை புரிந்தவர்.

அடிப்படை வசதிகள் எதுவுமற்ற யாழ். செயலகம் இடம்பெயர்ந்து சாவகச்சேரியில் இயங்கியவேளை, தனது தீர்மானத்திலிருந்து சற்றும் விலகிக்கொள்ளாது மக்களின் உயிர், உடைமைகளைக் காத்தவர்.

இத்தகைய சேவையாளன் உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்படவுள்ள வீடமைப்புத் திட்டத்தின் திட்டப்பணிப்பாளராகப் பதவி ஏற்றுள்ளமை எம்மக்களிற்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம்.

மக்களின் இன்ப துன்பங்களோடு பங்கு கொண்ட இவர், மேலும் சேவையாற்ற இறைவன நல்லருள்புரிய வேண்டும் - என்றார்.

(ப-175-204)

# மொழியை வளர்க்கும் வகையில் மாணவர் பயிற்றப்பட வேண்டும்

நல்லூர்,ஏப்.20

ஈழத்தின் கல்விப் பாரம்பரியத்தின் மிகப் பெரியதளம் ஆசிரியர்களே. அதை மரபுரீதியான புனிதப்பணி என்று சொல்லுகிறார்கள். வாழ்வியல் மொழியை வளர்க்கும் விதத்தில் மாணவர்கள் பயிற்றப்படவேண்டும்.

- இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா கூறினார்.

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்திய முத்தமிழ் விழாவின் நாடக நிகழ்வு கல்லூரி மண்டபத்தில் மன்றத்தின் துணைத்தலைவர் கு.உதயகுமார் தலைமையில் நடைபெற்றது.

பேராசிரியர் சிவலிங்கராசா அங்கு தொடர்ந்து பேசும்போது கூறியதாவது:

எமது இளமைக்காலக் கல்வியையும் இன்றைய கல்வித் திட்டத்தையும் ஒப்பிடும்போது எமது காலத்தில் கல்வி மாணவர்களை நன்நெறிப்படுத்தியுள்ளதைக் காணலாம். அக்காலத்தில் மரபுரீதியாகக் கற்றபடியால் நல்ல தமிழ் மாணவர் பரம்பரை உருவானது. தமிழ் எமது வாழ்வியல் மொழி. மொழியை வளர்க்கிற வகையிலே மாணவர்கள் பயிற்றப்படவேண்டும்.

1947 இல் சதாசிவஐயர் எழுதிய தமிழ் மொழிப்பயிற்சித் தேர்ச்சி நான்காம் வகுப்பில் கற்பிக்கப்பட்டது. அதில் பாரதியார் பற்றி எழுதியிருந்தார். அவரின் பாடலும் இடம்பெற்றிருந்தது. அன்று பாடப்புத்தகங்களை அரசு வெளியிடவில்லை. இன்று பாடத்திட்டங்கள் மாணவர்களை நன்நெறிப்படுத்துவதாக இல்லை. இன்று நாம் படிக்கும் புத்தகங்கள், வானொலிகள், தொலைகாட்சி என்பன நமது தாய்மொழியான தமிழைக் கொலைசெய்கின்றன.

ஆசிரியர்கள் கிராமங்களைப் புறக்கணிக்கக்கூடாது. நகரப் பிள்ளைகளுக்கும் கிராமத்துப் பிள்ளைகளுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. அங்கே ஆசிரியர்கள் மதிக்கப்படுகிறார்கள். நீங்கள் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுங்கள். உங்களால் ஒரு கண்ணதாசன், வைரமுத்து, ஜெயகாந்தன் என்று உருவாகவேண்டும்.

இயலிசை நாடங்களூடாக இலக்கிய ரசனைகளை உணரமுடியும். கிராமத்தில் அற்புதமான பாடல்களை நாம் கேட்கமுடியும். அவர்கள் பெரிதாகப் படித்தவர்கள் அல்ல. எனினும், கிராமத்துக் கவிதைகளில் சுவையான அம்சங்கள் ஏராளம். கள்ளுக்குக்கூட ஒரு பஞ்சபுராணம் எழுதியுள்ளார்கள். மாணவர்களை உருவாக்கும் மிகப்பெரிய பங்காளிகளான நீங்கள் கலா ரசனை நிறைந்த இலக்கியத்தை ரசிக்க அதனுடன் ஈடுபாடு கொள்ளத்தக்கதாகப் படிப்பியுங்கள் - என்று கூறினார்.

உதயகுமார் தனது தலைமையுரையில் கூறியதாவது:

இயல், இசை, நாடகம் என்பவற்றால் தமிழை வளர்த்ததுமன்றி, அதன் உயர்வுக்காக இரத்தம் சிந்தியவர்கள் எம்முன்னோர்கள். இன்று மேலைத்தேசத்தவர்கள்கூட எமது மொழியின் சிறப்பை உணர்ந்து கொண்டுள்ளனர். கார்வெல போப் போன்ற பல அறிஞர்கள் பல ஆய்வுகளைச் செய்துள்ளனர். எமது கல்லூரி ஆசிரியர்கள் உயிரினும் மேலான தமிழைப் போற்றி அதற்கு விழா எடுப்பது பெருமையாக இருக்கிறது. ஏனைய மொழிகளைப் பயின்றதும் தமிழை வளர்க்க அதனைப் பெருமைப்படுத்த நாம் உறுதியெடுத்துக் கொள்ளுவோம் - என்றார்.

கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி பேசும்போது:

தாயைத் தெய்வமாகப் போற்றும் மரபு தமிழர்களுடையது. அதே போன்று தாய்மொழியை, தமிழ்மொழியைப் போற்றுவதும் எமது மரபுதான். எமது மொழியை வளப்படுத்தி வாழ்விக்கவும் அதனை நன்கு தெரிந்துகொள்ளவும் எதிர்கால மாணவர்களுக்கு வழிகாட்டியாக இருப்பவர்கள் ஆசிரியர்கள். இந்தவிழா அதற்குக் களமாகிறது. இதுபோன்ற விழாக்கள் இந்த மண்டபத்துடன் நில்லாது நீங்கள் செல்லும் பாடசாலை வழியாக எதிர்கால சந்ததியினருக்கும் வழங்கப்படவேண்டும் - என்று கூறினார். விழாவில் 'வீணைதாலாட்டு', 'சாகாத மனிதம்', 'என்கடன்பணி செய்து கிடப்பதே', 'முகமற்ற மனிதர்' நாடகங்களும் இடம்பெற்றன.

(ப-111)

# பொருளாதாரத்தை மட்டும் கல்வி மையமாகக் கொள்ளக்கூடாது!

வலி.தெற்கு,ஏப்.20

எமது கல்வி பொருளாதாரத்தை மட்டும் மையமாகக் கொண்டு கற்பிக்கப்படுகிறது. இதனால் பேச்சளவில் கற்றவர்கள் உருவாகின்ற போதும் திறமையானவர்களை ஏற்படுத்த தவறிவிடுகிறது.

- இவ்வாறு சட்டத்தரணி ரி.வசந்தசேனன் தெரிவித்தார். மானிப்பாய் ஸ்ரீ சத்தியசாயி




பாடசாலையின் விளையாட்டுப் போட்டி அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி.பி.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தொடர்ந்து உரை நிகழ்த்திய சட்டத்தரணி ரி.வசந்தசேனன் கூறியதாவது:-

கல்வி இன்று விழுமியங்களையும் மனிதத்துவத்தையும் கட்டியெழுப்புவதற்கு முழுமையாக வழிகாட்டவில்லை என்றே கூறவேண்டும். மனித சுயநலமும் குரூர ஆசைகளும் பெருகி வருகின்றன. எமது கல்வியானது பேச்சளவில் கற்றோரை உருவாக்குகிறதாயினும் செயலளவில் அவர்களின் செயலாற்றுகைகள் போதுமானதாக இல்லை. பொருளாதாரத்தை மட்டும் மையமாகக் கொண்ட வளர்ச்சி பூரண சமநிலை கொண்ட மனிதர்களை உருவாக்கமாட்டாது.

மனித விழுமிய மேம்பாடு, மனித நேயம், சுயநலத்தில் இருந்துவிடும் பக்குவம் என்பவை கல்வியினூடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். இதற்கான களங்களாக பாடசாலைகள் விளங்குகின்றன. அந்தவகையில் சத்திய சாயி வித்தியாலயம் இலட்சியப் பாடசாலையாக விளங்குகிறது - எனக் கூறினார்.

உபபீடாதிபதி பா.தனபாலன் தமது உரையில் கூறியதாவது:-

"கடந்த காலங்களில் நிகழ்ந்த யுத்த அனர்த்தங்களால் எமது பிரதேசத்தில் பல பாடசாலைகள் மூடப்பட்டன; அழிக்கப்பட்டன. பல பாடசாலைகள் தமது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து இயங்கி வருகின்றன. இவற்றால் எமது கல்வித்துறை பாரிய பின்னடைவுகளைச் சந்தித்துள்ளது. தமிழர் சந்ததியும் மனித வளங்களும் இவற்றால் பாதிக்கப்பட்டன. இந்நிலையில் மானிப்பாயில் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது ஒரு புரட்சிகர செயறபாடாகும். பகவானின் அருள்பெற்ற அர்ப்பணிப்பாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை தமிழ் இனத்துக்கு ஒரு விடிவிளக்காகும்" எனக் கூறினார்.

புட்டபதியிலிருந்து வந்து கலந்துகொண்ட டாக்டர் எஸ்.பூபாலராசா, கிழக்கு மாகாண ஸ்ரீ சத்திய சேவா சாயி நிறுவனங்களின் இணைப்புக்கு குழுத் தலைவர் டாக்டர் என்.பிரேமதாசன் ஆகியோரும் உரையாற்றினார்.

விளையாட்டு நிகழ்வுகளில் ஈடுபட்ட மாணவர்களுக்கு திருமதி கனி தனபாலன் பரிசுகளை வழங்கினார்.

(ப-152-204)

# காணாமற்போனோர் குறித்த விசாரணை; முறைப்பாட்டுக்காரர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.20

யாழ்.குடாநாட்டில் 1996 - 1997ஆம் ஆண்டுக காலப்பகுதியில் படையினரால் கைதுசெய் யப்பட்டுப் பின்னர் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் காணாமற்போனோர் விசா ரணைப்பிரிவினரால் நடத்தப்படவுள்ளன.

காணாமற்போனவர்களின் பெற்றோர், பாது காவலர் அல்லது முறைப்பாட்டுக்காரர் ஆகி யோரோ இவர்கள் புலம்பெயர்ந்தோ அல்லது இடம்பெயர்ந்தோ இருப்பின் அவர்களது உற வினர்களோ விசாரணைக்குச் சமுகமளிக்கலாம என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் நபர்கள் காணாமற்போனமை சம்பந்தமான விசாரணைகள் எதிர்வரும் 26 ஆம் திகதி முற்பகல் 9 மணி முதல் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெறும்.

பாலரத்தினம் ஜயமோகன், இல.189, ஜின்னா வீதி, யாழ்ப்பாணம் (முறைப்பாட்டுக்காரர் ஜய மோகன் மகேஸ்வரி - (கோவை இல.51), கனகசபை வைத்தியலிங்கம், அச்சுவேலி, நீர்வேலி (கோவை இல.163), கே.ஜயகாந்தன், கல்வயல் (முறைப்பாட்டுக்காரர் ஆர்.ருக்மணி தேவி (கோவை இல.291), பாக்கியநாதன் ஜூலியன், யாழ்ப்பாணம் (கோவை இல.350) பத்மநாதன் பத்மராஜா, முகவரி குறிப்பிடப்பட வில்லை. கைதுசெய்யப்பட்ட இடம் - திருநெல் வேலி (கோவை இல.351), பற்குணசிங்கம் ராஜேந்திரன், முகவரி குறிப்பிடப்படவில்லை. கைதுசெய்யப்பட்ட இடம் - நல்லூர் (கோவை இல.369), ஆர்.ஆர்.லெபனான், இல.115, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் (கோவை இல.401). ரேகன் ரோஹன், முகவரி குறிப்பிடப்படவில்லை. கைது செய்யப்பட்ட இடம் - கோயில் வீதி, யாழப்பாணம். (கோவை இல.456), செல்வதுரை செல்வராஜா, இல.586, சென்.செபஸ்தியன் வீதி, யாழ்ப்பாணம். (கோவை இல.513), செல்வராஜா ரகுநாதன், முகவரி குறிப்பிடப்படவில்லை. கைதுசெய்யப்பட்ட இடம் - மூதனவாடி, நல்லூர் (கோவை.இல.531), சுமதி சுரேஸ்வரன், இல. 48/1, நெடுங்குளம் வீதி, கந்தர்மடம் மேற்கு, யாழ்ப்பாணம் (கோவை இல.632), தணிகாசலம் சுதர்ஷினி, தாவடிச் சந்தி, கோண்டாவில் முறைப்பாட்டுக்காரர் திருமதி தணிகாசலம் தவமணி (கோவை இல.666), செல்வகுமார், கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் முறைப்பாட்டுக்காரர் ரி.மகேஸ் வரி (கோவை இல.520), துரைநாயகம் ரத்னம், மானிப்பாய் வீதி, கலவண்டி, ஆனைக்கோட்டை (கோவை இல.708), எச்.எச்.குணநாதன், தாலன் பிள்ளையார் கோயிலடி, திருநெல்வேலி (கோவை இல.117). கார்த்திகேசு விஜயன், செருக்கம்புலம் பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம். (கோவை இல. 216), ஆசிரிநாதன் கிருஸ்டி ஜயநாதன், கொழும் புத்துறை, யாழ்ப்பாணம் (கோவை இல.11), கலைமுத்து கோகிலதாசன், செம்மணிச் சந்தி, யாழ்ப்பாணம். (கோவை இல. 157), நாகமணி அன்னராசா, சங்கானை, பண்டத்தரிப்பு (கோவை இல.313), நிக்ஸன் ஜெரலி பிள்ளையார் கோயி லடி, நெடுங்குளம் முறைப்பாட்டுக்காரர் வண.பிதா சி.வில்பிரட் (கோவை இல.772), ராஜசிங்கம் ராஜநீதன், சுதுமலை சவக்காடு, யாழ்ப்பாணம் முறைப்பாட்டுக்காரர் எஸ்.ராமலிங்கம் (கோவை இல.412), ராஜேந்திரன் ராஜேஸ்வரன், இல.16/3, சனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம் (கோவை இல.416), ராசதுரை சுதாகரன், சங்கானை, பண்டத்தரிப்பு (கோவை இல.424) ராசமனோக ரன் தயாபரன், புகை யிரத நிலைய வீதி, கோண்டாவில், யாழ்ப் பாணம் (கோவை இல. 429), ரவீந்திர ராஜ் ராசரத்னம் சவக்காடு, சுதுமலை, முறைப்பாட் டுக்காரர் - ராசலிங்கம் (கோவை இல.455), எஸ் ராகிதவன் இல.9/9, சென்ரல் வீதி, குரு நகர், யாழ்ப்பாணம், முறைப்பாட்டுக்காரர் - எஸ்டெடில்டா (கோவை இல. 467) சற்குணராஜா பவாணி நெடுங்குளம் வீதி, கொழும்புத் துறை முறைப்பாட்டுக்காரர் - சொக்கலிங்கம் (கோவை இல.500) செல்லையா சசீகரன் இல. 72/45 ராஜசிங்கம் வீதி, குருநகர் யாழ்ப்பாணம் முறைப் பாட்டுக்காரர் - பிதா எஸ்.தம்பிபிள்ளை (கோவை இல.518).

கீழ்க்காணும் நபர்கள் காணாமற்போனமை சம்பந்தமான விசாரணைக்கு எதிர்வரும் 27 ஆம் திகதி சாவகச்சேரி பிரதேச செயலகத் திற்கு வருமாறு உறவினர் அழைக்கப்படுகி றார்கள்.

கே.கண்ணன், மண்டுவில், முறைப்பாட்டுக் காரர் - நல்லசேகரம்பிள்ளை (கோவை இல.293), நடராஜா செந்தூரன், மீசாலை வடக்கு, கொடி காமம் (கோவை இல.305), மீனவன் அழகரத் தினம் நாவற்காடு, வரணி (கோவை இல.341), பத்மரூபன் ஞானசேகரம், அரியாலை தெற்கு, மசாலை (கோவை இல.371), இரத்தினம் கஜேந் திரன் இல. 49/A, நாகேந்திரபுரம் கைதடி, முறைப் பாட்டுக்காரர் - என்.இரத்தினம், எஸ்.பாலவிநோ தன், தச்சன்தோப்பு, நாவற்குழி, யாழ்ப்பாணம் (கோவை இல.460), எஸ்.சற்குணராசா, அல்லாரை தெற்கு, மீசாலை, முன்றப்பாட்டுக்காரர் - கே.பால சுந்தரம் (கோவை இல.470), எஸ்.வசந்தகுமார், இல.38, சின்னவன்கட்டு ஒழுங்கை, அரியாலை, முறைப்பாட்டுக்காரர் - எஸ்.திலகாவதி (கோவை இல.477), சதாசிவம் சந்திரசேகரம், கண்டி வீதி, அரியாலை (கோவை இல. 494), சண்முகப் பரமேஸ வரன், ஆவரம்பிட்டி, மண்டுவில் தெற்கு, சாவகச் சேரி (கோவை இல.543), சின்னத்துரை ராஜன் நுணாவில் வீதி, நுணாவில், சாவகச்சேரி, (கோவை இல.583), சிவகுமார் முனியாண்டி, மீசாலை மேற்கு, மீசாலை (கோவை இல.594), சிவலிங்கம் இரா மேஸ்வரன், இடைக்குறிச்சி, வரணி. (கோவை இல.595), சிவசுப்பிரமணியம் முகுந்தன், பெரிய வாடி, சாவகச்சேரி, முறைப்பாட்டுக்காரர் - சின் னத்துரை (கோவை இல.605), ரி.சுவேந்திரராஜா, நாவற்குழி, யாழ்ப்பாணம், முறைப்பாட்டுக்காரர்- திருமதி என்.தவா (கோவை இல.641), தவராஜா ரமேஸ், அண்ணாகோவிலடி, மட்டுவில் தெற்கு, மட்டுவில், சாவகச்சேரி, (கோவை இல.680), தயா குணம் தயாபரன், யாழ்ப்பாணம், துரைராஜா விமல், கச்சாய், சாவகச்சேரி (கோவை இல.713), என்.உதயகுமார், மந்துவில், சாவகச்சேரி, கைது செய்யப்பட்ட இடம் அண்ணாகோவிலடி (கோவை இல.297).


# Manipal U

**available - accessible - affordable – personalized education**

The Sikkim Manipal University of Health, Medical and Technological Science was established by an Act of Sikkim State Legislature in 1995. Manipal is the nucleus of 53 educational institutions, which has an enrollment of 30,000 students. This includes 2 Universities and 27 professional colleges. The student body represents 32 countries and the degrees are recognized in over 40 countries.

The Manipal University has the approval of University Grants Commission and of Common Wealth.

**ADMISSION ANNOUNCEMENT FOR 2005/ 2006**

**MBA / MBA IT**

**Last Date for Enrollment : 30/04/2005**

Now for the first time you have the opportunity of obtaining a prestigious **MBA** at the only "Authorized" International Study Centre of Sikkim Manipal University in ***North &East of Sri Lanka.***

## Master of Business Administration (MBA)

The course aims to train graduates in Infrastructure Management Skills required at the higher levels of management. Students will be exposed to the concept of management and the latest Technologies and Strategies required by the relevant industries.

### FIRST SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 01 | Management process and organization behavior | 4 |
| MB 02 | Internet Application | 2 |
| MB 03 | Marketing Management | 2 |
| MB 04 | Human Resource Management | 2 |
| MB 05 | Operation Management | 2 |
| MB 06 | Financial Management | 2 |
| MB 07 | Management Information System (MIS) | 2 |
| | Total Credits | 16 |

### SECOND SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 08 | Strategic Technology Management | 4 |
| MB 09 | Management of Technology transfer, absorption & IPR | 2 |
| MB 10 | Business Process, Re-Engineering | 2 |
| MB 11 | Enterprise Resource Planning | 2 |
| MB 12 | e-Customer Relationship Management & Supply Chain Management | 2 |
| MB 13 | Conflict Management & Negotiation Skill | 2 |
| MB 14 | History of Management, Case study | 2 |
| | Total Credits - | 32 |

### THIRD SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 15 | Infrastructure Management | 2 |
| MB 16 | Fundamentals of Infrastructure Project Financing | 4 |
| MB 17 | Infrastructure Development & Policy Planning | 2 |
| MB 18 | Project Management | 4 |
| MB 19 | Decision Support Systems (DSS) | 4 |
| | Total Credits | 48 |

### FOURTH SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MB 20 | Elective | 8 |
| MB 21 | Project | 8 |
| | Total Credits | 64 |

## Master of Business Administration in Information Technology (MBA IT)

There is a dramatic and immediate need for executives and IT managers who not only understand the strategic use of IT, but also have a strong business orientation and well developed leadership, communications and management skills. That's where our MBA in IT Management can help.

### FIRST SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0001 | Management Process & Organization Behavior | 4 |
| MI 0002 | Window based application | 4 |
| MI 0003 | Marketing Management | 2 |
| MI 0004 | Financial Accounting | 2 |
| MI 0005 | Business Applications of IT | 2 |
| MI 0006 | Internet (HTML) | 2 |
| | Total Credits | 16 |

### SECOND SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0007 | Human Resource Management | 4 |
| MI 0008 | Visual Basic | 4 |
| MI 0009 | Operations Management | 2 |
| MI 0010 | Financial Management | 2 |
| MI 0011 | C++ | 2 |
| MI 0012 | Oracle | 2 |
| | Total Credits | 32 |

### THIRD SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0013 | Management Information System (MIS) | 4 |
| MI 0014 | e-Business and IT law | 4 |
| MI 0015 | Conflict Management & Negotiation Skills | 2 |
| MI 0016 | Software Project Management | 2 |
| MI 0017 | Website Management & Design | 2 |
| MI 0018 | Data Warehousing, Data Mining | 2 |
| | Total Credits | 48 |

### FOURTH SEMESTER

| Sub code | Title | Credits |
|---|---|---|
| MI 0019 | E-CRM & Supply Chain Management | 4 |
| MI 0020 | International Business | 4 |
| MI 0021 | Enterprise Resource Planning | 4 |
| MI 0022 | New Technologies | 2 |
| MI 0023 | Project | 2 |
| | Total Credits | 64 |

**ELIGIBILITY**
Degree (any discipline) or equivalent professional qualification. Work experience will be an added advantages.
Duration : 2 years (Full time/ Part time

www.manipalu.com
**Manipal International Study Center @ IIS City Campus**
# 181, Navaler Road, Jaffna.
Tel: 021 222 8060, 021 222 2201
Fax: 021 222 6933
E-mail: iis@sltnet.lk

Sikkim Manipal University India
Manipal INSPIRED BY LIFE

**ELIGIBILITY**
Degree or equivalent professional IT qualification. Work experience will be an added advantages.
Duration : 2 years (Full time / Part time


# பிழை திருத்தம்

19-04-2005 செவ்வாய்க்கிழமை வெளியான "உத யன்" நாளிதழ் 4ஆம் பக்கத்தில் பிரசுரமான *வீடமைப்பு நிர்மாணத்துறை மாகாணக் கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு கட்டடங்கள் திணைக்கள கேள்வி அறிவித்தல்* விளம்பரத்தில் பந்தி இல.2இல் *(250ரூபா) இருநூற்றைம்பது மட்டும்* செலுத்தி என்று பிரசுரமாவதற் குப் பதிலாக *(500ரூபா) ஐந்நூறு மட்டும்* என்று தவறு தலாக வெளிவந்துள்ளது தயவுசெய்து அதனைத் திருத்தி வாசிக்கவும்.

**பிரதம பொறியியலாளர்,**
**கட்டடங்கள் திணைக்களம்,**
**கடற்கரை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(C/42401)(21-16-45-29)

# மரண அறிவித்தல்

## திருமதி கார்த்திகேசு பகவதிப்பிள்ளை



கல்வயல், சாவகச்சேரியை பிறப்பிடமாக வும் சப்பச்சிமாவடி, கச்சாய் வீதி, சாவகச் சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு பகவதிப்பிள்ளை அவர்கள் 18.04.2005 திங்கட்கிழமை காலமாகிவிட் டார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற கார்த்திகேசு (ஞானியர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்பு சகோதரியும், அன்னலட்சுமி, காலஞ்சென்ற சிவயோகம், பராசக்தி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் கந்தையா, கருணா னந் தம், சிவமோகன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியாரும், சிவகௌரி, சிவ முருகதாஸ் (ஜேர்மனி), சிவாஜினி (ஜேர்மனி), சிவறஞ்சினி (சுவிஸ்), சிவதர்சினி, சிவறஜனி (நோர்வே), சிவலக்ஷன், கஸ்தூரி (ஜேர்மனி), கஜன் .(ஜேர்மனி) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் சப்பச்சிமாவடியில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவ ரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பொ.கந்தையா (மருமகன்),
சி.பராசக்தி (மகள்).

*கச்சாய் வீதி,*
*சாவகச்சேரி.* (44430)(21-16-45-29)

# கண்டாவளைப் பகுதி விவசாயிகள் நெல் கொள்வனவில் புறக்கணிப்பு

பரந்தன்,ஏப்.20

நெற்கொள்வனவில் கண்டாவளைக் கிராமம் புறந்தள்ளப்படுவதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும்போக நெல் உற்பத்தி மேற்கொண்டவர்களிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்வதற்கென மாவட்ட அரச அதிபரால் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி வழங்கப்பட்டிருக்கின்றது.

பரந்தன், கரைச்சி வடக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கண்டாவளைக் கிராம விவசாயிகளிடமிருந்து நெற்கொள்வனவு இடம்பெறவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாகக் கண்டாவளைக் கமக்கார அமைப்பின் செயலாளர் ந.யோகநாதன் கூறியதாவது:-

கரைச்சி வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச சங்கம் கண்டாவளைக் கிராம விவசாயிகளிடமிருந்து நெல்லைக் கொள்வனவு செய்யவில்லை. இதற்கு ஏதாவது உள்நோக்கம் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கின்றோம்.

முன்னர் சேரன் மற்றும் சோழன் நிறுவனங்கள் ஒரு மூடை நெல்லை ஆயிரம் ரூபா வீதம் கொள்வனவு செய்தன. ஆனால், அந்த நிறுவனங்களும் தற்போது நெல் கொள்வனவை இடைநிறுத்தியுள்ளன.

இதனால், சிறுபோக நெற்செய்கையை மேற்கொள்வதற்குப் பணமின்றி விவசாயிகள் நெருக்கடிகளைச் சந்திக்கின்றனர்.

ஆகவே, கரைச்சிப் பிரதேச பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கண்டாவளை விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவை மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் சிறுபோக நெற்செய்கையை விவசாயிகள் ஆரம்பிக்க முடியும் - என்றார்.

(ஒ-352-202)

## சுயதொழில்களை ஆரம்பிக்க உதவுக

ஒட்டுசுட்டான்,ஏப்.20

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் போரினால் கணவனை இழந்த பெண்களுக்கும் பெற்றோரை இழந்த பிள்ளைகளுக்கும் ஊனமுற்றவர்களுக்கும் தொழில் முயற்சிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பாதிப்படைந்தவர்கள் கோரிவருகின்றனர்.

அநேகமானோர் தொழில் வசதிகளின்றி கூலி வேலை செய்தே வாழ்கின்றனர். இதனால் அக்குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் எதிர்கால வாழ்வும் பாதிக்கப்படுகிறது என்றும் -

எனவே, இக்குடும்பங்களுக்கு மறுவாழ்வளிக்கும் வகையில் தொழில் முயற்சிகளை வழங்க வேண்டும் என்றும் - கோரப்பட்டுள்ளது.

(ஒ-341)

### பரந்தன் – முல்லைத்தீவு வீதியில்

# பாலத்தைப் புனரமைப்பது குறித்து அறிவிப்புப் பலகை பொருத்துக

## பொதுமக்கள் கோரிக்கை

பரந்தன்,ஏப்.20

பரந்தன் - முல்லைத்தீவு பிரதானசாலையில் உள்ள பாலம் புனரமைக்கப்பட்டு வருகிறது. ஆனால், இது தொடர்பான எச்சரிக்கைக் குறியீடுகள் புனரமைக்கப்படும் பாலத்தின் இரு புறங்களிலும் வைக்கப்படவில்லை. இதனால் அந்த வழியாகச் சென்று வருவோர் விபத்துக்குள்ளாகும் அபாயத்தை எதிர்நோக்குகின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் வாகனங்களில செல்வோர் நெருக்கடியைச் சந்திக்கின்றனர். பாலத்தின் வேலைகள் நடைபெறுவது குறித்து எச்சரிக்கைச சமிக்ஞை விளக்குகள் வைக்கப்படாததால், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள்களில் பயணிபபோர் பாலத்தின் அருகே உள்ள பள்ளத்தில் விழ நேரிடுகிறது.

இதில் பலர் படுகாயமடைந்த சம்பவங்களும் இடம்பெற்றன என்று அப்பகுதி வாசிகள் தெரிவிக்கின்றனர்.

பரந்தன் - முல்லைத்தீவு வீதியில் பரந்தன் சந்தியிலிருந்து மூன்றாவது மைல் கல்லில் உள்ள பாலமே புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்தப் பாலத்தின் இரு புறங்களிலும் திருத்த வேலைகள் இடம்பெறுவதற்கான அறிவிப்புகளை வைக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினரிடம் பொதுமக்கள் கோரி வருகின்றனர். இதே வேளை, இரவு வேளைகளில் எச்சரிக்கைச் சமிக்ஞை விளக்குகளை பொருத்துமாறு அவர்கள் கேட்கின்றனர்.

(ஒ-352)

## அன்னை பூபதி நினைவு நிகழ்வு

ஜெயபுரம்,ஏப்.20

தியாகதீபம் அன்னை பூபதியின் 17 ஆவது நினைவு நாளும் உண்ணாவிரத நிகழ்வும் முழங்காவில் பிரதேசத்தில் எழுச்சியுடன் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி.நவரத்தினம் தலைமையில் இந்நிகழ்வு முழங்காவில் மாவீரர் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரினை மன்னார் மாவட்ட மாவீரர் பணிமனை பொறுப்பாளர் இளவளவனும் தேசியக் கொடியை முழங்காவில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழரசனும் ஏற்றினர்.

தொடர்ந்து அன்னைபூபதியின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

சிறப்புரைகளை பூநகரி வெகுஜன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் பொ.தங்கராசா, முழங்காவில் காவல்துறைப் பொறுப்பாளர் குகநாதன், மாவீரர் பணிமனை பொறுப்பாளர் பெரியண்ணை ஆகியோர் நிகழ்த்தினர்.

அன்னை பூபதியின் உண்ணா விரதப் போராட்டம் பற்றிய படத்தொகுப்பு திரையிடப்பட்டது.

உண்ணாவிரத நிகழ்வு பிற்பகல் 1.30 மணியளவில் முடிவடைந்தது.

(ஒ-291-204)

## நாய்களுக்கு புதுவித நோய்

ஒட்டுசுட்டான்,ஏப்.20

முல்லை மாவட்டத்தில் வளர்ப்பு நாய்களுக்கு புதுவித நோய் பரவி வருகின்றது.

இந்நோய் ஏற்பட்டதும் நாய்கள் நடுக்கம் ஏற்பட்டு, நடக்க முடியாது திண்டாடுகின்றன. தொடர்ந்து உணவை உண்ண மறுத்து இறந்து போகின்றன.

இந்நோய்க்கென பிரத்தியேகமாக ஊசி மருந்துகள் ஏற்றப்பட்டும் பயனளிக்கவில்லையென அறியப்படுகின்றது.

(ஒ-341-202)

# போதிய நிதி வழங்காததால் வீதியைப் புனரமைப்பதில் தாமதம்

## அதிகார சபை அதிகாரி தெரிவிப்பு

பரந்தன்,ஏப்.20

போதிய நிதி வழங்கப்படாததால் வீதித் திருதத்தப் பணி பாதிப்படைந்துள்ளது. இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரி தெரிவித்தார்.

பரந்தன் - முல்லைத்தீவு பிரதானசாலையில் விசுவமடுச் சந்தைச் சந்தியில் இருந்து சுண்டிக்குளம் செல்லும் வீதி புனரமைக்கப்படாமல் உள்ளது. இந்த வீதியை விரைவில் புனரமைப்பதாக முன்னர் வீதி அபிவிருத்தி அதிகாரசபை வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், இந்த வீதி இது வரை புனரமைக்கப்படவில்லை. இதுகுறித்து கேட்டபோதே அந்த அதிகாரி நிதிப் பிரச்சினை குறித்துத் தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய உற்சவத்திற்குப் பக்தர்கள் சென்றுவர வசதியாக மேற்படி வீதியைப் புனரமைக்கத் திட்டமிடப்பட்டது. இதற்கான கூட்டம் ஒன்று புளியம்பொக்கணை ஆலய முன்றலில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தலைமையில் நடைபெற்றது. அதில் தான் மேற்படி வீதியை ஆலய உற்சவத்திற்கு முன்னர் புனரமைப்பதாக ஒப்புக்கொண்டு வாக்குறுதி வழங்கியிருந்தோம். ஆனால், இதற்கான நிதியை அரச அதிபர் ஒதுக்கித்தரவேண்டும்.

ஆனால், இதற்கான நிதி எமக்கு வழங்கப்படவில்லை. இதனாலேயே வீதி புனரமைப்பு மேற்கொள்ளவில்லை.

அரச அதிபர் வீதிக்கான புனரமைப்பு நிதியினை ஒதுக்கீடுசெய்து வழங்கும்போது தாமதமின்றி பணியை ஆரம்பிக்கமுடியும் - என்றார் அவர்.

(ஒ-352)



இராமநாதபுரம் கலைச்சுடர் சனசமூக நிலையத்தின் புதியகட்டடத் திறப்பு விழா அண்மையில் இடம்பெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜை சனசமூக நிலையத்தினர் வரவேற்கின்றனர். கிளிநொச்சி கோட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் டயானா சமூக சேவைகள நிறுவனத் தலைவர் எஸ்.ஆனந்தரஞ்சன், கலைச்சுடர் சனசமூக நிலையத் தலைவர் சு.இரவீந்திரன் ஆகியோரும் படத்தில் உள்ளனர். *(படம்:வட்டக்கச்சி செய்தியாளர்)*

## கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

# பொதுக்கட்டமைப்பை உருவாக்க இலங்கை அரசுக்கு அழுத்தம் அவசியம்

## முல்லை. அன்னையர் முன்னணி நோர்வேக்கு மகஜர்

புதுக்குடியிருப்பு,ஏப்.20

சுனாமி அனர்த்தத்தால் அழிந்த தமிழர் தாயகப் பிரதேசத்தை புனரமைக்க பொதுக்கட்டமைப்பு அவசியமாகும். இதற்குச் சகல நாடுகளும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

- இவ்வாறு நோர்வேப் பிரதமருக்கு அனுப்பிய மகஜரில் முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணி கேட்டுள்ளது.

அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஆளவோரின் அதிகார வெறி என்னும் நெய் ஊற்றப்பட்டு ஆளப்படுவோரின் உள்ளங்களிலே போராட்டப் பயிர் துளிர்விடத் தொடங்கியது. துளிர்விட்ட போராட்டப் பயிருக்கு அடிக்கடி இனவாத நெய் வார்க்கப்பட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் என்னும் மாபெரும் சக்தியொன்று தமிழினத்திக்கொரு பிரகாசமான விடிவெள்ளியாய்த் தோன்றியது. போராட்ட சக்தியை உருவாக்கியவர்களை இனவெறி பிடித்த ஆட்சியாளர்கள்தான். ஏன் இலங்கையிலே இப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதென்றால் தனது சுயநிர்ணய உரிமைகளின் பாதுகாப்புக்காகவேயல்லாமல் வேறோர் இனத்தை அழிப்பதற்காவோ, அடக்கியாளுவதற்காகவோ அல்லது வஞ்சம் தீர்ப்பதற்காகவோ அல்ல.

ஆரம்பகாலத்திலே எமது தமிழ் அரசியல் தலைவர்களால் அஹிம்சை வழியில் முன்னெடுககப்பட்ட உரிமைப் போராட்டம் அவலப்படுத்தப்பட்டது. எமது இளைஞர்கள், யுவதிகள் ஆயுதப் போராட்டத்திற்குள் வலிந்து தள்ளப்பட்டார்கள். அதிகாரவெறிபிடித்த ஆட்சியாளர்களால் அப்பாவித் தமிழ்மக்கள், குழந்தைகள், வயோதிபர், பெணகள் என்ற பேதமில்லாமல் கொல்லப்பட்டும் சநதேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைக்குட்படுத்தப்பட்ட போதும், மொத்தத்தில் தமிழினமே ஆயுதமேந்திப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது. புலிகளின் பலத்தை நன்கு உணரத்தக்கதான பல சண்டைகளின் பின் அரசு புலிகளுடன் சமாதான ஒப்பந்தம் செய்ய முன்வந்தது.

நீண்டகாலப் போரால் பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களினதும், மக்களினதும் நிலைமைகள் சீர்செய்யப்பட வேண்டியுள்ளதால், யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. ஆனால், எந்த நோக்கத்திற்காகச் சமாதான ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதோ, அந்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. மாறாகக் கடத்தலான பல கொலைகளை அரசு செய்து வருகிறது. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள், பொதுமக்கள், நாட்டுப்பற்றாளர்கள் அரசியல் வேலைகளுக்காக இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் ஒப்பந்தப்படி நிராயுதபாணிகளாகச் செல்லும் போராளிகள் மேல தனது கயமைத்தனத்தைத் தொடர்ந்து காட்டி வருகிறது. சமாதான ஒப்பந்தத்தின் பின்னர் நன்மைகளென்று சொல்வதைவிட நாம் பெற்றது அதிகளவு தீமைகள் தான். இரண்டு மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற போராலும், இயற்கையின் பேரழிவாலும் பாதிக்கப்பட்ட எமது மக்களினதும் பிரதேசத்தினதும் நிலைமைகள் சீர்செய்யப்பட வேண்டும். மறைமுகக் கொலைகளைச செய்துவந்த அரசின் கூலிப்படைகளான இராணுவம், கிழக்கிலே வெளிப்படையாகப் புலிகள் மேல் தாக்குதலைச் செய்துள்ளது. இச் செய்கையானது புலிகளை வலிந்து சண்டைக்கிழுக்கும் முயற்சியென்பது வெளிப்படை. யுத்த நடவடிக்கைகளாலும் இயற்கை அனர்த்தத்தாலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட எமது தாயகப் பிரதேசம், மறுசீரமைக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். அதற்கான பொதுக்கட்டமைப்பொன்று உருவாக்கப்பட வேண்டும். தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளிடம் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்று சகல நாடுகளுமே இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(ஒ-353)

## முன்பள்ளிகளுக்கு தளபாடங்கள்

புதுக்குடியிருப்பு,ஏப்.20

தற்காலிக முகாம்களிலுள்ள முன்பள்ளிகளுக்கு 'வேல்ட்விஷன்' நிறுவனம் தளபாடங்களை வழங்கி வருகின்றது.

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்ட மக்கள் இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வசிக்கின்றார்கள். இந்த முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்களுக்கென 18 முன்பள்ளிகளை 'வேல்ட்விஷன்' நிறுவனம் அமைத்துக்கொடுத்திருந்தது.

இந்த முன்பள்ளிகளுக்கான தளபாடங்களை தற்போது மேற்படி நிறுவனம் வழங்கிவருகின்றது.

இதேவேளை -

முகாம்களில் தங்கியுள்ள மக்களுக்கான வீட்டுத்தளபாடங்களையும் 'வேல்ட்விஷன்' நிறுவனம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

(ஒ-353-202)

## நெல்லை விற்க வாய்ப்பில்லை

ஒட்டுசுட்டான்,ஏப்.20

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் உற்பத்தி செய்யப்பட்ட நெல்லை விற்பனை செய்ய வாய்ப்பின்றி விவசாயிகள் இடர்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளிடம் நெல் கொள்வனவு செய்யப்படவேண்டும் எனவும் -

அதற்கான நடவடிக்கைகளை அரச அதிபர் மேற்கொள்ள வேண்டுமென்றும் -

அப்பகுதி விவசாயிகள் கேட்டுள்ளனர்.

(த-341-203)

கரவெட்டி ஸ்பேர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் 2005 க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு கலைத்துறை மாணவர்களுக்கான

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

இடம் :- யா/விக்கினேஸ்வராக் கல்லூரி
காலம் :- 22.04.2005 வெள்ளிக்கிழமை
நேரம் :- காலை 9.00 மணி

உயர்தரப் பாடப் புள்ளித்திட்டமிடல் பணியில் ஈடுபடும் விரிவுரையாளர்கள் கலந்துகொள்கிறார்கள்.

**தமிழ்**
கலாநிதி சி.சிவலிங்கராசா
தலைவர், தமிழ்த்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

கலாநிதி க. விசாகரூபன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

**இந்து நாகரிகம்**
கலாநிதி மா.வேதநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

**பொருளியல்**
பேராசிரியர் ப.சிவநாதன்
யாழ். பல்கலைக்கழகம்.
பேராசிரியர் வி.நித்தியானந்தன்
யாழ். பல்கலைக்கழகம்.
திரு. ந.பேரின்பநாதன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ். பல்கலைக்கழகம்.

**நாடகமும் அரங்கியலும்**
சிரேஷ்ட விரிவுரையாளர்கள்

ஏற்பாட்டாளர்,
கரவெட்டி ஸ்போர்ஸ் விளையாட்டுக்கழகம் கரவெட்டி.
(44438)(33-29-16-18)



## கண்ணீர்க் காணிக்கை



அமரர் **இலகுப்பிள்ளை ஆறுமுகம்**
(இளைப்பாறிய ஆசிரியர், யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.)
எழுத்தறிவித்தவன் இறைவனாவான்

ஆசிரியத் தொழிலுக்கு இலக்கணமாக ஆசார சீலராக தமது இலலற வாழ்வில் ஆயிரம் பிறைகளைக்கண்டு நிறைவாழ்வு வாழ்ந்து இரண்டு தலைமுறைக்கு நல்லாசானாக வழிநடத்திய பெருமையையும் பெற்று இறையடி சேர்ந்த எமது அன்புக்கும் மதிப்புக்கும் உரிய ஆறுமுக வாத்தியார் அவர்களின் பேரிழப்பினால் துயரில் ஆழ்ந்திருக்கும் பழைய மாணவர்கள் மற்றும் மனைவி, பிள்ளைகள், உறவினர்கள் ஆகியோருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அமரருக்குக் கண்ணீர்க் காணிக்கையை சமர்ப்பிக்கின்றோம். அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

பண்ணாகம். (44437)(29-16-18) - பழைய மாணவர்கள்.



## 9ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 1938 - 03 - 22 இறப்பு 1996 - 04 - 20



பிறப்பு 1975 - 04 - 18 இறப்பு 1996 - 04 - 20

அமரர் சின்னத்தம்பி இராஜரட்ணம்
செல்வி இராஜரட்ணம் தெய்வநாதேவி

ஆண்டுகள் ஒன்பது கடந்து ஓடிவிட்ட போதிலும் உங்கள் அன்பும் பண்பும் நிறைந்த பசுமை நினைவுகளுடன் வாழ்ந்துகொண்டிருக்கும்

ஆராச வீதி,
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. (C/42399)(32-16-18-29)
- குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

### திருமதி யோகராணி முத்துத்தம்பி (கிளி)



புங்குடுதீவு, 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகராணி முத்துத்தம்பி அவர்கள் 14.04.2005 வியாழக்கிழமை அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற முத்துத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவரான சோமசுந்தரம் - உலகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், ஐயாத்தைப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் திருக்குமரன், சுமித்ரா, காலஞ்சென்றவர்களான முரளீதரன், றஜீவ்தா, அருணோதயன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் மோகன், கௌசிகவதனி ஆகியோரின் அன்பு மாமியாரும் சற்குணராணி, சந்திராதேவி, சண்முகசுந்தரம், ஆனந்தசுந்தரம், யோகசுந்தரம், ஞானசுந்தரம், ஜெயராணி, சிவசுந்தரம், புஸ்பலதா, காலஞ்சென்ற தவசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் அருளம்மா, முருகேசு, காலஞ்சென்றவரான தர்மலிங்கம், தணிகாசலம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிதுஷன், மகிஷா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2005) புதன்கிழமை (கனடா நேரப்படி) கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருக்குமரன் (மகன் - கனடா).
இல.122, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (44441)(29-16-18)


### முன்பள்ளி ஆசிரியர் வாண்மை விருத்தி வகுப்பு

வடக்கு - கிழக்கு முன்பள்ளிக் கல்வி நிலையம் நடத்தும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வாண்மை விருத்திப் பயிற்சி வகுப்பு இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சாவகச்சேரி தென்னிந்திய திருச்சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம், 'பேருட்' ஆகிய நிறுவனங்களின் நிதியுதவியுடன் நடத்தப்படவுள்ள இப்பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நான்கு நாள்கள் நடைபெறும் என தென்மராட்சி முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினர் தெரிவித்துள்ளனர். (3-204)

## கிராம அமைப்புகளுக்கு சுழற்சிமுறைக்கடன்

நவாலி,ஏப்.20

வலி.தென்மேற்குப் பிரதேசத்திலுள்ள திறன் வளப்பத் திட்டக் கிராம அமைப்புகளுக்கு சமூக அபிவிருத்திக்கான வலயுமைப்பு நிறுவனம் சுழற்சிமுறையிலான கடன் திட்டமொன்றின் அறிமுகப்படுத்தியுள்ளது.

இதனடிப்படையில் முதற்கட்டமாக ஆனைக்கோட்டை, சுழாவடி மாதர் சங்கத்திற்கும், மானிப்பாய் பாரதி சனசமூக நிலையத்திற்கும் தலா ஐம்பது ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது. (ஒ-100)

## கட்டாக்காலிகளை அடக்க விவசாய சம்மேளனம் தீவிரம்

யாழ்ப்பாணம்,ஏப்.20

நவாலி விவசாய சம்மேளனம் கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்துவதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

நவாலிப் பகுதியில் உள்ள வயல்களில் தற்போது சிறுபோகச் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால், கால்நடைகளை கட்டிவளர்க்குமாறு பல தடவை அறிவிக்கப்பட்டது. ஆனால், கால்நடை வளர்ப்பவர்களில் சிலர் இதனை உதாசீனம் செய்து தமது கால்நடைகளைக் கட்டாக்காலியாக விட்டுள்ளனர்.

இவ்வாறான கால்நடைகளை தற்போது விவசாய சம்மேளனத்தினர் பிடித்துக் கட்டி வைக்கின்றனர்.

இவற்றை மீட்டுச் செல்ல வருவோர் ஆடு ஒன்றுக்கு 500 ரூபாவும் மாடு ஒன்றுக்கு 750 ரூபாவும் அபராதமாகச் செலுத்தியே அவற்றை மீட்டுச் செல்கின்றனர். (ஒ-100)


பிரதேசத்தில் முன்னணி நிறுவனமான எமது நிறுவனத்தின் கடந்த O/L பெறுபேறுகளை அறிந்தீர்களா!? அதிஉயர் சித்திபெற விரையுங்கள்
O/L DAY CLASS
இன்று ஆரம்பம்
**மது கல்வி நிறுவனம்**
இருபாலை, கோப்பாய். (44440)(29-16-18)



**நாய்க்குட்டி விற்பனைக்கு**
எம்மிடம் 45 நாள்கள் வளர்ந்த அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: S.கண்ணன்
பிரசாத் றோட்,
நவாலி கிழக்கு,
மானிப்பாய்.
T.P.: 0777 392371 (44435)(29-16-18)



**வீடு வாடகைக்கு**
நல்லூர் கந்தசாமி கோயில் அருகில் Temple Road இல் 3 அறைகள் உள்ள வீடு உடன் வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0713056757 (44436)(29-16-18)



**ஓட்டோ விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள N.P.J.G. என்னும் ஆங்கில எழுத்துடைய பச்சைநிற ஓட்டோ விற்பனைக்குண்டு.
தொடர்பு: லா.யஸ்ரீன்
(ஆசிரியர்)
31, கதிர்றல் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:5576 அல்லது 7593 (44432)(29-16-18)



## காணாமற்போய்விட்டது

உரும்பிராய் மேற்கு, ஸ்ரீ வைத்தீஸ்வரா சனசமூக நிலைய விளையாட்டுப் போட்டியின் இறுதிநாளான 18.04.2005 திங்கட்கிழமை இரவு பொதுக்கூட்டமும் பரிசளிப்பு விழாவும் நடைபெற்றவேளை GS கோண், 60 W யூனிற், லைன் ட்ரான்சர் என்பன காணமாற்போய்விட்டன.

இவை பற்றிய தகவல் தெரிந்தவர்கள் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

**சிந்துஜன் சவுண்ட்ஸ்** (44442)(29-16-18)
உரிமையாளர் S.T. சிவகுமார், உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.
☎ 0776 675054, 0776 341506



## கெயார் சர்வதேசம் - இலங்கை

care எதிர்காலத்திற்கான சமுதாய முன்னெடுத்தல் திட்டம் (LIFT project)
திட்ட உதவியாளர்
உணவு உற்பத்தி (AAT) ஆள்சேர்ப்பு
(1 வெற்றிடம் வன்னி)

| | |
|---|---|
| பதவி | : திட்ட உதவியாளர் உணவு உற்பத்தி |
| கல்வித் தகைமைகள் | : அடிப்படை விவசாய பட்டப்படிப்பு/விவசாய டிப்ளோமா |
| முன்அனுபவம் | : உணவு உற்பத்தி தொடர்பான துறையில் 3 வருட அனுபவம். |
| சம்பளம் | : தகைமைக்கு அமைவாக கெயாரின் வழமையான நன்மைகளையும் கொண்டிருக்கும். |
| நியமனம் | : புதுப்பிக்கக்கூடிய ஒப்பந்த அடிப்படை |

**பொறுப்புகளும் கடமைகளும்:**

- உணவு உற்பத்தி நடவடிக்கைகளுக்கான நிகழ்ச்சித் திட்டத்தை அபிவிருத்தி செய்தல்.
- நடவடிக்கைகளை அமுல்படுத்தல்.
- கண்காணிப்பு, மீளளிப்பு நடவடிக்கைகளுக்குத் தேவையான தகவல்களைத் திரட்டுதல்.
- வலைப்பின்னல் அடிப்படையிலான தொடர்புகளை ஏற்படுத்தல்.
- திட்டத்திற்கான அறிக்கைகளைத் தயாரித்தலும் அதனை விவரணப்படுத்தலும்.

தகுதியுடையோர் சுயவிவரக் கோவையை உறவினரல்லாத இரு மத்தியஸ்தர் பெயர்களுடன் Care - International, Old Post office, Kandy Raod, Paranthan என்ற முகவரிக்கு 5 நாள்களுக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், பரந்தனில் உள்ள கெயார் அலுவலகங்களில் கையளிக்கலாம். * தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

Project Manager,
Care International,
No. 15, Kandy Road,
Jaffna. (C-42404)(22-16-18-29)



## மரண அறிவித்தல்கள்

### சலமோன் வஸ்தியாம்பிள்ளை



பாஷையூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட சலமோன் வஸ்தியாம்பிள்ளை 18.04.2005 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சலமோன் - மாகிறேற் தம்பதிகளின் அன்பு மகனும் கஸ்பார் - மதலேனா தம்பதிகளின் அன்பு மருகனும் கிளாறம்மாவின் அன்புக் கணவரும் றெஜீஸ் (பிரான்ஸ்), சாந்தி (கனடா), காலஞ்சென்ற ஜீவா மற்றும் வைஜந்தி (கனடா), சுகந்தி (கனடா), மரியகொறற்றி (றோமகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பெர்மலா, குமார், சாந்தி, உதயதாஸ், அழகுதுரை (சுனில்), தோமஸ் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஒலிவியர், சொனியா, சந்தியா, ஒவ்வீலிட், ஜீவாசாயினி, அனோஜன், கெபின், றிஷ்லர், குளோடியா, றுஷான், கொன்சலஸ், றெனிங்ஸ ஆகியோரின் பாசமிகு பேரனும் செபஸ்தியாம்பிள்ளை, அலெக்சாண்டர், அக்னேசம்மா, மரியை, அன்னம்மா, பிரகாசியம்மா, அலெக்சாண்றியா, மரியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் எதிர்வரும் 23.04.2005 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ். புனித மரியன்னை சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கிளாறம்மா (மனைவி),
றெஜீஸ் (மகன்).
42, புது வீதி,
பாஷையூர். (44430)(29-16-18)

### திருமதி வேலுப்பிள்ளை பகவதி

உசன், மிருசுவில் சமாதிமடத்தடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை பகவதி அவர்கள் நேற்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு பொன்னம்மா தம்பதிகளின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற சீனியர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற மார்க்கண்டு மற்றும் மல்லாவி, யோகபுரத்தைச் சேர்ந்த கந்தையா ஆகியோரின் அன்புச் சகோதரியும் தியாகராசா, நடராசா, கோபாலகிருஷ்ணன் காலஞ்சென்ற தர்மராசா மற்றும் சவுந்தரராஜன், பாலகிருஷ்ணன், நாகேஸ்வரி ஆகியோரின் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2005) புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல தகனக்கிரியைக்காக மிருசுவில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
கோபாலகிருஷ்ணன் (மகன்.)
சமாதி மடத்தடி,
உசன்,
மிருசுவில். (44481)(29-16-18)

MARSHA™ Mega Offer
1 வருட உத்தரவாதம்
நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
மாபெரும் கணனி விற்பனை
உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்காகவே
Japan இல் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை
உலகத்தரம் வாய்ந்த Compaq System
உங்கள் வருமானத்திற்கேற்ற
தரமான Computer
உங்கள் தெரிவிற்கேற்ப விலைகள்
34990/= இருந்து 13890/= வரைக்கும்
இச்சலுகை 20-04-2005 தொடக்கம்
05-05-2005 வரை மட்டுமே
MARSHA SYSTEMS
Solution to the People
448, K.K.S. Road, Jaffna. Call me @ 4590817 - 077 7667108

# மரண அறிவித்தல்கள்

## செபமாலை சந்தியாப்பிள்ளை

பலாலியைப் பிறப்பிடமாகவும் தற்போது வெளிச்சவீட்டு ஒழுங்கை, பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட செபமாலை சந்தியாப்பிள்ளை நேற்றுமுன்தினம் (18.04.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி செபமாலை அருளம்மாவின் அன்பு மகனும் விக்ரோரியாப்பிள்ளையின் அன்புக் கணவரும் ஆபிரகாம், காலஞ்சென்ற அந்தோனியாப்பிள்ளை, வைரோனிக்கா, காலஞ்சென்ற அன்னம்மா, மரியநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் செபமாலையம்மா, ஞானமலர், செல்லப்பாக்கியம், செபஸ்ரியன் பெர்னாண்டோ (இத்தாலி), மதுரநாயகம் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் எட்வேட் செல்வராசா, காலஞ்சென்ற இருதயநாதர், அன்ரன் இராசரட்ணம், றெஜினா (இத்தாலி), ஜெனிதா (லண்டன்) ஆகியோரின் மாமனாரும் யேசுதாஸ், மரியதாஸ், வசந்தகுமாரி, றொபின்சன் (லண்டன்), நெல்சன் (லண்டன்), அமலதாஸ் (லண்டன்), இருதயராணி (லண்டன்), சாந்தகுமாரி (2ஆம் வருட கலைப்பீடம்), அருள்தாஸ், அனுஸ்ரலா, லீசா (இத்தாலி), லக்ஷனா (லண்டன்), வதனி, றொபேட்போல், கரோலினி (லண்டன்), ஜெபறட்ணம் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனும் றொக்சிகா, றொக்ஷின், டெப்னி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (20.04.2005) புதன்கிழமை பி.ப. 4 மணிக்குப் புனித தோமையார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, புனித தோமையார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

*வெளிச்சவீட்டு ஒழுங்கை,*
*பருத்தித்துறை.*

தகவல்:
எ.மரியதாஸ்,
(புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி).

(C/42407) (33-14-17-15)

## நவரத்தினம் கனகசுந்தரம்

*(இளைப்பாறிய புகையிரத உத்தியோகத்தர்)*

தெல்லிப்பழை மேற்கு, பன்னாலையைப் பிறப்பிடமாகவும் கொல்லங்கலட்டியை வதிவிடமாகவும் சுழிபுரம் மத்தியில் வசித்தவருமாகிய நவரத்தினம் கனகசுந்தரம் அவர்கள் நேற்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை சிவபதம் எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - முத்துப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியினரின் மருமகனும் பகவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் நடராசா ஆகியோரின் அன்புச் சகோதரனும் புஸ்பராசா, விநாயகமூர்த்தி, துரைசிங்கம் (M.P.C.S. தெல்லிப்பழை), இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.04.2005) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காகத் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பராளாய் றோட்,*
*சுழிபுரம்.*

தகவல்:
பகவதி (மனைவி),
நடராசா (சகோதரன்),
துரைசிங்கம் (மைத்துனர்).

(44450) (33-14-17-15)



## இராமு சிவக்கொழுந்து
## (சின்னராசா)

உடுப்பிட்டி, நாவலடியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், ஆத்திசூடி வீதியை வதிவிடமாகவும் கொண்ட இராமு சிவக்கொழுந்து (சின்னராசா - முன்னாள் கட்டட ஒப்பந்தகாரர்) அவர்கள் நேற்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு அம்முனியின் அன்புப் புதல்வரும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் றஞ்சன், மோகன் (ஜேர்மனி), இராசன் (லண்டன்), இரசிதா, றஜினா, ராஜினி (நோர்வே), காலஞ்சென்ற சுபாசினி மற்றும் கிருசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நேசமலர், ராஜி (ஜேர்மனி), விஜயா (லண்டன்), கோகிலராசா, உதயகுமார் ரூபராஜன் (நோர்வே), சுதர்சன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

*ஆத்திசூடி வீதி,*
*கந்தர்மடம்.*

தகவல்:
பரமேஸ்வரி
(மனைவி)

(44454) (33-14-17-15)

## மாதகல் நுணசையில் தமிழகக் கலைஞரின் கச்சேரி

யாழ்ப்பாணம்,ஏப்.20

மாதகல் நுணசை முருகமூர்த்தி ஆலயத்தில் இடம்பெற்றுவரும் பெருந்திருவிழாவில் எட்டாம் திருவிழாவான இன்று மாலை 6 மணிக்கு தமிழக மற்றும் ஈழக் கலைஞர்களின் சிறப்பு நாதஸ்வரத் தவில் கச்சேரி இடம்பெறவுள்ளது.

தமிழகத்தில் இருந்து வருகைதந்துள்ள கலைமாமணி ரி. ஜி. முத்துக்குமாரசாமி, ஈழக் கலைஞர்களுடன் இணைந்து கச்சேரி நடத்தவுள்ளார்.

நாதஸ்வர இசையருவி வி.கே.பஞ்சமூர்த்தி, இன்குழல்வேந்தன் எம்.பி.நாகேந்திரன், லய ஞான பாலதீரன் கே.பி.குமரேஸ் ஆகியோரும் தவில் வித்துவான்களான ரி.உதயசங்கர், ஆர்.எஸ். சுதாகரன் ஆகியோரும் இணைந்து இக்கச்சேரியை நடத்துவர். (3-202)

வேலையாள்கள் தேவை
1) ரொட்டி மேக்கர்
2) ரீ மேக்கர்
3) பரிமாறுபவர்
4) உதவியாளர்கள்
5) சமையற்காரர்கள்
உடன் தேவை
தொடர்பு:- கிரி ஹோட்டல்
176, கஸ்தூரியார் வீதி
(ராஜா தியேட்டர் முன்பாக), யாழ்ப்பாணம்.
(44446) (33-14-17-15)

## கண்ணீர் அஞ்சலி



### திருமதி பாறுப்பிள்ளை சின்னத்தம்பி

எமது பாடசாலை ஆசிரியை செல்வி ராஜலோஜினி சின்னத்தம்பி அவர்களின் பாசமிகு தாயார் திருமதி பாறுப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் நேற்று 19.04.2005 இறைவனடி சேர்ந்தமையையிட்டு, எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரி ஒன்றியம்
யா/கச்சாய் அ.த.க. பாடசாலை.
கொடிகாமம்.

(C/42408) (33-14-17-15)

நாதன்ஸ் சினிமா
ஆஸ்பத்திரி முன்பாக யாழ்ப்பாணம்.
தாவழமைந்தன் ஜெய் ஆகாஷ், பிரணதி, நாசர், தாமு, வையாபுரி நடித்த
குருதேவா
கா.நேரம் 10.30, 2.30
6.30, 9.30 விஜய், ரீமாசென் நடித்த
பகவதி
21.04.05 முதல்
தகதிமிதா



ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு கமலஹாசன், மனீஷா கொய்ராலா, நாசர் நடித்த
மும்பை X பிரஸ்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.



நிறைஞ்சனாஸ் சங்கானை
பிரசன்னா, அமு, வடிவேல் நடித்த
காதல் டாட் கொம்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
21.04.05 முதல் இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு ஜெய் ஆகாஷ், ராஜ்கிரண், செந்தில் நடித்த
செவ்வேல்
கா.நே.: 11.00, 2.45, 6.30, 9.30 (பு.நே)

மனோகரா யாழ்ப்பாணம்
விஜய், ஹரினி, வடிவேல் நடித்த
சச்சின்
காட்சி நேரம்:
10.30 a.m., 2.30.p.m.,6.30p.m.,9.30 p.m.



நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
ரஜனி, நயன்தாரா, பிரபு, ஜோதிகா, வடிவேல், நாசர்
நடித்த
சந்திரமுகி
காட்சிகள 11.00. 3.0 7.00 (பு.நே)
விசேட காட்சிகள: 10.00. 1.00. (பு.நே.)



## யாழ். டிறிபேர்க் கல்லூரி. பழைய மாணவர் சங்கத்தின் வாழ்த்துக்கள்



வணக்கத்துக்குரிய

### ஜெபநேசன் அடிகளார்

பேராயராக நற்பணிபுரிந்து நல்லாயராக வழிகாட்டியமைக்காகவும், இறையியல் கல்லூரி முதல்வராகப் பதவியேற்றமைக்காகவும் எமது மனமுவந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் சமர்ப்பிப்பதுடன், இறையாசியையும் வேண்டுகிறோம்.

*சாவகச்சேரி.*

செயலர்,
*பழைய மாணவர் சங்கம், யாழ். டிறிபேர்க் கல்லூரி.*

(C/42405) (33-14-17-15)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை ஆசிரியை
செல்வி ச.சுந்தரேஸ்வரி அவர்களின் அன்புத் தாயார்

### சண்முகநாதன் யோகாம்பிகை

அவர்கள் காலமானதை அறிந்து மிகவும் மனம் வருந்துகின்றோம். பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்.

*யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை,*
*யாழ்ப்பாணம்.*

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
பழைய மாணவர் சங்கம்.

(C/42406) (33-14-17-15)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அண்ணாமலை அழகம்மா



இணுவில் மேற்கைச் சேர்ந்த திருமதி அண்ணாமலை அழகம்மா நேற்றுமுன்தினம் (18.04.2005) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*
*0777 163095*

தகவல்:
கணவர், பிள்ளைகள்.

(44444) (33-14-17-15)

## சின்னத்தம்பி பொன்னம்பலம்

3ஆம் வட்டாரம், அனலைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் அவர்கள் நேற்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி பார்வதி ஆகியோரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இலட்சுமி அம்மாவின் பாசமிகு கணவரும் ஸ்ரீகுமார், சந்திரவதனி (கனடா), மனோரஞ்சினி, ஜெயவதனி, ஸ்ரீஸ்கந்தகுமார் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2005) புதன்கிழமை பி.ப. 4.00 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15/4, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
ஸ்ரீகுமார் (மகன்).

(44443) (33-14-17-15)

## திருமதி
## அப்புத்துரை அன்னபுவனேஸ்வரி



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் மாதகலை வதிவிடமாகவும் தற்போது கூளாவடி, ஆனைக்கோட்டையைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி அப்புத்துரை அன்னபுவனேஸ்வரி அவர்கள் நேற்று (19.04.2005) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்புத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைரட்ணம், சந்திரபொஸ் மற்றும் குணபாலசிங்கம் (லண்டன்), சைனம்மான், றஞ்சிதமலர், சந்திரகாந்தா, சந்திரகலா, செல்வம், இன்பம் (இந்தியா) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.04.2005) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி.ப. 4 மணிக்குக் காக்கைதீவு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கூளாவடி,*
*ஆனைக்கோட்டை.*

தகவல்:
அ.ஜெயக்குமார் (மருமகன்)

(44448) (33-14-17-15)

## சபாபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை

*(முன்னாள் அரச கணக்காளர் - கல்வித் திணைக்களம், சுகாதாரத்திணைக்களம்)*

காரைநகர், எண்ணாங்குப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட சபாபதிப்பிள்ளை வேலாயுதபிள்ளை நேற்றுமுன்தினம் (18.04.2005) திங்கட்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை சிவக்கொழுந்து தம்பதியினரின் அன்பு மகனும் கனகரட்ணம் - சிவகலை (கரம்பொன்) தம்பதியினரின் அன்பு மருமகனும் சிவசோதியின் அன்புக் கணவரும் சிலோஜனா, சிவகௌரி, சிவறுபி, கேமமாலினி, பாலகுமார், கல்யாணி ஆகியோரின் அன்புத் தந்தையும் அருள்மொழி, சுகுணகுமார், சிவனேஸ்வரன், தயானந்தன், தனலட்சுமி, விமலானந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற வரதராஜா (ஒப்பிலா), இரத்தினசபாபதி, செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் யவனாம்பிகை, யோகேஸ்வரி திருநீலகண்டன், இரட்னேஸ்வரி, சிவானந்தவல்லி, பரஞ்சோதி, சச்சிதானந்தன், சதானந்தன், நேசமலர், ரதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் திங்கட்கிழமை கனடாவில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
*(கனடா),*
*T.P. 0014164452123*

இரத்தினசபாபதி
செல்வராணி.

தகவல்:
சகோதரர்கள்.
*இல.159, கன்னாதிட்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(44447) (33-14-17-15)

# மணற்காட்டு மக்களுடன் கூட்டம்

சுனாமியால் பாதிக்கப்பட்ட மணற்காட்டுப் பகுதி மீள்குடியமர்வு தொடர்பாக அப்பிரதேச மக்களுடனான கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்குக் குடத்தனைப் பொதுமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு கடற்கரையில் இருந்து 300 மீற்றருக்கு அப்பால் வீடுகள் அமைக்க அரசு முடிவுசெய்துள்ளது.

இதுதொடர்பாக அப்பிரதேச மக்களின் கருத்துக்களை அறிவதற்காக இக்கூட்டம் ஏற்பாடாகியுள்ளது. இந்தக் கூட்டத்தில் அரச அதிகாரிகள், தமிழீழ நிர்வாகத்தினர் உட்படப் பலர் கலந்து கொள்வர். (3-203-204)

## சீரணியில் புதியதேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 20

சண்டிலிப்பாய் சீரணி நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் சுப்பிரமணியப் பெருமானுக்கு அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. (3-203)

## தனியார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் தொடர்பாக இணையம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 16.04.2005 சனியன்று பி.ப 1.00 மணியளவில் இருபாலைச் சந்தியில் சிற்றூர்தி - மோட்டார் சைக்கிள் விபத்து எதிர்பாராது நடந்த ஒன்று. கோண்டாவில் வீதியூடாக டச்சு றோட்டை நோக்கி மூவருடன் சென்ற மோட்டார் சைக்கிள் இருபாலைச் சந்தியைக் கடக்க முயன்றவேளை முகமாலையிலிருந்து கோப்பாயூடாக யாழ். நோக்கிச் சேன்ற பயணிகள் சிற்றூர்தியுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் ஒருவர் மரணித்ததும் மூவர் படுகாயங்களுக்குள்ளானதும் மிக விசனத்திற்குரியது. இச்சம்பவத்தில் எதிர்பாராது மரணத்தைத் தழுவிக்கொண்ட தேவராசா உதயகுமாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து விபத்து நடந்த இடத்தில் சட்டத்தை மதித்து விசாரணைக்கு ஏற்பாக, ஸ்தலத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சிற்றூர்தியானது, விபத்தில் சம்பந்தப்படாத சில விஷமிகளால் எரியூட்டி அழிக்கப்பட்டது. இச் செயலானது எமக்கு ஆழ்ந்த வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இச் சம்பவத்தை நாம் வன்மையாகக் கண்டிப்பதுடன், இம் மூன்றாம் தரப்பு வன்முறைக் குற்றவாளிகளைச் சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவதன் மூலம், மேலும் இதுபோன்ற அசாதாரண சூழ்நிலைகளைத் தோற்றுவித்து அமைதியையும் சமாதானத்தையும் விரும்பும் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு அச்சுறுத்தலாக விளங்கும் அராஜகச் சக்திகள் களையப்படவேண்டும்.

இதற்கு அரச இயந்திரமோ, நலஞ்சார் அமைப்புக்களோ தம் ஒத்துழைப்புக்களை வழங்கி எமது அத்தியாவசிய சேவைகள் தொடர ஆவன செய்யவேண்டும். எமது இந்நிலைப்பாட்டை வலியுறுத்தி யாழ். மாவட்டத் தனியார் சிற்றூர்தி உரிமையாளர் சங்கங்களின் இணைய நிர்வாகத்திற்குட்பட்ட சிற்றூர்திகள் இன்று புதன்கிழமை முழுநாளும் தம் சேவைகளை நிறுத்தி வைத்துள்ளது. இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கு மக்களிடம் மன்னிக்க வேண்டி எமது நிலையைத் தெளிவுபடுத்தியுள்ளோம் என்று உள்ளது. (3)

## கிழக்குக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கல்முனைக்குடி அல் - பக்றியா வித்தியாலயத்தின் இடிபாடுகளைப் பார்வையிட்ட குழுவினர், அங்கு எவ்வாறான மீள்கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளலாம் என இப் பிரதேசத்தில் மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள 'கோல்' மற்றும் 'யூ.எஸ்.எயிட்' அமைப்பினருடனும், ஆசிரியர்களுடனும் கலந்துரையாடினர். அங்கு நடைபெற்ற வைபவம் ஒன்றில் ஆழிப்பேரலை அனர்த்தத் தால் பாதிக்கப்பட்ட மேசன், தச்சுத் தொழிலாளர்களுக்கான உபகரணங்களை கிறிஸ்ரினா ரொக்கா வழங்கினார். இப் பொருள்களின் பெறுமதி சுமார் 7 லட்சம் ரூபா எனக் கூறப்பட்டது. (க-3)

## புதிய பாப்பரசர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவற்றையெல்லாம் விட உங்களுடைய பிரார்த்தனைகளால் நான் என்மீது நம்பிக்கை கொள்கிறேன்" - என்றும் அவர் தெரிவித்தார்.

அவர் பேசி முடித்ததும்அங்கே கூடியிருந்த கூட்டம் 'பெனடிக்ற் பெனடிக்ற் என்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தது.

பாப்பரசர் இரண்டாம் அருளப்பர் சின்னப்பர் இறைவனுக்குள் நித்திய இளைப்பாற்றுகை அடைந்ததைத் தொடர்ந்து புதிய பாப்பரசரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் வத்திக்கானில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது.

முதல்நாள் நடைபெற்ற வாக்கெடுப்பில் புதிய பாப்பரசர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. அதனை அறிவிக்கும் விதமாக கிங்ஸ்டைன் தேவாலயத்தின் புகைபோக்கியில் கறுப்புப் புகை பரவ விடப்பட்டது.

நேற்றுக்காலையில் நடந்த இரு வாக்கெடுப்புக்களிலும் கூட புதியவர் ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், நேற்றும் கரும் புகை வெளியேற்றப்பட்டது.

எனினும், நேற்று மாலையில் புதிய பாப்ப ரசர் கர்தினால்களின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்த வாக்கெடுப்பில் 115 கர்தினால்கள் கலந்து கொண்டனர்.

கடந்த 11ஆம் நூற்றாண்டின் பின்னர் ஜேர்மன் கர்தினால் ஒருவர் பாப்பரசராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பது இதுவே முதற் றடவையாகும். (க-3)

## சொல்ஹெய்ம் மட்டக்களப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டத் தளபதி ரமணன் ஆகியோரும் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும் சொல்ஹெய்ம் சந்தித்துப் பேசினார். மாவட்டத் தலைமைக் கண்காணிப்பாளர் பி.ஆர்.ஸ்ரீன் அங்குள்ள தற்போதைய நிலைமையை விளக்கினார்.

மாலையில் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் பள்ளிவாசல்களின் சம்மேளனப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடினார் சொல்ஹெய்ம்.

குறிப்பாக நேற்றைய சந்திப்புக்களில் கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாகத் தொடரும் ஆட்கொலைகளுக்கான காரணங்கள் பற்றியும் அவற்றைத் தடுப்பதற்கான வழிவகைகள் பற்றியும் ஆழிப்பேரலையின் பின்னரான மீள்கட்டுமானம் மற்றும் நிவாரணப் பணிகள் பற்றியும் முக்கிய கவனம் செலுத்தப்பட்டன.

"ஆழிப்பேரலையின் பின்னரான மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிகள் பற்றியே நாம் பேசினோம். அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் தமிழ், முஸ்லிம் மக்கள் விரக்தியடைந்து போயுள்ளார்கள். இன்று அகதிகளாகி இருக்கும் சிலர் தொடரும் இந்த நிலை காரணமாகத் தாம் தற்கொலை செய்துகொள்ளப் போகிறார்கள் என்று கூறுகிறார்கள்." - என்றார் கேணல் பானு.

சொல்ஹெய்மைச் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

"எங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ள துணைப் படைகளுக்கு உறுதுணையாக இருந்து போர்நிறுத்த உடன்படிக்கையை மீறுவதை இராணுவம் நிறுத்த வேண்டும் என்று நாங்கள் நோர்வே நாட்டினரிடம் வலியுறுத்தினோம்." - என்றும் பானு கூறினார்.

சந்திப்புக் குறித்துக் கருத்துத் தெரிவித்த சொல்ஹெய்ம் கூறுகையில் -

"மீள்கட்டமைப்புக்கான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து நாம் விளக்கினோம். பானுவின் ஆலோசனைகளையும் கேட்டுக்கொண்டோம். இந்தப் பிரதேசம் பற்றி அவர் அதிகம் தெரிந்து வைத் திருக்கின்றார்." - என்றார்.

"பானுவிடம் நாம் தெளிவாகக் கேட்டுக் கொண்டுள்ளோம். பதற்றத்தைத் தணிப்பதற்குச் சாத்தியமான அனைத்தையும் செய்யுமாறு. ஒவ்வொரு கொலையும் அதற்கு மேலதிகமான கொலைகளுக்கே வழிவகுக்கும். அனைத்துத் தாக்குதல்களும் - அவை புலிகளால் மேற்கொள்ளப் பட்டாலும் சரி அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டாலும் சரி - கட்டாயம் நிறுத்தப்படவேண்டும்." - என்று சொல்ஹெய்ம் மேலும் தெரிவித்தார்.

இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் துணைப் படையினரின் முகாம்கள் இருப்பதான பிரச்சினையை தாங்கள் கொழும்புக்கு எடுத்துச் செல்லவுள்ளனர் என்றும் சொல்ஹெய்ம் தெரிவித்தார். (க-3)

## பொதுக்கட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தேச பொதுக்கட்டமைப்பு விடயத்தில் அரசின் முதன்மைப் பங்காளிகளான ஜே.வி.பியினர் எதிர்ப்புத் தெரிவித்து இடைஞ்சல்படுத்தி வருவதை அடுத்தே இந்தச் சந்திப்பை நடத்த கிறிஸ்ரினா ரொக்கா தீர்மானித்தார் எனக் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக வட்டாரங்கள் தெரிவித்தன.

உத்தேசபொதுக்கட்டமைப்பு இணக்கத்துக்கு அரசும் புலிகளும் வருவதற்கு இடைஞ்சல் விளைவிக்க வேண்டாம் என்ற அழுத்தத்தை இந்தச் சந்திப்பின்போது ஜே.வி.பியினருக்குக் கிறிஸ்ரினா ரொக்கா வழங்குவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்த உதவுவது கிறிஸ்ரினா ரொக்காவின் இலங்கை விஜயத்தின் நோக்கங்களில் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, கிறிஸ்ரினா ரொக்காவிற்கும், நோர்வே சமாதானத் தூதுவர் எரிக் ஹெய்மிற்குமிடையில் சந்திப்பொன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெற ஏற்பாடாகியிருப்பதாகக் கொழும்பிலுள்ள நோர்வேத் தூதரகத்தின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

அரசிற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்குமிடையில் செய்துகொள்ளப்படவிருக்கும் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் இருவரும் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்துகொள்வார்களென தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம் கிறிஸ்ரினா ரொக்கா இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

இன்று காலை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகிய இருவரும் இந்தப் பேச்சுகளில் கலந்துகொள்ளவுள்ளனர் எனக் கூட்டமைப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3)


BY K. கிரிதரன்

புவியியல்

AVL 2005 2006 2007

| | |
|---|---|
| D.C.C.A | - யாழ்ப்பாணம் |
| நியூ றோயல் | - சங்கத்தானை |
| கிறிஸ்ரல் சென்ரர் | - நெல்லியடி |
| நியூ BECON | - ஆவரங்கால் |
| அறிவகம் | - அச்சுவேலி |
| ஐடியல் | - நீர்வேலி |

வகுப்புகள் நடைபெறுகின்றன.

விவரங்கள் மேற்குறிப்பிட்ட நிறுவனங்களில்...

(44408)

கற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்

UNIT

விபரம் 6ஆம் பக்கம் பார்க்கவும்

ENGLISH CLASSES

ஆண்டு 9,10,11 மாணவர்களிற்கான

ENGLISH LANGUAGE

ENGLISH LITERATURE

பிரிவு V க்கான

23.04.2005

ஆசிரியர் S.தெய்வதவபாலன்

மேலதிக விவரங்களுக்கு

JAFFNA TECHNICAL INSTITUTE

இல. 07, பலாலி வீதி யாழ்ப்பாணம்.

T.P:- 021-222 3335, 0773 086716

புதிய பிரிவுகள் ஆரம்பம் 23,25.04.05

Softview Computer College

(Authorised Councelling Centre for Queen's Park College, London. A joint Venture with Arom Menporulagam Ltd., India.)

43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna, Sri Lanka.

T.P: 021 2225170, 0777846811

| COURSE | DURATION | FEES |
|---|---|---|
| Diploma in Microsoft Office | 5 Months | 1750/= |
| Diploma in Desktop Publishing | 4 Months | 2750/= |
| Diploma in Computer Programming | 8 Months | 5600/= |
| Diploma in Hardware Engineering | 4-5 Months | 3600/= |
| Diploma in Network Engineering | 4 Months | 5700/= |
| Diploma in Visual Basic | 4 Months | 2750/= |
| Diploma in Computer Science | 4 Months | 2750/= |
| Diploma in AutoCAD | 4 Months | 2750/= |
| Diploma in C++ | 4 Months | 2750/= |
| Diploma in Internet E-Mail | 2 Months | 750/= |

இப்பிரிவிற்கு மட்டும் பதிவுக்கட்டணம் அறவிடப்படமாட்டாது.

COMPUTER EXPRESS

Institute of Information Technology

இல. 15, சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம். (off Stanly Rd.)

0777 222422 , 0773 151647

DIPLOMA IN COMPUTERIZED ACCOUNTING

QUICK BOOKS PRO+ACCPAC+MYOB

ஆரம்பம்:-23/04/2005,24/04/2005

Batch I :-10.30am

Batch II:-04.00pm

Batch III:-06.30pm

காலம்:- 04மாதம்

அலுவலர்களிற்கான மாலைநேர விசேட வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

(சி-42335)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி பாறுப்பிள்ளை

கச்சாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாறுப்பிள்ளை 19 ஆம் திகதி காலமானார்.

அனனார் சின்னத்தம்பியின் மனைவியும் காலஞ்சென்ற ராஜமலர், ரகுபதி (லண்டன்), சிவபாலன், சிறீகுணராஜா (இத்தாலி), ராஜபூபதி, ராஜேஸ்வரி (ஹற்றன்), ஸ்ரீதரன், ஸ்ரீகுமார், ராஜலோஜினி (கச்சாய் அ.த.க.பாடசாலை ஆசிரியர்) ஆகியோரின் தாயாரும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் இன்று (20.04.2005) மாலை 3 மணிக்கு கச்சாயில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

(சி-42409)(38-14)

தகவல்:
சின்னத்தம்பி
(குஞ்சையா).

EXPOAIR

your friend in the skies...

எக்ஸ்போ எயார்

வானத்தில் உங்கள் நண்பன்...

தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை

ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்

கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1

யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999

E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.04.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.